பதிவு நெம்பர் 2041

KUDI ARASU.

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா

குடி அரசு

வருட சந்தா முன் பணம் ...	ரூ 3—0
6 மாத சந்தா ,, ...	ரூ 1—12
வெளி நாட்டிற்கு ,, ...	ரூ 4—0

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12.
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு அ. 3
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்.

மலர் 3 | ஈரோடு, பிரபவ ஞு மாசி மீ 7உ. (19—2—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 43.

இனாம்! இனாம்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனாம்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேல்சொல்லியபடி பௌண்டன் பேனா இனாமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5 வருஷம் உத்தரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

10-வருஷ உத்தரவாதம்.



விலை ரூ. 20 முதல் ரூ. 100 வரை

மிக்க உயர்தரமானது. நீடித்து உழைக்கக்கூடிய ஸ்வர சுத்தம், சாரணை, கமக்கம், இனிமையுள்ள நாதம் பொருந்திய ஆர்மோனியங்களும், மற்றுமுள்ள சங்கீதக் கருவிகளும் உத்தரவாதத்துடன் குறைந்த விலைக்கு நம்மிடம் கிடைக்கும். முழு விவரங்களடங்கிய கேட்லாக் வேண்டுமானால் அனுப்பப்படும்.

பழனி கம்பெனி, கல்கத்தா ஆர்மோனியம் ஏஜென்சி 411, தங்கசாலை வீதி, சென்னை.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனாவும் இனாம்.



நூதனமாக வாவமைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்,
3, பார்க் டவுன், (தா) சென்னை.

டேபில் டைம்பீஸ் இனாம்!!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் மேல் வைக்கக்கூடிய அழகான டேபில் டைம் பீஸ் இனாமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். மூன்றுகளின் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட். ஜி. டி. மதராஸ்.

முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ. 7
22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்

மேற்கண்டபடி எந்த ஷேப் வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொரு கடியாரத்திற்கும் ரோல்டு கோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனாமாய்ச் சேர்த்து அனுப்பப்படும். 5 வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras

Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு 3½"x 2½" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லா சாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்.

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பார்க்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.

தி பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனாம்! இனாம்!!

சாரவிவேகி சதானந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனானான்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனாமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சாது இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

கணித சோதிடம்

பரித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் திட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆரூடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி நாங்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று மலைவு அறநிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்படையாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக நகலையாவது ஜனன காலத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

காலத்திற்கேற்ற நூல்! காதலர்கள் தேடும் நூல்!!

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்

அழகான பயிண்டு. சுமார் 400-பக்கங்கள் கொண்ட பெரிய புத்தகம் நேர்த்தியான அச்சு.

நல்ல கிளேஸ் காகிதத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. அநேக அழகிய ஆப்டோன் படங்களுடன் கூடியது.

இந்நூலில் அடங்கியுள்ள விஷயங்கள்.

1. துறவிகளின் கதி யென்ன?
2. இல்வாழ்க்கை ஏன் சிறந்தது?
3. இல்லறத்திலிருந்து மோக்ஷமடைவதெப்படி?
4. இல்வாழ்க்கையின் இரகசியங்களை யறியாதார் படும்பாடு.
5. பெண்ணின் பெருமை, பெண்கல்வி.
6. நாணம் எப்படி உண்டாயிற்று?
7. உடைக்கும் நாணத்திற்கும் சம்பந்தம்.
8. நாம் ஏன் உடைதரிக்கவேண்டும்?
9. நிர்வாணமாயிருப்பதின் தத்துவமென்ன?
10. இக்காலத்தில் எங்கெங்கே நிர்வாணமாயிருக்கின்றனர்?
11. ஒவ்வொரு தேசத்திலும் கலியாணங்கள் எப்படி நடைபெறுகின்றன? உண்மையான கலியாணம் எது?
12. காதல் என்றால் என்ன? காதலுக்கும் காமத்திற்குமுள்ள வித்தியாசம்.
13. சாந்தி முகூர்த்தத்தில் எப்படி வெற்றியடைவது?
14. மனைவிகளைக் கணவன்மார் எப்படி வசியப்படுத்துவது?
15. கணவன்மாரை மனைவிகள் எப்படி வசியப்படுத்துவது?
16. தமக்குச்சரியான ஸ்திரீ அல்லது புருஷன் என்று எப்படிக் கண்டுகொள்வது?
17. ஸ்திரீகளுக்கு எப்பெப்பொழுது காமம் உண்டாகிறது?
18. அவர்களிடத்தில் அமிர்தநிலை எங்கெங்கே இருக்கிறது? அதை எப்படி நிலை பெயர்க்கிறது?
19. பலஜாதி ஸ்திரீகளின் லட்சணங்கள்.
20. சங்கமம் செய்யவேண்டிய நாளும் நாழிகையும்.
21. ருதுவாவதின் மர்மம் அல்லது மாதவிடாய் என்பதன் தத்துவமென்ன?
22. பெண்களிடத்தில் பிணக்கு உண்டாவதற்கு காரணம். இதைப்போக்கடிக்கச் சுலபமான வழிகள்.
23. மனம் போல் மக்களைப் பெறும் அரிய உபாயங்கள்.
24. கருவிலிருப்பது ஆணா பெண்ணா என்று எப்படி அறிந்து கொள்வது?
25. கர்ப்ப காலத்தில் ஸ்திரீகள் நடந்து கொள்ளவேண்டிய முறைகள்.
26. கர்ப்பகாலத்தில் ஒவ்வொரு மாதத்திலும் உண்டாகக்கூடிய வியாதிகள்.
27. அவைகளை போக்கடிக்கும் உபாயங்கள்.
28. முதல் மாதத்திலிருந்து கடைசிமாதம் வரையில் சிசுவின் வளர்ச்சித் தத்துவம்.
29. ஸ்திரீகள் மலடாவதுண்டா? உண்டானால் அதற்குக் காரணம்? அதைப்போக்கடிக்கும் விவரம்.
30. புருஷர்கள் மலடாவதுண்டா? எங்கு பார்த்தாலும் ஏன் ஆண் மலடு விசேஷமாயிருக்கிறது? இதைப் போக்கிக்கொள்ளுவதெப்படி?
31. அதிகமாகக் குழந்தைகள் பிறப்பதினால் நாட்டுக்கு நன்மையா, தீமையா? தீமையாயின் அதைத்தடுக்க உபாயம் என்ன? ஸ்திரீ, புருஷர்கள் சேர்க்கையைத் தவிர்க்காமல் குழந்தைகள் பெறுவதை மட்டும் தடுக்க முடியுமா? அமெரிக்கா, பிரான்ஸ், இங்கிலாந்து, ஜப்பான், சைனா, துருக்கி முதலிய இடங்களில் குழந்தை பெறும் விஷயத்தில் ஜனங்கள் என்னென்ன அநியாயங்கள் செய்கின்றனர்? சிசு கொலை அநியாயம்.
32. ஒருவன் எத்தனை மாதரை மணம் புரிந்து கொள்ளலாம்? பல மாதரிடம் சேர்ந்திருப்பவன் கவனிக்கவேண்டிய விஷயங்கள் என்ன? அவன் தனது சரீரத்தை எப்படிக் காப்பாற்றிக்கொள்வது? அவனுடைய மனைவிகள் ஒருவருடனொருவர் பொறாமை கொள்ளாமலிருக்க வேண்டுமானால் அவன் எப்படி சாமார்த்தியமாய் நடந்து கொள்ளவேண்டும்.
33. தாசிகள் நாட்டிலே இருப்பதால் நன்மையா, தீமையா? தாசிகள் வீடுபோகும் நபர்களுக்கு நாம் சொல்லக்கூடிய சில வார்த்தைகள்.

நண்பர்களே! இதுகாறும் சொல்லிவந்த விஷயங்களல்லாமல் இன்னும் எத்தனையோ நூற்றுக்கணக்கான பொன்போன்ற இரகசிய விஷயங்களை இந்நூல் தன்னகத்தே கொண்டிருக்கிறது.

ஆகையால் நண்பர்களுக்கு நமது வேண்டுகோள் என்னவென்றால் இவ்விளம்பரத்தைக் காணுறும் ஒவ்வொருவரும் "இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்னும் எமது புதிய நூலின் ஒரு பிரதியை வாங்குவாராக. குடும்பஸ்தர் ஒவ்வொருவர் வீட்டிலும் இதன் பிரதியொன்று இருந்தே தீரவேண்டும். உம்முடைய நண்பர்களிடத்தும் இந்நூலைப் பரப்பி நாட்டிற்கு நன்மைசெய்யுங்கள். இந்நூல் லாபங்கருதி அச்சிட்ட புத்தகமல்ல.

"இல்வாழ்க்கையின் இரகசியங்கள்" என்ற புத்தகம் ஒவ்வொரு ஊரிலுமுள்ள புத்தக வியாபாரியிடமும் கிடைக்கும் அல்லது எங்கள் விலாசத்துக்கு உடனே எழுதவும்.

விலை ரூபாய் 2—0—0.

வாஸன் புஸ்தகசாலை,

தபாற் பெட்டி நெ. 119

97. அன்னுபிள்ளை தெரு, ஜி. டி. மதரூஸ்.

ஏழை யார்? பிள்ளையார் கோவில் பூசாரி.

கைவல்லிய சாமியார் எழுதுவது.

ஒரு தேசம் மற்றொரு தேசத்தைக் கைப்பற்றி அதன் மனுஷ்ய உரிமைகளைப் பறித்துக் கொண்டால் எந்த விதத்தினாலும் இழந்துபோன உரிமைகளைக் கைப்பற்ற அந்த ஜனங்கள் பல முயற்சிகள் செய்வார்கள். செய்து வெற்றியுமடைந்திருக்கிறார்கள். அது போல நம் நாட்டை அபகரித்துக் கொண்ட ஆங்கிலேயரிடமிருந்து நம் நாட்டை எந்தவித முயற்சியினாலும் கைப்பற்றவேண்டியது நமது கடமை. போர் செய்யுமாற்றல் நமக்கில்லாததினால் பகிஷ்காரத்துறைகளிலிறங்கி அதை முடித்து அதனால் அவர்கட்குத் தொந்தரவும் நமக்கு அந்த அரசாட்சியிலுள்ள வெறுப்பையும் காட்டினால் பஞ்சாயத்தில் நமது காரியங்களை அனுகூலப்படுத்திக் கொள்ளலாம் என்கிறதைக் காங்கிரஸ் தீர்மானம் பண்ணி சன சமூகங்களுக்கு அதை நடத்திவைக்க உத்திரவிடுகிறது.

காங்கிரஸ் என்பது தேவனாகவிருந்து உத்திரவு போடுவதாயிருந்தால் தேவனின் அனுபோகம் நம் கண்ணில்படாது. அவர்கள் அசரீர வாக்கை அப்படியே நம்பவேண்டும். அதல்ல காங்கிரஸ். நம் தேசத்து மேதாவிகள் கூடித் தீர்மானம் பண்ணின தீர்மானமே காங்கிரஸ். அந்த மேதாவிகள் ஆலோசனையுடன் தீர்மானம் பண்ணினதாகவேயிருக்கட்டும். அதை அப்படியே ஒப்புக்கொள்ளவேண்டுமென்பது ஞாயமே. அப்படியே நடக்கவேண்டும். அதற்காகப் பிராணனையும் கொடுக்கவேண்டி வந்தாலும் கொடுக்க வேண்டும். அதைப்பற்றின விவகாரமில்லை. நம் சென்னை மேதாவிகளும் அவர்கள் ஆலோசனையும் சுயநலமும், படித்தவர்களும் காங்கிரஸ்காரர்களும் பகிஷ்காரத்திற்கு மறைந்து கொண்டு படியாதவர்களையும் ஏழைகளையும் ஏவி விட்டுப் பிரசாரமும் காங்கிரஸ் பணத்தைக் கொடுத்துப் பலகாலிகளைச் சேர்க்கப்பிரயத்தனமும் செய்து வருவதிலேயேவிவகாரமிருக்கிறது. பலவானுடன் நம்மைத் தோழமைப்படுத்தும் சக்தி வாய் வார்த்தையாலும், தான் ஒளிந்து மற்றவர்களைக் காட்டிக்கொடுப்பதாலும், காங்கிரஸ் வருடம் ஒரு தீர்மானம் பண்ணுவதாலும், அதை முடிக்காமல்மறு வருடம் வேறொரு தீர்மானம் பண்ணுவதாலும் தீர்மானத்திற்கு எதிரிடையாகவிருந்து அதை அலட்சியப்படுத்துகிறவர்களே மறு காங்கிரசுக்கு தலைவர்களாகவும் கமிட்டி மெம்பர்களாகவுமிருப்பதாலும் அந்தச் சக்தியைப் பெற முடியுமா? வலிமையுடையதற்கும் வலிமையற்றதற்குமுள்ள தோழமைஉண்மையாகாது. ஆங்கிலேயனுடைய வலிமை நமக்கில்லை என்பது உண்மைதானே. வலிமை இல்லாவிட்டால் அதையடைய நம் உள்ளே நிற்கும் தர்ம சக்தியே அதனை நிறைவேற்ற வேண்டும். அந்தச் சக்தி அனந்தமான துக்கத்தையும் சிரமத்தையும் பொறுப்பது. தன்னைப்பலியிட்டுதான் துயரப்படும் சக்தியை எந்த ராஜாங்கத்தாலும் தடுக்க முடியாது. அந்தத் தர்ம சக்தியை நிலைநிறுத்த சென்னை காங்கிரஸ தலைவர்களுக்கு அற்பத்தனமான தன்னலம் வேண்டலென்னும் குணம் தவிர அந்தத்தர்ம சக்திக்குத் தகுந்தபெருங்குணமுண்டா? ஸ்ரீ நேருதாஸ்மகாத்மா முதலியவர்கள் 'வக்கில் வேலையை விட்டுவிடவேண்டும்' என்று காங்கிரசில் தீர்மானம் பண்ணினார்கள். ஸ்ரீமான் எஸ் சீனிவாச அய்யங்கார் வக்கில் வேலையை விட்டாரா? இல்லை. அவர் தானே இப்பொழுது பெருந்தலைவர். 'வெள்ளைக்காரர்களிடம எதிலும் கலந்துகொள்ளப்படாது' என்று காங்கிரஸ் தீர்மானமிருந்த காலத்திலும் நாள் 'தவறாமல் ஜஸ்டிஸ் கட்சி உத்தியோக வேட்டைக்கட்சி' என்று தன் பத்திரிகையில் திட்டிக்கொண்டிருந்த காலத்தும், தன் மகனுக்கு வெள்ளைக்காரருடைய தயவால் உத்தியோகம் வாங்கிக்கொடுத்த ஸ்ரீமான் ஏ ரெங்கசாமி அய்யங்கார் இரண்டாவது தலைவரல்லவா? 'கதர்மில் துணியுடன் போட்டி போட முடியாது, நம் தேசத்திலே மில்துணிகளை அதிக உற்பத்தி செய்து கொள்ளலாம்' என்றவர்களைச்சதா திட்டி இப்பொழுது "மில் துணியாவது அவசியமேற்பட்டால வேறு எந்த தேசத் துணியாவது வாங்கிக் கொள்ளுங்கள்" என்று பிரசங்கம் செய்யும் சத்தியமூர்த்திஐய்யர் பழைய காங்கிரஸ் தீர்மானங்களுக்கு எவ்வளவு கட்டுப்பட்டவர்? இவர் இப்பொழுதுள்ள பகிஷ்காரத்திற்கு ஒரு தலைவரல்லவா? பொட்டுக் கட்டுதல் ஒழிந்தால் சமயமும் சமூகமும் கெட்டுவிடுமென்கிற தலைவர்கள் எந்த தேசத்திலாவது இருந்ததாகச் சரித்திரம் படித்தவர்கள் சொல்லுவார்களா? 'மற்ற ஜாதியார்களுடன் ஒரு பிராமணப்பையன் ஒரு வேளை இருந்து சாப்பிட்டால் ஒருவாரம பட்டினியாக இருப்பேன்' என்று சொன்ன ஆச்சாரிகளும் காங்கிரஸ் தலைவரல்லவா? இப்பொழுது சாப்பிடாதகெல்லாம் சாப்பிடுகிற பார்ப்பானை அய்யங்கார் நினைத்தால் பட்டினியால் செத்தே இருக்க வேண்டும். ஸ்ரீ எஸ் சீனிவாச அய்யங்கார் விஸ்வாசத்திற்குப் பணம் கொடுத்ததாகவும் அதைத்தின்று விட்டு தனக்கே துரோகம் செய்கிறார் என்று சொல்லவும் அதை மறுநாள் அவர் மறுக்கவும் இவை கோக்லே மண்டபத்தில் கடஜாரில் நடந்த காரியம் தானே இதில் இரண்டு பேரில் யாராது ஒருவர்தானே நிஜமுடையவர்களாகவிருக்க வேண்டும். இவர்களும் காங்கிரஸ் தலைவர்கள் தானே. இவர்களிடம் தர்ம சக்தி யிருக்கிறதா? அந்த தர்ம சக்தியை உண்டாக்குவதில் தீண்டாமை முன்னணியில் நிற்கக் கூடாது. இது இந்த வருஷத்துக் காங்கிரசில் வருணாசிரம மகாநாட்டுக்கூட்டத்தால் ஒழிந்தது ஆனதால் இந்தக் காங்கிரஸ் ஒன்றிரண்டு உத்தியோகத்தைக்கொண்டு வந்தாலும் பொது மக்களுக்கு ஏழை சனங்களுக்கு வேண்டிய சுயராஜ்யத்தைக் கொண்டு வராது என்பதையே 'குடி அரசு' சொல்லுகின்றது

இலட்சக்கணக்கான ஜனங்களும் ஆயிரக்கணக்கான படித்தவர்களும், நூற்றுக்கணக்கான காங்கிரஸ்காரர்களும் கூடியிருக்கும் சென்னையில் எல்லாப் பிரசங்கமேடைகளிலும் நாலைந்து பேர்களின் கூச்சலும் சத்தியமூர்த்தி அய்யரின் பகிஷ்கார பயமுறுத்தலுமே கேட்கின்றன. பேப்பர்களைப் படித்தால பகிஷ்கார இருள் சென்னையின் மின்சார வெளிச்சத்தை மூடிவிட்டதாகக் காட்டுகிறது. மின்சாரவிளக்கு இருள் மூடினால் தான் வெள்ளைக்காரர்களுக்குப் பகிஷ்காரத்தின் இருள் கண்ணில் படும். மூன்று காசு விளக்கில் ஒரு காசு எண்ணை ஊற்றிப் பொழுது விழுந்த அரை நாழிகைக்கெல்லாம் அவிந்து போகும் விளக்கை வாயில் ஊதி அவித்தாலும் பங்களாவில் ஊருக்கு அப்பாலிருக்கும் வெள்ளைக்காரனுக்கு பகிஷ்காரத்தின் இருள் எப்படித் தெரியும்? இவை பட்டாலும் ஏதோ காரணத்தால் மறைத்து விட்டு "ஏழையார்! பிள்ளையார் கோவில் பூசாரி" என்பதுபோல பால்காரன், தயிர்க்காரன், வெற்றிலை, பாக்கு, பொடி, சுருட்டுக் கடைக்காரன், சில்லரைப் பலசரக்குக் கடைக்காரன், சட்கா, ஒற்றை மாட்டு வண்டிக்காரன் இவர்களெல்லாம் சேர்ந்து வேலை நிறுத்தம் செய்யவேண்டுமாம்! இதையே பழைய நாலைந்து பிரசாரகர்களும் சத்திய மூர்த்தி அய்யரும் 'சுதேசமித்திரனும்' சொல்லுகிறதே ஒழிய காங்கிரஸ் பேர் காட்டி எலக்ஷனில் குதிக்கும் தேச வீரர்களெங்கே? உள்ளூர் கொள்ளைக்காரர்களான வக்கீல்கள் எங்கே? கீழ்கோர்ட்டு ஜட்ஜியையும், ஜட்ஜிமெண்டையும் திட்டி அதனால் மேல் கோர்ட்டில் தன் கட்சி ஜெயித்துவிடுமென்று கட்சிகாரன் மனதிற்றுப் படும் படியாகப் பேசி பை பையாகப் பணம் வாங்கும் பாரி வக்கீல்களெங்கே? குமஸ்தாக்களெங்கே? துபாஷி, டரோக்கர், பாங்கர், பணக்காரர் இத்தனை பேர்களுமெங்கே? வருணாசிரமக்காரர்களெங்கே? அவர்களுக்குத் துணையாக காங்கிரசில் மறைந்திருந்து பகிஷ்காரத்திற்கு ஒளியும் கள்ளனெங்கே? இத்தனை பேரையும் மறைத்து வைத்துவிட்டதின் நோக்கமென்ன? ஏழைகளைக் கிளப்பிவிட்டு அவர் அடையும் துன்பத்திற்கு உங்கள் பின்னால் திரிகிறவர்களைக் காட்டிவிட்டு நீங்கள் பின்னால் அடைய உத்தேசித்திருக்கும் இரசியமென்ன?

பகிஷ்காரத்தின் பலன் வெள்ளைக்காரர்களுக்கும் கமிஷனுக்கும் தெரியவேண்டும். உத்தியோகஸ்தன் ஆபீசுக்குப் போகாமலும், வக்கீல் கோர்ட்டுக்குப் போகாமலும் சட்ட சபைக்காரர் வீட்டிலுமிருந்து விட்டால் எல்லா வெள்ளைக்காரர்களுக்கும் தெரிந்து விடும். கமிஷனும் கண்டு கொள்ளும். பால்காரனும் தயிர்க்காரனும் வீட்டோடே இருந்தால் அவர்களுக்கு பகிஷ்காரம் எப்படித் தெரியும்? அநேக பங்களாவில் பசுக்களே இருக்கின்றன. சில வெள்ளைக்காரர்கள் ஓட்டலில் பசுக்களுமிருக்கின்றன, கன்றுக்குட்டுமிருக்கிறது. சில வெள்ளைக்காரர்களுக்கு முன் பின் பண ஒப்பந்தத்தின் பேரில் பக்கத்திலேயே பால் காரனிருக்கிறான். கமிஷனுக்குஅரண்மனைப் பசுக்களிருக்கின்றன. தயிர் அவர்கட்குத் தேவையே யில்லை. பால்காரனும் தயிர்க்காரனும் வரா விட்டால் வெள்ளைக்காரன் பங்களாவிற்கு பகிஷ்காரம் எப்படி எட்டும்? எட்டவே நியாயமில்லை. பால் கறக்காமல் மடியிலேயே விட்டு வைத்தால் மாட்டிற்கு கஷ்டம். அப்படியே கன்றுக்கு விடுவதென்றால் சில கன்றுக்கு வயிறு ஒட்டியே போய் விட்டது. சில கன்றுகளுக்கு வயிறு இருந்த இடமெல்லா வைக்கோல் நிறைக்கப்பட்டிருக்கிறது. பாலைக் குடித்தால் பணம் போய் விடும். கீழே ஊற்றினால் இலட்சுமியின் கோபம் வரும். இதற்கு முன் சொல்லப்பட்ட காங்கிரஸ் சூரர்களுக்கு பகிஷ்காரம் செய்ய எவ்வளவு கஷ்டமிருக்கிறதோ அதைவிட பால்காரனுக்குகஷ்டமிருக்கிறது. அத்தனை கஷ்டப்பட்டாலும் பால்காரனின் பகிஷகாரம் வெள்ளைக்காரனுக்குப் போய்ச் சேராது. வெற்றிலை பாக்குக் கடை, சுருட்டு பொடிக் கடை ஜவுளிக்கடை இத்தனை கடைகளை மூடினாலும் கமிஷனுக்கு எப்படித் தெரியும்? அந்த ரோட்டில் வெள்ளைக்காரனுக்கும் கமிஷனுக்கும் வேலை யென்ன? காங்கிரஸ்காரர்கள் வக்கில்களையும் உத்தியோகஸ்தர்களையும் வேலைக்கு எதனால் போகவெண்டாமென்று சொல்லாமலிருக்கிறார்களோ அதே நஷ்டம் தானே தொழிலாளிகளுக்கு மேற்படும். ஆனால் ஏகபோகமாக ஒரே கூட்டத்தார் எல்லா உத்தியோகங்களையும் அனுபவிக்கிறார்கள். அதனால் வகுப்பு வாரி பிரதிநிதித்துவமும் ஆதிதிராவிடர்களுக்குப் பூரண சமத்துவமும் கட்டாயம் சட்டத்தில் அமைந்து போகும் படியாகவும் யாராவது சாட்சி சொல்லப்போனால் அவர்களை கல்லால் அடித்துத் தடுக்க இவர்களெல்லாம் வேண்டுமென்கிற எண்ணமாகத்தானிருக்கும். மோட்டார் ஓட்டுகிறவர்களைப் பற்றி அவர்களுக்குக் கவலையே இல்லை. அரண்மனைக் காரும் எல்லா வெள்ளைக்காரர்கள் காரும் அதை

இதன் தொடர்ச்சி 18 ம் பக்கம் பார்க்க.

திருவள்ளுவரும் விருந்தினரும்.

சாமி சிதம்பரனார் எழுதுவது,

கட்டுரை 10.

விருந்தோம்பல் என்னுங் குணம் தமிழர்க்கே உரிய சிறந்த குணமாகும். இதனாலேயே தமிழ் மக்கள் எல்லா மக்களையும் உடன்பிறந்த மக்களாகக் கருதி உதவி செய்யுந் தன்மைவாய்ந்தவர்கள் என்பதை யறியலாம். இல்லறத்தை நடத்துவோர்கள் அனைவரும் விருந்தினர்க்கு உதவி செய்தலை மேற்கொள்ளவேண்டும். விருந்தினருக்கு உதவி செய்யாதவன் இல்வாழ்க்கை இல்வாழ்க்கையாகாது. முதலில் விருந்தினர் என்றால் யாரென்று தெரிந்து கொள்ளுதல் வேண்டும். இக்காலத்தினர் விருந்தினரென்றால் தங்கள் சுற்றத்தினர் என்று கருதி யிருக்கின்றனர். ஒருவர் வீட்டிற்கு அயலூரிலிருந்து அவர் சுற்றத்தினர் யாரேனும் வந்திருக்கும் போது, நாம் அவரை நோக்கி "உங்கள் வீட்டிற்கு யார் வந்திருக்கிறார்" என்று கேட்டால், "விருந்தினர் வந்திருக்கின்றனர்" என்று கூறுவதைக் காண்கின்றோம். ஆனால் பண்டைத் தமிழ் மக்கள் தங்கள் கிளைஞரை விருந்தினராகக் கருதினாரில்லை. மக்களாய்ப் பிறந்தவர்கள் அனைவரும் தங்கள் கிளைஞர்க்கு உதவி செய்யக் கடமைப்பட்டிருக்கின்றார்கள். அறிவுடைய மக்கள் பால் இச்செயல் இயல்பாகவே அமைந்து கிடப்பதையுங் காணலாம். ஆகையால் இங்கே கூறப்படும் விருந்தினர் கிளைஞரல்லர். முன்பின்னறியாப் புதிய மக்களேயாவர். இதனை

'விருந்தே தானும் புதியதன் மேற்றே' என்று தொல்காப்பியர் கூறியிருப்பதனாலும் அறியலாம். ஆகவே வருந்தி வரும் புதியவர் எம்மதத்தினராயினும் எக்குலத்தினராயினும் உடன் பிறந்தாராயினும் உடன் பிறந்தாராகக்கருதி அவர்களுக்கு உதவி செய்வதற்கு இல்லத்திலுள்ளோர் கடமைப்பட்டிருக்கின்றனர். இதனை (1) "இல்வாழ்க்கையில் இருந்து பொருளைப் பாதுகாத்துக்கொண்டு வாழும் வாழ்க்கை யெல்லாம் வந்த புதியவர்களை அன்புடன் அழைத்து அவர்களுக்கு உதவி செய்வதன் பொருட்டேயாகும்" என்று திருவள்ளுவர் கூறுவதனால் அறியலாம்.

விருந்தோம்புதல் என்னும் உயரிய தன்மை தமிழர்க்கு இயற்கையில் அமைந்ததாகும் என்பதைப் பண்டைத் தமிழ் நூற்சான்றுகளாலும் அறியலாம். புறநானூறு பத்துப் பாட்டு பதிற்றுப் பத்து முதலிய நூற்களிற் காணப்படும், தமிழ் வள்ளல்களின் வரலாறுகளே இதற்குச் சான்றாகும். நம்முன்னோர் பால் விருந்தினரைப் புரந்தருளும் தன்மை மிகவுங் குடிகொண்டிருந்தமையால் 'அளவுக்கு மிஞ்சினால் அமிழ்தமும் நஞ்சாகும்' என்ற முதுமொழிக்கிணங்கத் தமிழ் மக்கள் தீமையடையவும் நேர்ந்தது. பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் அயல் நாட்டிலிருந்து நமது நாட்டிற்கு வந்து இருக்க இடமும், உண்ண உணவும் உடுக்க உடையுமின்றி அலைந்து வருந்திய ஆரிய மாக்களுக்கு நம்முன்னோர் அன்புடன் உதவி புரிந்து, இருக்க இடமும் உண்ண உணவும் உடுக்க உடையும் அளித்துப் புரந்தனர். அன்றியும் அவர்களுக்கு ஐயர் என்ற உயர்ந்த பெயரையும் கொடுத்தனர். நாளடைவில் அவ்வாரிய மக்கள் நம் தமிழ் மக்களையே மாற்றிப்பற்பல புனைந்து நூல்களின் மூலமாகப் போலிச்சடங்குகளையெல்லாம் ஏற்படுத்தி நம்மிடம் பொருள் பறிக்கலாயினர். இதனால் அவர்கள் குருமார்களாகவும் மதகட்கூட்டத் தலைவர்களாகவும் ஆகித் தமிழ் மக்களை யெல்லாம் அடிமைப்படுத்தினர். இதனால் "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்" என்ற சிறப்பிற்குரியார் தமிழ் மக்கள் என்பது பெறப்படுகின்றதன்றோ? விருந்தோம்பல் என்ற செய்கையிலேயே தமிழர்கள் தங்கள் சுயமரியாதையை இழக்க நேர்ந்ததென்றால் விருந்தோம்பலைத் தமிழ் மக்கள் எத்துணைச் சிறந்ததாகக் கொண்டிருந்திருத்தல்வேண்டும்! விருந்தினர்களைப் போற்றுவதில் தமிழர்கள் சிறந்தவர்களென்பதை (2) "உண்ணப்படும் பொருள் அமுதமேயாயினும் தன்னை நோக்கி வந்த புதியவர் தன் வீட்டின் வெளியிலிருக்கத்தான் மட்டுந் தனித்துண்ணுதல் முறையாகாது" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்,

இல் வாழ்வோர் விருந்தினரைக் காக்குந் தொழிலையே மிகுதியாக மேற்கொள்வாராயின், அவர்கள் பொருள் முழுவதும் செலவாகி, இறுதியில் வறுமையை அடைந்து துன்புற நேரக்கூடுமே யென்று பலர் எண்ணலாம். அவ்வாறு எண்ணுவது தவறாகாது. உண்மையென்றே கூறலாம். யாவரும், தங்கள் வருவாய்க்கேற்ற அளவிலேயே எதனையும் செய்தல் வேண்டும். தன்பாற் பொருள் இல்லாத காலத்தில் என்னதான் செய்ய முடியும்? பொருளில்லாத காலத்தில் பொருட் செலவுள்ள செய்கையைத் தொடங்கினால் பெருந் துன்பத்திற்காளாக வேண்டியதுதான். இதனை "வளமிலா போழ்தத்து வள்ளன்மை குற்றம்" என்றார் ஆன்றோரும். இதன் பொருள் "செல்வமில்லாக் காலத்தில் அறஞ் செய்யத் தொடங்குதல் குற்றம்" என்பதாகும். ஆயினும், 'மனமிருந்தால் இடமுண்டு' என்பதற்கிணங்க விருந்தினரைக் காத்தல் வேண்டுமென்னும் உறுதியும், உள்ளன்பும் உடையவராயிருந்தால, அத்தகையோரும் விருந்தினர்க்கு உதவிசெய்தலாவர். பிறர்க்கு உதவி செய்பவர்க்குப் பிறரும் உதவி செய்வார்கள். ஆகையால் விருந்தோம்புவார் துன்பமுற மாட்டார்கள். அவர்கள் குடி கெடாது நீடூழி வாழும். இதனை (3) "தன்னை நோக்கி வந்த விருந்தினரை நாள்தோறும் காப்பாற்றுபவனது குடும்பம், வறுமையடைந்து கெடுவதில்லை" என்று திருவள்ளுவர் கூறுவதனால் அறியலாம்.

பிறர் தம்மைப் பெருங்கொடையாளிகள் என்று புகழ வேண்டுமென்று எண்ணியோ, அல்லது மற்றவர்களால் தான் ஏதேனும் பயனடைய நினைத்தோ வெளித் தோற்றத்திற்காக விருந்தோம்புகின்றவர் வறுமையடைதல் கூடும். அவ்வாறின்றி உள்ளன்போடும் விருந்தினரைக் கண்டவுடன் முகமலர்ச்சியோடும் வரவேற்று புரப்பார்களாயின் அவர்கள் செல்வம் எப்பொழுதும் குறைவடையாது. அப்பொழுதும், உண்ட வீட்டிற்கு இரண்டகம் செய்வோர்களையும், குடியிருந்த வீட்டில் கொள்ளி வைக்க நினைப்பவர்களையும், விருந்தினராகக் கொள்ளுதல் தகாது. அத்தகையோருக்குச் செய்யும் உதவியால், தமக்குத் தீங்கு நேருவதுமன்றி உலகத்தாருக்கும் தீங்கு செய்தவராவார்கள். ஆகையால், செய்நன்றி மறவா நல்லோர்களை விருந்தினராகக் கொள்ள வேண்டும். அத்தகையவர்களின் இல்லத்திலேயே செல்வம் நிரம்பிக் கிடக்கும். இதனை (4) "முகமலர்ந்து நல்ல விருந்தினர்களை வரவேற்று உதவி செய்பவர்களின் இல்லத்தில் மனமுவந்து செல்வம் வாழும்" என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

எல்லா மக்களையும் ஒன்றாக வெண்ணி அவர்களுக்கு உதவி செய்கின்றவர்கள் தங்கள் பொருள்களைத் தாங்களே வருந்திக் காபபாற்ற வேண்டியதுமில்லை. ஒவ்வொருவரும் அவர்கள் பொருளைக் காப்பாற்றுவார்கள். அவர்கள் விளை நிலங்களுக்குச் சென்று வருந்திப் பயிர்செய்ய வேண்டியதுமில்லை, விருந்தோம்புவாரின் வேலைக்காரர்களும், அவர்தம் உதவியைப் பெற்ற ஏழை மக்களும், தாமே வலிந்து சென்று பயிர் செய்து வைப்பார்கள். இவ்வாறே அவர்கள் செயல் முழுதும் அவர்களுடைய முயற்சியை எதிர்பாராமல் தாமே நடைபெறும். இதனை (5) "முதலில் விருந்தினரை உண்பித்து மிகுந்ததைத் தான் உண்பவனுடைய விளைநிலத்திற்கு விதையிட்டுப் பயிரிடுதலும் வேண்டுமோ" (வேண்டாம்; தானே விளைந்து பயன் கொடுக்கும்) என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

விருந்தினர்க்கு உணவு கொடுப்பவர்கள் "வந்துவிட்டார்களே கொடுத்துத் தொலைக்க வேண்டுமே" என்று வெறுப்புடன் உதவுதல் முறையாகாது. வந்த புதியவர்களை அன்போடு காப்பாற்ற வேண்டும். இன்னும் விருந்தினர் வருகின்றார்களாவென்று அன்போடு எதிர்பார்க்க வேண்டும். இத்தகையவர்கள் செய்கையே சிறந்த செய்கையாகும். இவர்களையே யாவரும் விரும்பிப் போற்றுவார்கள். இவர்களுக்கே சென்றவிடமெல்லாம் சிறப்புண்டாகும். இதனை (6) "தன்னிடத்தில் வந்த விருந்தினர்களைக் காப்பாற்றி, வரும் விருந்தினர்களையும எதிர்பார்த்திருப்பவன் தேவர்களுக்கு நல்ல விருந்தாளியாவான்" என்று திருவள்ளுவர் கூறுவதனால் அறியலாம்.

ஆரியப் பார்ப்பனர்கள் யாகம் என்ற பெயரை வைத்துக்கொண்டு, ஆடுகளையும், மாடுகளையும், குதிரைகளையும், பாம்புகளையும், மனிதர்களையும், மற்றும் பல உயிர்த் தொகைகளையும் நெருப்பிலிட்டுச் சுட்டுத்தின்று உயிர் வாழ்ந்தார்கள். இதனைப் பெருமையாக எழுதி வைத்துக்கொண்டு, மற்றவர்களிடம் பணம் பறித்து வயிறு வளர்த்து வந்தார்கள். உயிர்களைக் கொன்று செய்யும் இவ்யாகத்தால் தெய்வப் பிறவி யடையலாமென்று கூறி மக்களை ஏமாற்றிவந்தனர். ஆனால் தமிழர்கள் வேள்வி யென்பதைச் செய்து வந்தார்கள். வேள்வி யென்றால் உதவி செய்தல் என்னும் பொருளுடையதாகும். வேள்வி யென்னுஞ் சொல் வேளாண்மை, வேளாளர் என்பனவற்றிற்குத் தொடர்புடைய சொல். பிறர்க்கு உணவிடுதலாகிய தொழிலையே வேள்வியென்று தமிழர் கூறுவர். அதுவே விருந்தோம்பலாகும். இதனை 'வேள்வி' யென்னுஞ் சொல்லை 'விருந்து' என்னும் பொருளில் திருவள்ளுவர் கூறியிருப்பதனால் அறியக் கிடக்கின்றது. ஆகவே விருந்தோம்பலாகிய வேள்வியே இல்லறத்தாரால் செய்ய வேண்டியதாகும். இவ்வேள்வியின் பெருமையை அளவிட்டுக்கூற வியலாது. இதனை (7) "விருந்தோம்பலாகிய வேள்வியின் பயன் இவ்வளவென்னும் ஓரளவுடையதன்று, அதற்கு அவ்விருந்தின் அளவே அளவாகும்" என்று திருவள்ளுவர் கூறியதனால் அறியலாம்.

பொருளைப் பெற்றிருப்பதன் பயன் விருந்தினரைக் காப்பாற்றுதலேயாகும். விருந்திக் காப்பாற்றப்படும் பொருள், திடீரென மறைந்து விடுமாயின் அப்பொழுது அப்பொருளுடையவர் மனம் பலவாறு துன்புறும். "ஐயோ! ஒருவர்க்கும் பயன்படாமல் நமது பொருள் வீணே அழிந்ததே! அப்பொருள் இருந்த காலத்தில் மற்றவர்களுக்கு உதவி செய்திருப்போமாயின் இப்பொழுது நாம் மற்றவர்கள் உதவியைப் பெற்றாயினும் வாழலாமே" என்று கூறி வருந்துவதை விருந்தோம்பாமற் பொருளை யிழந்தவர்களிடத்தில் காணலாம். இதனை (8) "விருந்தினைக் காத்து அவ்வேள்வியைச் செய்யாதவர்கள் நிலையாப் பொருளை வருந்திக் காத்துப் பின் அதனை யிழந்து இதுபோது யாம் ஆதரவற்றவராயினேம்" என்று வருந்துவார் என்று திருவள்ளுவர் கூறுவதனாலறியலாம்.

விருந்தோம்புதலை மேற்கொள்ளாதவர்கள் பொருளுடையவர்களாயினும் அவர்கள் பொருளுடையவர்களாக மாட்டார்கள். அவர்கள் தம்

இதன் தொடர்ச்சி 17ம் பக்கம் பார்க்க

மலாய்நாட்டுக் கடிதம்.

ஐயா,

15—2—28 ஞாயிற்றுக் கிழமை கோலாலம்பூர் விவேகானந்த ஆச்சிரமத்தில் ஸ்ரீ விவேகானந்தர் பிறந்த தினமாகிய 66 ம் ஆண்டு பிறப்பு விழாவை முன்னிட்டு குருபூஜை அதிவிமரிசையாக நடைபெற்றது. அதில் சில முக்கிய விஷயங்களாவன:—

காலையில் பஜனையும் சுவாமிக்கு தீபாராதனையும் நடந்த பின் 10 முதல் 12 மணி வரை சங்கீதக் கச்சேரியும் நடந்தது. அப்பால் ஏழை, பணக்காரர், திராவிடர் என்ற பாகுபாடு அன்றியில் சமமாக அன்னமருந்தியது போற்றத்தக்கது. ஷை ஆசிரமத்தார் போஜன விஷயமாகச் செய்திருந்த வசதியும் ஷை ஜனங்களிடம் காட்டிய அன்பும் மிக பாராட்டத்தக்கது. ஷை ஆச்சிரமத்தார் நாலாயிரம் ஜனங்களுக்கு உபயோகப்படக்கூடிய தான அரிசி சாமான் வகையறு தயார் செய்திருந்தும் அன்று மாட்டுப் பொங்கலானதால் அதிக ஜனம் வராமல் பாதிச்சாப்பாடுக்கு அதிகமாக மீதியாகி விட்டது. ஷை ஆச்சிரமத்தார் குருபூஜை விஷயமாக தனியே பிரசுரம் 3000 காப்பிகள் அச்சவாகனமேற்றி ஜாதி வித்தியாசமன்னியில் அனைவர்களுக்கும் விநியோகித்ததுடன் முக்கியஸ்தர்கள் யென்பவர்களுக்கு அழைப்பும் அனுப்பியிருந்தது. இந்த ஊரில் 5 லட்சம் இந்தியர்களுக்கு உழைத்து வருகிறதாகவும் நாம் யாவரும் சகோதரர்களே, மொழிய வித்தியாசமில்லையென்றும் தற்பெருமையாக எழுதிவரும் "தமிழ்நேசன்" பத்திராதிபர் திரு நாகிமய்யங்காருக்கும் அழைப்பு அனுப்பியிருந்ததாகச் சொன்னார்கள். ஷை அழைப்புக்கிணங்கி வந்திருந்தவர் பார்ப்பனரில் திரு கே. ஏ. நாராயணய்யர் ஒருவர்தான். பிராமணரல்லாத பிரமுகர் பலரும் முஸ்லீம் சகோதரர்களும் மற்ற வகுப்பினரும் விஜயம் செய்திருந்தார்கள்.

இதில் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் யென்னவென்றால் இந்தியாவிலும் மற்ற அன்னிய நாடுகளிலும ஒப்பற்ற பெரியாராய் விளங்கும் ஸ்ரீ சுவாமி அவர்களின் குருபூஜைக்கு வந்து அனைவர்களுடன் கலந்து கொள்ள நோக்கமில்லாத பார்ப்பனர்களைப் பார்த்தேனும் இங்குள்ள நண்பர்கள் ஷை நேசன் யெழுதி வரும் ஒற்றுமை யெவ்வளவு தூரம் உண்மை யென்பதை அறிந்து கொள்ளாமலிரார்கள்.

12 மணி முதல் 4 மணி வரை அமைதியாயும் அன்போடும் அன்னம் பரிமாறிக் கொண்டு இருக்க சங்கீத சபை கமிட்டியாரால் மாலை 3-30 மணிக்கு பினாங்கிலிருந்து வரவழைக்கப்பட்ட யாழ்ப்பாணம் திரு த. குமாரசாமி பிள்ளை அவர்களால் கண்ணப்ப நாயனார் சரித்திரம் பாண்டித்யமுள்ள பக்க வாத்தியங்களுடன் மிக அழகாக மணி 6 வரையில நடைபெற்று முடிவுற்றது. அப்பால் 6-30 மணிக்கு கா. ஆறுமுகம் அவர்கள் தலைமையில் எம். வி. கந்தையா அவர்கள் ஸ்ரீ விவேகானந்தரின் சரித்திரம் இங்கிலீஷில் பேசினார்கள். அதுவும் மிகவும் அழகாக இருந்ததாகச்சிலர் சொன்னார்கள். தமிழ் பாஷை தெரிந்த ஒரே சமயத்தாராகக் குழுமியிருக்கும் விசேட காலங்களிலும் அன்னிய பாஷையில் சொற்பொழிவு நடத்துவதுதான் ஏனோ? அடுத்த வருடங்களிலிருந்தேனும் சுவாமி அவர்களின் புனித சரித்திரத்தைத் தமிழில் நடத்தி வருமாறு ஆசிரமத்தாரை வேண்டிக்கொள்வதுடன் மற்ற சங்கங்களிலும் நமது தாய் பாஷையிலேயே சொற்பொழிவு நடத்தி வரும்படியாகக் கேட்டுக்கொள்கிறேன்.

நமது 'தமிழ் நாடு' ஆசிரியர் திரு ஜி. ராமச்சந்திர நாயுடு அவர்கள் தற்காலம் இங்கு மின்சார ரசம் பணம் வசூலுக்காகவும் 'தமிழ் நாடு' சந்தா பாக்கி வசூலுக்காகவும் புதுச் சந்தா சேகரிப்பதற்காகவும் விஜயம் செய்து சில வேலையை முன்னிட்டு சிங்கப்பூர் சென்றிருந்தவர் ஆச்சிரமத்தார் அழைப்புக்கு இணங்கி 15—1—28 காலை இந்த பூஜைக்கு வந்து கலந்து கொண்டார்களெனினும் அன்று பகல் சாப்பாட்டிற்கு அங்கு காணப்படவில்லை. மாறியும் மாலையிலும் அங்கு விஜயம் செய்திருந்ததுடன் அன்று சுவாமி அவர்கள் ஜீவிய சரித்திரம் ஸ்ரீமான் கந்தையா அவர்கள் ஆங்கிலத்தில் பேசி முடிந்தவுடன் திரு ஜி. ராமச்சந்திர நாயுடு அவர்கள் 'விவேகானந்த சுவாமியும் தற்கால இந்தியாவும்' யென்ற விஷயமாய் பேசும் நோக்கம் கொண்டு சில பேசியதில் தற்கால இயக்கத்துக்கும் மகாத்மா காந்தியவர்கள் கொள்கையுமான "கதர்" கைத்தொழில் தமிழ் விருத்திக்குரிய விஷயம் கடுகளவேனும் சொற்பொழிவில் காணப்படவில்லை.

"வகுப்பு பூசலான வருணாசிரம தர்மத்தையும், பிராமண சூழ்ச்சியைப் பற்றியும் நாம் கண்டித்து வந்திருக்கிறோம். தேசியத்திலும அக்கரை செலுத்தவேண்டும். சுயமரியாதை இயக்கத்தைமட்டும்கவனித்து வந்தால் தேசிய முன்னேற்றத்திற்கு தடையாக இருக்கும்'! என சொல்லியதுடன் அமைந்தாலும் பாவாயில்லை.

அத்துடன் நில்லாது 'ஆக்கல் அழித்தல்' யென்ற விதத்தில் நமது நாட்டின் ஒற்றுமையாமையில் பிளவு யேற்பட்டதும் சில தலைவர்களுக்குள் மனவேறுபாடு பட்டதும் அழித்தலையே பிரதானமாகக்கொண்டு தேசியத்தைப்பற்றிக் கவனிக்காது விட்டுவிடுவது தேசியத்திற்கே நஷ்டமென்றும் ஆக்கல் என்ற ஆதித்திராவிடர் விஷயத்தில் யாரும் கவலை செலுத்தி முன்னுக்கு கொண்டு வரவில்லையென்றும் அப்படிக் கொண்டு வந்ததால் அழித்தல் யென்ற பிராமணீயம் தானே யேற்பட்டு விடும்" என்றும் பேசி வந்தார்கள்.

அது சமயம் நான் சென்று தலைவரிடம் மேல்படி விஷயமாய் கொஞ்சம் பேச அனுமதிக்க வேணுமென்று கேட்டுக்கொண்டதற்கு 'மணி 8 ஆகிவிட்டது. தர்க்கிப்பது அழகல்ல. சீக்கிரம் அவர்கள் பிரசங்கம் முடித்து விடுவார்கள்" யெனச் சொல்லி விடைதர மறுத்து விட்டார்கள். சிறிது நேரத்திற்கெல்லாம் திரு நாயுடு பிரசங்கம் முடிந்ததும் தலைவர் திரு கே. ஆறுமுகம் அவர்கள் முடிவுரை இங்கிலீஷில் கூறினார்கள்.

அப்பால் தேவாரம் பாடி மணி 8-30க்கு சபை கலைந்தது.

எது யெப்படியிருப்பினும் திரு. நாயுடு அவர்கள் ஆக்கல் அழித்தல் யென்ற விஷயமாக பேசியதில் முற்றும் பொருத்தமில்லாத சிலவற்றைக் கூறவிரும்புகிறேம்.

அனைவராலும் போற்றப்பட்ட பெரியாராகிய தலைவர் மகாத்மா காந்தி அவர்களின் உபன்யாசத்தினாலும் அரும் பெரும் தேசிய தலைவர்களான பல பெரியார்களின் உபன்யாசத்தினாலும் ஆக்கல்யென்ற ஆதித்திராவிடர் விஷயம் இப்பொழுது யெவ்வளவு தூரம் முன்னேற்றமடைந்து வருகிறது யென்பது மறுக்கமுடியாத தொன்றாகும். அதாவது நமது தென்னிந்தியாவில் பிராமணர் பிராமணரல்லாதார் யென்ற வகுப்புப் பூசலானது நமது பிராமணரல்லாதார் யென்ற பத்திரிகைகள் பலவும் ஆக்கல் யென்ற விஷயமாக உழைத்து வருவதாலேயேயென்பது தெரிந்தவிஷயமே.

அதன் மூலம் சிதம்பரத்தில் சுவாமி சகஜானந்தர் அவர்கள் தலைமையில் நந்தனார் கல்விக்கழகமும், சிராவயலில் காந்தி ஆசிரமத்தாரால் ஒருபள்ளிக்கூடமும், காணாடுகாத்தானில் திரு. வயி. சு. ஷண்முகம் செட்டியாரால் ஒரு பள்ளிக்கூடமும், மதராஸ் பச்சையப்பன் காலேஜிலும் இன்னும் மற்ற அநேக இடங்களிலும் கல்விபோதனை நடந்து வருவதும் தீண்டாமை யென்பது முன்னிலும் யெவ்வளவோ குறைந்து இருப்பதும் மதராஸ் சட்டசபையிலும் ஆதித்திராவிட நண்பர்கள் அங்கம் பெற்றிருப்பதும் யாவரும அறிந்ததே. இவையெல்லாம் யாருடைய முயற்சியால் நடைபெற்று வருகிறது இவைகள் யெல்லாம் நன்கு அறிந்திருந்தும் நண்பர் திரு. ஜி. ராமச்சந்திர நாயுடு அவர்கள் "ஒருவரும் கவனிக்கவில்லை" யென்று உண்மையை மறைத்துக் கூறுவது விந்தையிலும் விந்தையே.

இது விஷயமாய் உண்மையையுள்ளவாறு பேப்பருக்கு யெழுதியனுப்பிய விஷயமாய் யாரும் நமது பேரில் சீற்றம் கொள்ளார்கள் யென்று நம்புகிறேன்.

திரு ராமச்சந்திர நாயுடு அவர்களும் யெனது நண்பர் திரு டாக்டர் பி. வரதராஜுலு நாயுடு அவர்களும் நீண்ட கால அனுபோகமுள்ளவர்கள். தேசியத்தொண்டில் ஈடுபட்டு உழைப்பவர்களில் இவர்களும் அதிக சிரத்தை உள்ளவர்கள். வைத்திய பழக்கமுள்ளவர். ஆனால் 'தமிழ்நாடு' பத்திரிகையோ ஒரு கொள்கையிலும் நில்லாது பலபல விதமாக மெஜாரிடி பக்கம் வேலை செய்வதில் யெவ்விதத்திலும் பிராமண சூழ்ச்சிக்குப் பின்னடைந்த தல்லவென்பது என் அனுபோகத்தில் தெரிந்த விஷயம. இனியேனும் அவ்விதம் பலகொள்கையை மேற்கொள்ளாது நிலையான ஒரு கொள்கையைக் கடைப் பிடித்து தேசத்திற்கு நன்மை பயக்கும் வழியில் தீவிரமாய் வேலைசெய்யுமென முழு மனதுடன் நம்புகிறேன்.

இதன் தொடர்ச்சி 6-ம் பக்கம் பார்க்க

அகில இந்திய சங்கீத மகா நாட்டில் பார்ப்பனீய விஷமம்.

சென்னையில் கிரிஸ்ட்மஸ் வாரத்தில் அகில இந்திய சங்கீத மகாநாடு என்பதாக ஒன்றைக் கூட்டுவதாக சில பார்ப்பனர்கள் ஏற்பாடு செய்து சங்கீத வித்வான்களுக்கெல்லாம் அழைப்புக் கடிதம் எழுதியதுடன் அங்கு பாடவேண்டுமென்றும் சில பிரபல சங்கீத வித்வான்களை கேட்டுக் கொண்டார்கள். அவர்களுள் தென் இந்திய சங்கீத மணியாகிய ஸ்ரீமான் காஞ்சீபுரம் சி. சுப்பரமணிய பிள்ளை அவர்களும் ஒருவர்.

ஆனால் அவர் பார்ப்பனசங்கீதவித்துவான்களால் பலவித துன்பமுமிடையூறும் அநுபவித்து பழகியவரானதால் சில நிபந்தனைகளுக்கு கட்டுப்பட்டுத்தான் தாம்வரமுடியுமென்று எழுதிவிட்டார்.

நிபந்தனைகளாவன:— 1. தனக்கு பாடுவதற்கு 2 மணி நேரம் கொடுக்க வேண்டும். 2. கச்சேரி முடிந்தவுடன் தனக்கு செய்ய உத்தேசித்திருக்கும் மரியாதையை செய்ய வேண்டும் என்பது மகாநாட்டு உப தலைராகிய ஸ்ரீமான் சி. ஆர். சீனிவாசய்யங்கார் என்கின்ற ஒரு பார்ப்பனர் ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை அவர்களின் நிபந்தனைகளை ஒப்புக்கொண்டு "அந்தப்படியே நடக்கும், ஆக்ஷேபனை இல்லை, தாங்கள் சொல்லும்படி வைத்துக்கொள்ள மாட்டேன், அவசியம் வரவேண்டும்" என்று எழுதிவிட்டார்.

அந்தப்படியே ஸ்ரீ பிள்ளை அவர்களுக்கும் 4 மணி முதல் 6 மணி வரை சாவகாசம் கொடுத்திருப்பதாய் சம்மதமும் எழுதிவிட்டார்கள்.

அந்தப்படியே ஸ்ரீமான் பிள்ளையவர்கள் சரியாய் 3-55 மணிக்கு கொட்டகைக்குப் போனார். உடனே ஸ்ரீ சீனிவாசய்யங்கார் எழுந்துவந்து ஸ்ரீ பிள்ளையவர்களை வெகு மரியாதையாய் அழைத்துப் போய் மேடையில் உட்கார வைத்து இது சமயம் வேறு ஒருவர் பாடிக் கொண்டிருப்பதால் சற்று பொறுக்கும்படி கேட்டார். ஸ்ரீ பிள்ளையும் சம்மதித்து உட்கார்ந்திருந்து சரியாக 4-30 க்கு பாட அனுமதி கிடைத்ததும் பாடத் தொடங்கினர். ஸ்ரீ சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் பாடுவதைக் கேட்ட ஜனங்கள் ஆனந்தபரவசமாகி கேட்டுக் கொண்டிருந்ததைப் பார்த்த பார்ப்பன சங்கீத வித்வான்களுக்கு மனம் பொறுக்காமல் எப்படியாவது இதை நிறுத்திவிட வேண்டும் என்பதாக சூழ்ச்சி செய்ய ஆரம்பித்து விட்டார்கள். தாங்களாக நேரில்வந்து எதுவும் செய்யமுடியாததால் வடநாட்டு சங்கீத வித்துவானாகிய ஸ்ரீ திகம்பார் என்பவரைப் பிடித்து ஸ்ரீ பிள்ளையவர்கள் பாடிக் கொண்டிருக்கும் போது அவரிடம் போய் நிறுத்திவிடச் சொல்லும்படி ஏவி விட்டு விட்டு இவர்கள் மறைந்து கொண்டார்கள்.

அவர் இந்தப் பார்ப்பனர் பேச்சைக் கேட்டுக்கொண்டு, கொஞ்சமும் மரியாதை இல்லாமல், பாடிக்கொண்டிருந்த ஸ்ரீ பிள்ளையிடம் வந்து 'நிறுத்திவிடு நேரமாய் விட்டது' என்று சொன்னார். அவ்விடம் சபையில் அக்கிராசனம் வகித்திருந்த சபைத்தலைவர் டாக்டர் யூ. ராமராவ் அவர்கள் ஸ்ரீ திகம்பாரை ஆக்ஷேபித்து "அவர்களுக்கு 7 மணி வரையும் பாடும்படி நான் அனுமதி கொடுத்திருக்கிறேன். சபையோர்கள் 7-30 மணிவரையில் அவர்கள் பாட வேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் அவர் பாடட்டும், நீங்கள் ஆக்ஷேபிக்காதீர்கள்" என்று எல்லோருக்கும் தெரியும்படியாகவே பிளாட் பாரத்திற்கு எழுந்து வந்து சொன்னார். ஸ்ரீ திகம்பார் இதற்கு ஒப்புக்கொள்ளாமல் சத்தம் போட்டார். சபையோர் கேட்டுக்கொண்டும் தலைவர்கெஞ்சிக் கேட்டுக்கொண்டும் ஸ்ரீ திகம்பர் கேட்காமல் சத்தம்போட்டதால் ஸ்ரீ பிள்ளை அவர்கள் ஸ்ரீமான் சி. ஆர். சீனிவாசய்யங்காரைத் சுற்றிப்பார்த்தார், அவர் மறைந்துகொண்டார். பிறகு நிவர்த்தியில்லாமல் ஸ்ரீ பிள்ளை அவர்கள் சபையோர் இஷ்டத்திற்கும் தலைவர் இஷ்டத்திற்கும் முன் ஏற்பட்ட கண்டிஷன்களுக்கும் விரோதமாய் பேசாமல் அவமானத்துடன் எழுந்துபோக வேண்டியதாய் நேர்ந்துவிட்டது. தவிர கச்சேரி முடிந்தவுடன் சன்மானம் செய்வதாய் ஒப்புக்கொண்ட இந்த பார்ப்பன வித்துவானான ஸ்ரீ ஸ்ரீனிவாசய்யங்கார் அங்கு ஏதாவது கொடுப்பதானால் ஸ்ரீ பிள்ளையைப்பற்றி ஏதாவது சில வார்த்தைகள் பெருமையாய் பேசவேண்டிவருமே என்கின்ற பொறுமையாலும்சபையோருக்கு ஸ்ரீ பிள்ளை அவர்களை அறிமுகப்படுத்த வேண்டி வருமே என்கின்ற கெட்ட எண்ணத்தாலும் பேச்சுபடி நடக்காமல் ஒளிந்துகொண்டார். தவிர மகாநாட்டுக்கு வந்திருந்த வித்வான்களுக்கு எல்லாம் பதக்கம் வழங்குவதற்கு ஒரு தினத்தை ஏற்பாடு செய்து அன்று வரும்படி எல்லா வித்வான்களுக்கும் அழைப்புக்கடிதம் அனுப்பி விட்டு ஸ்ரீ சுப்பிரமணியபிள்ளை அவர்களுக்கு மாத்திரம் அனுப்பவேயில்லை. பல வழிகளிலும் சூழ்ச்சி செய்வதல்லாமல் சங்கீத வித்தையிலும் கூட பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதார்களை முன் வரவொட்டாமலும் அவர்களது யோக்கியதையை வெளியாக விடாமலும் அழுத்தி வைக்க எவ்வளவு மோசங்கள் செய்து வருகின்றார்கள் என்பதை பொது ஜனங்கள் உணருவதற்காகவே இதை எழுதுகிறேன்.

உண்மை உரைப்போன்

'குடி அரசு' பேப்பர் ஜாதித் துவேஷமென சொல்லுபவர் அனைவரும மனுதர்ம சாஸ்திரமென்ற அதர்ம சாஸ்திரத்தை அகத்தியம் ஒரு முறை வாசித்துப்பார்கவேணுமென பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். அப்பால் எப்பேர்ப்பட்ட வைதீகக் கொள்கையுடையவர்களும 'குடி அரசு' சொல்லி வருவது சரி யென்று ஒப்புக்கொள்வதுடன் முன்னோர்கள் செய்து வந்த பழக்கம் வழக்கமென்ற புரோகிதக்கொள்கையையும் சடங்குகளையும் கனவிலும் நினைக்கவும் மாட்டார்கள் என்பது முக்காலும் உறுதி.

கோவைஸம்பூர். பழனியப்பன்.

கோயமுத்தூர் ஜில்லா குடியானவர்கள் சங்கம் 192௵ அக்டோபர் மாதம் 29 தேதியில் கூடிய காரியக் கமிட்டி மீட்டிங்கில் தீர்மானிக்கப்பட்ட விஷயம்

ஆஜர்,

மகா-ா-ா-ஸ்ரீ ராவ்பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியார், ராவ்பகதூர் C.S. இரத்தினசபாபதி முதலியார் M. L. C, K. N நஞ்சப்ப கவுண்டர், P. S. G. வெங்கிடசாமி நாயுடுகாரு. R.K. ஷண்முகம் செட்டியார் V. C. வெள்ளியங்கிரி கவுண்டர்

இவ்வருஷத்தில் பல தாலூக்காகளில் மழைக்குறைவு ஏற்பட்டு புஞ்சை நிலங்களில் விதைக்கும் காலம் கடந்து போய் விதைக்கப்பட்டதாலும் தோட்ட பூமிகளில் கிணற்றில் ஜலம் இல்லாமையாலும் அப்படிப் பட்ட பூமிகளின் நிலத்தீர்வையில் அரை பாகத்தை வஜா செய்யும்படியாக ரெவின்யூ போர்டாரைக் கேட்டுக்கொள்ளவும்.

இவவருஷம் கிருஸ்துமஸ் வாரத்தில் சென்னையில் கூடும் கைத்தொழில் கண்காக்ஷியில் தண்ணீர் இறைக்கும் யந்திரங்களின் (Oil Engine & Pumps) போட்டி பரிக்ஷை ஒன்று நடத்தி வைக்கும்படியாக ஷை கண்காக்ஷிக் கமிட்டியின் காரியதரிசியைக் கேட்டுக்கொள்ள வேண்டுமாயும் அதற்கு இச் சங்கத்திலிருந்து ஒரு தங்க மெடலும், ஒரு வெள்ளி மெடலும் கொடுக்கப்படுமென்றும்

ஐக்கிய நாணய சங்கத்தார்களால் ஏற்படுத்தியிருக்கும் நில அடமானக் கடன் பாங்கிகளில் ஒரு தனிப்பட்ட நபருக்கு நில அடமானத்தின் பேரில் 5000 ரூபாய் வரையில் கடன் கொடுக்க வேண்டுமென்பதாக இச் சங்கம் அபிப்பிராயப்படுவதை ஷை ஐக்கிய நாணய டிபார்ட் மெண்டுக்குத் தெரிவிக்க வேண்டுமாயும்

6 பவானி ஆற்று வாய்க்கால்களாகிய தடப்பள்ளி அரக்கன் கோட்டை வாய்க்கால்களில பாஸனம் அளவுக்குத் தக்கபடி குழாய்கள் வைக்கப்பட்டிருப்பதில் சில காலங்களில் கீழ் பாசனங்களுக்கு தண்ணீர் வேண்டுமென்று ஷை குழாய்களை அடைப்பதனால் மேல் மதகுகளில் தண்ணீர் அரிதாயமாய் விளைவுநஷ்டம் உண்டாகிறதாகையால் ஷை ஏற்பாடு செய்யாமலிருக்க வேண்டுமாய் ஜில்லா ரெவின்யூ D. P. W. அதிகாரிகளைக்கேட்டுக் கொள்ளவும்

7 ரிஜிஸ்தரார்கள் முன்பாக பட்டா மாறுதலாகும் நிலங்களுக்கு அவ்வித பட்டாக்கள் இதுவரை கிரமப்படி கொடுக்கப்படாமல் தாமதமாவதால் ஷை மாறுதல்கள் பதிவாக மூன்று மாதங்களுக்குள்ளாகவாவது கிராம உத்தியோகஸ்தர்களால் பட்டாதார்களுக்கு சேரும்படி செய்யவேணுமாயும் ஜில்லா ரெவின்யூ அதிகாரிகளைக் கேட்டுக் கொள்ள வேண்டுமாயும் தீர்மானிக்கப்பட்டன

நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார்
அக்கிராசனர்.

காங்கிரஸ் தொல்லை.

காங்கிரஸ் கட்டளை என்னும் பெயரால் நடைபெற்ற பார்ப்பனப்பிரசாரத்தின் பயனாய் கொஞ்சகாலமாய் ஏற்பட்டுவரும் தொல்லைகளைப்பற்றி அறியாதவர் மிகச் சிலரே இருக்கக்கூடும். அதிலும் சென்ற வாரம் நடந்த அர்த்தாலில் ஏற்பட்ட தொல்லைகள் ஒன்று இரண்டல்ல என்றே சொல்வோம். பாமர மக்களையும் பள்ளிக்கூடத்து சிறு பிள்ளைகளையும் தூண்டிவிட்டுவிட்டு தலைவர்கள் என்போர்கள் தலைமறைவாய் ஒளிந்துகொண்டு, வெற்றியானால் அது தங்களுடைய பிரயத்தனத்தால் ஏற்பட்டதென்றும் தோல்வியானால் தங்களுக்குச் சம்பந்தமில்லை என்றும், போலீசார் அஜாக்கிரதை என்றும், காலிகளின் விஷமம் என்றும் சொல்லித் தப்பித்துக் கொள்ளுகிறார்கள். ஆனால் இதன் பயனாய் ஏற்படும் தொல்லைகளுக்கு மாத்திரம் எவ்வித பரிகாரமும் இல்லாமல் போய்விடுகின்றது. மனிதர்களுக்கு இயற்கையாய் இருக்கவேண்டிய சுதந்தரங்களைக்கூட தப்பான வழியில் பிரயோகிக்கச்செய்து அவைகளுக்கும் இடையூறுகளை உண்டாக்கிவிடுகின்றார்கள். ஆகவே அரசியல் என்பதும் பொறுப்பற்றவர்கள் கையில் சிக்கிக்கொண்டு தேசத்தை கெடுப்பதோடு பாமர ஜனங்களின் நிலையை மிகக் கேவலப்படுத்தி வருகின்றதைப் பொதுமக்கள் இனி சும்மா பார்த்துக்கொண்டிருப்பது மிகவும் அக்கிரமமான காரியம் ஆகும் என்பதே நமது அபிப்பிராயம்.

சமீப வேலை நிறுத்தக் காலித்தனத்தால் பல கடைகளின் சாமான்கள் கொள்ளைபோனதும், பல சாமான்கள் சேதமானதும், பல மோட்டார் பஸ்கள் கண்ணாடி உடைபட்டதும், பல மோட்டார் வண்டிகள் தீக்கிரையாகப்பட்டதும், பலர் அடிபட்டதும் பலர் காறி உமிழப்பட்டதுமான காரியங்கள் தூண்டிவிட்டவர்கள் மூலமாகவே அடக்க முடியாமல் போனதோடு, தலைவர்கள் வண்டி சேதப்பட்டதும், கல்லடிபட்டதும், வண்டிகள் சேதமாக்கப்பட்டதும், டிரைவர்கள் அடிபட்டதுமான அநேக விஷயங்கள் வெளிப்பட்டிருப்பதுடன், ஐகோர்ட்டில் நுழைந்து வக்கீல்களை உதைத்ததும், ஐகோர்ட் ஜட்ஜிகள் பயந்தோடி கதவை மூடிக்கொள்ள நேர்ந்ததும், ஐகோர்ட் வக்கீல்களின் கவுன்களைப் பிடுங்கி கிழித்து நெருப்பு வைக்கப்பட்டதும், அவர்கள் வண்டிகளில் சில சேதமாக்கப்பட்டதும், போலீஸ் கமிஷனர் மீது கல்விழுந்ததும். போலீஸ் டிபுடி கமிஷனர்மீது கல்விழுந்து முகத்தில் காயமபட்டு ரத்தம் ஓடினதும், சீப்பிரசிடென்சி மாஜிஸ்ரேட் வயிற்றின்மீது கல் விழுந்ததும், அட்வோகேட் ஜனரல் தலையில் அடிபட்டதும், பார்ப்பனர்கள் பெண்டுபிள்ளைகளுடன் தெருத்தெருவாய் விரட்டி அடிக்கப்பட்டதும், பார்ப்பனர்கள் பலர் தங்களை பார்ப்பனர்கள் அல்ல என்று சொல்லிக்கொண்டு பொய்ச் சத்தியமசெய்து ஏமாற்றிவிட்டு ஓடிப்போக நேரிட்டதும், சில பார்ப்பனர்கள் வீட்டிற்குள் நடந்த அக்கிரமங்கள் வெளியிடக்கூடாததாய்ச் சொல்லப்படுவதும், மீசையில்லாத பார்ப்பனரல்லாதார்களை பார்ப்பனர்கள் எனக் கருதி தாக்கப்பட்டதும், இரும்பு வாராவதி என்னும் நேபியர் பாலத்தின் வழியாகப் போன ஆசாமிகளில் சில பார்ப்பனர்கள் இருபுறமும் நெருக்கப்பட்டு அவ்வாராவதியில் ஏறி உயிர் தப்ப ஆற்றில் குதித்து தண்ணீரில் மூழ்கி நீந்தி ஓட நேரிட்டதும், 'பாட்டான்கு மாரோ' 'பாப்பானுக்கு அடி' பாப்பான்களை விடாதே, நம்மெல்லாம் கடையை மூடச்சொல்லி விட்டு இவன்கள் கச்சேரிக்குப்போய் சம்பாதிக்கிறான்கள், விடாதே" என்று சொல்லப்பட்டதும், இன்னும் எத்தனை விதங்களாகக் காலித்தனங்கள் நடந்ததாகப் பார்ப்பனப் பத்திரிகைகளிலேயே காணப்பட்டதும் சொல்லிக்கொள்ளப்படுவதும் மறுக்கக்கூடிய காரியமல்ல. இதைப் படிப்பதில் பலருக்குச் சங்கடமிருக்கலாம் பலருக்குச் சந்தோஷமிருக்கலாம், சிலர் வெற்றிபெற்றதாக சந்தோஷப்படலாம், சிலர் தக்கபடி புத்தி கற்பிக்கப்பட்டார்கள் என்று திருப்தி அடையலாம். இதைப் பற்றி நமக்கு கவலை இல்லை. ஆனால் அன்றைய தினம் சென்னையில் நீதியும் அமைதியும் சமாதானமும் இருந்ததா அல்லது காலித்தனம் தாண்டவமாடிற்று என்பது தான் நமது கவலை என்பதைக் காட்டவே இவைகளை எழுதுகிறோமே யொழிய வேறில்லை.

காங்கிரஸ்காரர்களில் சிலருக்கும் பார்ப்பனர்களில் சிலருக்கும் அடியும் உதையும் கிட்டுதலும் காறி உமிழ்தலும் கஷ்டமும் நஷ்டமும் ஏற்பட்ட காரணத்தினால் போலீஸ் பந்தோபஸ்து முன்னெச்சரிக்கையாய் இல்லை என்று சொல்ல நேர்ந்ததே தவிர அவர்களுக்கு உதை முதலானவைகள் விழாமல் மற்றவர்கட்கு விழுந்திருந்தால் 'போலீசார் பிரவேசித்ததால் தான கலகம் ஏற்பட்டது இல்லா விட்டால் எல்லாம் ஒழுங்காய் நடந்திருக்கும்' என்று தானே சொல்லியிருப்பார்கள். ஆகவே காங்கிரசும் தேசாபிமானமும் என்பது நாட்டின் அமைதியையும் சமாதானத்தையும் நீதியையும பாழாக்கிக் கையில் வலுத்தவன் காரியம் என்பது போன்ற காலித்தனத்தை வளர்த்து வருவதானால் இனி யாருடைய உயிருக்கும் சொத்துக்குந் தான் பத்திரம் உண்டு என்றோ பெண் பிள்ளைகள் காப்பாற்றப்படக்கூடும என்றோ சொல்லக்கூடுமா என்பது நமக்கு விளங்கவில்லை. காங்கிரசுக்கே சமாதானம் செய்து கொள்ளக்கூடிய சக்தி உண்டு என்று சொல்ல வருவார்களானால் எந்தக் காங்கிரஸ் தலைவராவது அவர் பத்திரிகைகளாவது போலீசார் தயவை எதிர்பாராமலிருந்தார்களா என்று கேட்கின்றோம்.

நிற்க அறியாக் குழந்தைகளான பள்ளிக்கூடப் பிள்ளைகளைத் தூண்டி விட்ட பலன் இதைவிட வருத்தத்தைத் தரத்தக்கதாய் முடிந்து விட்டது. உதாரணமாகப் பல பள்ளிக்கூடப்பிள்ளைகள் நூற்றுக்கணக்காய்த் தண்டிக்கப்பட்டு வருகிறார்கள். இந்த பிள்ளைகளும் அத்தண்டனைகளை ஏற்று அவமானமடைந்து வருகின்றார்கள். சிறு வயதிலேயே அவர்களை இம்மாதிரி மூட்டாள்தனமான காரியங்களில் பிரவேசிக்கச் செய்து அவர்களது சுயமரியாதை உணர்ச்சியை பாழாக்கி வருவதில் தேசத்திற்கோ அந்தப் பிள்ளைகளுக்கோ என்ன லாபம் என்று கேட்கின்றோம். நேற்றைய தகவல் படிக்கு பிரசிடென்சிகாலேஜு மாணவர்களில் சுமார் 200 மாணவர்களுக்கு ஆள் ஒன்றுக்கு 5 ரூ வீதம் அபராதம் விதித்ததாகவும் பல மாணவர்களுக்கு சர்க்காரால் அளிக்கப்பட்டு வந்த உதவித் தொகையை நிறுத்திவிட்டதாகவும் மற்றும் பல பாடசாலைகளில் அதாவது கும்பகோணம் திருச்சி முதலிய இடங்களில் உள்ள பள்ளிப்பிள்ளைகளுக்கும் தண்டனைகள் ஏற்படுத்தியதாகவும் தெரியக் கிடக்கின்றது. லா காலேஜில் வாசிக்கும் மாணாக்கர்களுக்கும் தண்டனை விதிக்கப்பட்டதாகவும் தெரிய வருகிறது. இவற்றில் சில பார்ப்பனப் பெரிய அதிகாரிகளின் பிள்ளைகள் கலகத்துக்குக் காரணமாய் இருந்து உபாத்தியாயர் தண்டனைக்கு தப்பித்துக் கொண்டதாகவும் தெரிய வருகிறது. இதைப்பற்றி தலைவர்கள் என்போர்களும் தேசிய பத்திரிகைகள் என்பவைகளும் திருடனைத் தேள் கடித்ததுபோல் நோகாமல் இரண்டிற்கும் படாமல் நடந்து விடுகின்றன. புதிதாய் ஐயங்காரான ஸ்ரீ வரதராஜுலுவும் அவரது பத்திரிகையான தமிழ்நாடும் மாத்திரம் ஒரு பார்ப்பன உபாத்தியாயரையாவது கண்டிக்க தைரியமில்லாமல் வாயைமூடிக்கொண்டிருந்துவிட்டு 'ஊருக்கு இளைத்தவன் பிள்ளையார் கோவில் ஆண்டி' என்பதுபோல பார்ப்பனரல்லாத உபாத்தியாயராகிய ஸ்ரீ இரத்தினசாமியை மாத்திரம் கண்டபடி மிகக் கேவலமாய் எழுதிக் கண்டித்து இருக்கின்றது. காரணம் என்னவென்றால், ஸ்ரீமான் இரத்தினசாமியை சட்டகலாசாலை தலைமை உபாத்தியாயராய் நியமித்ததால் பார்ப்பனர்கள் வயிறு எரிந்து கிடக்கிறார்கள். வெளியில் சொல்ல மார்க்கமில்லாமல் வேதனைப் பட்டுகொண்டிருப்பதால் இந்த சமயத்தை தங்கள் ஆத்திரத்தை இவர் மூலம் உபயோகித்துக் கொள்ளலாமென்று ஸ்ரீ வரதராஜுலுவை விட்டு வையும்படி செய்துவிட்டார்கள். அவர்கள் பேச்சைக் கேட்டுக்கொண்டு ஸ்ரீ வரதராஜுலும் மற்றொரு குப்புசாமி முதலியார் போலவும் முத்துரங்க முதலியார் போலவும் நடந்துகொண்டாரே யொழியப் பார்ப்பன உபாத்தியாயரின், நடவடிக்கையைப் பற்றி பேச முடியாமல் போய்விட்டது. நமக்கு இதைப்பற்றி கவலையில்லை. ஆனாலும் காங்கிரசால் இச்சிறுவர்களுக்கு ஏற்பட்ட இத்தொல்லைகளுக்கு இவர்கள் என்ன பரிகாரம் செய்தார்கள் அல்லது செய்யக்கூடியவர்களாயிருக்கிறார்கள் என்று கேட்கின்றோம்.

இதுபோலவே ஒத்துழையாமை காலத்திலும் பள்ளிக்கூடம் விட்ட பிள்ளைகளும வக்கீல் வேலைவிட்ட பிள்ளைகளும் எத்தனையோ கஷ்டப் படுகின்றனர். இவர்களில் பார்ப்பனர்களுக்கு மாத்திரம் பார்ப்பனரல்லாதார் பணங்களிலேயே ஆளுக்கு ரூ75, 100, 150, 200 என்பதாகக் கதரின் பெயராலும் காங்கிரசின் பெயராலும் சம்பளம் கொடுப்பதுமாயிருக்கின்றதே யொழிய பார்ப்பனரல்

லாதார் பிள்ளைகளைப்பற்றி கவனிப்பவர்களே கிடையாது. எனவே தங்கள் பெருமைக்கும் வாழ்வுக்கும் பாமர ஜனங்களையும் அறியாக் குழந்தைகளையும் உபயோகித்துக் கொண்டு கஷ்டம் வந்தால் போலீசாரையும் பார்ப்பனரல்லாதாரையும் வைதுவிட்டு தங்கள் பங்களாவையும் மோட்டார் கார்களையும் விளம்பரம்செய்துகொண்டு வாழ்வது அரசியல் சேவையாக நடைபெறுகின்றது என்பது இதனால் விளங்கவில்லையா? இனியும் இம்மாதிரி காங்கிரஸ் தொல்லை நடைபெற இடமேற்படுமானால் மக்கள் உயிருக்கும் சொத்துக்கும் பத்திரம் கிடைப்பது அரிதாகிவிடும் என்பதோடு மற்றொரு விஷயத்தையும் இங்கு ஞாபகமூட்டி இதை முடிக்கின்றோம். அதாவது நிரபராதிகள் சுடப்பட்டதற்குப் பரிகாரமில்லையென்பதும் கொள்ளையடித்து நாசமாக்கப்பட்ட கடைக்காரர்களுக்கு நஷ்ட ஈட்டிற்கு மார்க்கமில்லை என்பதோடு மற்றொரு முக்கிய விஷயம் என்னவென்றால் வெள்ளைக்கார சங்கத்தில் காங்கிரஸ் தொல்லையைப்பற்றி சில வெள்ளைக்காரர்கள் பேசிய ஆணவமான வார்த்தைகள்தான் நம்மை மிகவும் வருத்தக்கூடியதாய் இருக்கின்றது. அதாவது ஒரு வெள்ளைக்காரர் பேசுகையில் இனிமேல் இம்மாதிரி காலித்தனத்தை 'அரசாங்கத்தார் அடக்கவில்லையானால், வெள்ளைக்காரர்களாகிய எங்களுக்கே அடக்கத் தெரியும்' என்றதும் 'வெள்ளைக்காரர் ஒவ்வொருவரும் துப்பாக்கி குண்டுகளுடன் தயாராயிருந்து சுட்டுத்தள்ளத் தயாராயிருக்க வேண்டும்' என்று பேசியிருப்பதுமாகும். இது மிகவும் அகம்பாவமான வார்த்தையாகும். இதற்கு அரசாங்கமாவது அரசியல் பிழைப்புத் தலைவர்களாவது ஒரு சமாதானமும் சரியானபடி சொல்லவேயில்லை. மறுபடியும் ஒரு சமயம் இந்த அரசியல் தலைவர்களான பொறுப்பற்ற கூட்டத்தார் பாமர ஜனங்களையும் பள்ளிப் பிள்ளைகளையும் தூண்டிவிட்டு ஏதாவது தொல்லை விளைவித்தார்களானால், இந்த வெள்ளைக்காரர் குண்டையும் துப்பாக்கியையும் கொண்டு பக்ஷிகளைச் சுடுவதுபோல் சடபுடவென்று சுட்டுத் தள்ளிவிட்டார்களேயானால் கேட்பதற்கு ஆள் எங்கே என்றுதான் கேட்கின்றோம். சென்னை சர்க்காரும் நஷ்ட ஈட்டுக்கு சட்டமில்லையென்று சொல்லிவிட்டார்கள். பஞ்சாபில் சுட்டதே சரியான காரியமென்று சொன்ன ஸ்ரீமதி பெசண்டும், ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி, ரங்கசாமி, வரதராஜுலு, சீனிவாசய்யங்காரும் இந்தக் காலித்தனத்திற்கு சுட்டதையும் சரியென்று சொல்லி வழக்கம்போல் லாபமடைவார்களேயொழிய வேறு என்ன சமாதானம் செய்து வைப்பார்கள் என்று கேட்கின்றோம். எனவே இப்பொறுப்பற்ற வயிற்றுப் பிழைப்பு ஆட்களை நம்பி இனி இம்மாதிரி காரியங்களில் இறங்காமல் உஷாராயிருக்கும்படி வேண்டிக் கொள்வதுடன் காங்கிரஸ் தொல்லையிலிருந்தும் வெள்ளைக்காரர்கள் மிரட்டலிலிருந்தும் நிரபராதிகளைக் காப்பாற்றப்படும்படியாகவும் வேண்டிக்கொள்ளுகின்றோம். கடைசியாக நஷ்டப்பட்ட ஆரிசன் கம்பெனி மோட்டார் வண்டிகள் முதலியவைகளுக்கு நஷ்ட ஈடு செய்ய வேண்டியது அவ்வளவு அவசியமில்லையானாலும், நிரபராதியாய் இருந்த ஆதிதிராவிட சகோதரரான பார்த்தசாரதி பத்தர் என்பவர் காங்கிரஸ் தொல்லையின் பலனாய் சுட்டுக் கொல்லப்பட்டதற்காவது பொது மக்கள் கருணை வைத்து அந்தக் குடும்பத்திற்கு ஏதாவது உதவி செய்ய வேண்டுமென்று விண்ணப்பித்துக் கொள்ளுகின்றோம்.

தி. ன்.

பார்ப்பனர்களின் தேசாபிமானம்.

பார்ப்பனர்கள் ஒரு உத்தியோகம் பெற தமக்குத் தெரிந்த எல்லா வழிகளிலும் முயற்சிப்பார்கள். முயற்சித்தும் பெற முடியாமல் போனால் "சீ! சீ!! இந்தப்பழம் புளிக்கும் தின்றவன் பல்லெல்லாம் கூசும்" என்ற நரியைப்போல் "இவ்வுத்தியோகம் இல்லாமலே அரசாங்கம் நடைபெறலாம் வரி செலுத்துவோர் பணத்தை ஏன் வீணாய் அரசாங்கத்தார் செலவழிக்க வேண்டும்" என்ற தேசாபிமானக் கூக்குரலில் இறங்கி விடுவார்கள். வில்லிங்டன் ஆட்சி காலத்தில் பார்ப்பனர்களுக்கு ஐகோர்ட்டு ஜட்ஜி உத்தியோகங்கள் கிடைக்குமென்று கருதி ஜட்ஜிகள் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்றார்கள். ஆனால் அதிகப்படுத்தப்பட்ட இரண்டு ஐகோர்ட் ஜட்ஜ் பதவிகளும் காலஞ்சென்ற சர் தியாகராயரின் பெரு முயற்சியால் கனம் தேவதாஸ் கனம் வேங்கடசுப்பாராவ் என்ற இரு பார்ப்பனரல்லாதாருக்குக் கிடைக்கப்போகின்றதென்று தெரிந்தவுடன் முன் ஜட்ஜுகளின் தொகையை அதிகப்படுத்த வேண்டுமென்ற அதே பார்ப்பன தேசபக்தர்களும் அவர்கள் பத்திரிகைகளும் "இப்பொழுதிருக்கும் ஜட்ஜுகளின் தொகை போதும் அவர்கட்கே போதிய வேலையில்லாது உறங்கிக் கொண்டிருக்கின்றார்கள், ஆகையால் புதிதாய் இரண்டு ஜட்ஜிகள் வேண்டுவதில்லை" என்று வரி செலுத்துவோருக்காகப் பரிந்து பேசுவதுபோல் முதலைக் கண்ணீர் விட்டார்கள்.

இரண்டாவதாக சர் ஹபிபுல்லா அவர்கள் இந்திய அரசாங்கத்தின் நிருவாகசபை அங்கத்தவராய் நியமனம் செய்யப்படவே, சென்னை நிருவாக சபை அங்கத்தவர் பதவியில் காலி ஏற்பட்டது. ஏற்படவே மைலாப்பூர் பார்ப்பன தேசபக்தர்களும் அவர்களின் குலகுருவாய சர் சி. பி. இராமசாமி ஐயரும் அப்பதவியை ஒரு பார்ப்பனருக்கேனும் அல்லது பார்ப்பனர்களின் வால் பிடித்துத்திரியும் கொல்லங்கோடு ராஜா, ஜனாப் யாகூப்ஹசன் முதலியோருக்கேனும் கிடைக்கும்படியாய்ச் செய்ய பெரு முயற்சி செய்தனர். ஆனால் காலஞ்சென்ற சர். தியாகராயரும் நம் தலைவர் பனகால் அரசரும் டாக்டர் உஸ்மான் சாகிப் அவர்கட்குக் கிடைக்கும்படியாய்ப் போராடினார்கள், சில மாதங்கள் வரை இந்த உத்தியோகம் யாருக்குப் போவது என்பது பற்றி மயிலாப்பூருக்கும் தண்டையார்ப் பேட்டைக்கும் சண்டை நடந்தது. இறுதியில் தண்டையார்பேட்டையிலுள்ள காலஞ்சென்ற நம் தலைவர் சர் தியாகராயர் வெற்றி பெறுவார் என்று தெரிந்தவுடன், உடனே மயிலை தேசபக்தர்கள் வேறுபாட்டுப்பாட ஆரம்பித்தார்கள். அப்பாட்டை நினைக்க நினைக்க நமக்கு வியப்புண்டாகின்றது. அவர்கள் நான்கு நிருவாகசபை அங்கத்தவர்கள் வேண்டுவதில்லை என்றும் மூன்றுபேர் மட்டும் இருந்தால் போதும் என்றும் கூக்குரல் இட்டார்கள், அவர்கள் பாட்டுக்கு ஏற்ப சட்ட சபையில் நிறைவேற்றப்பட்ட ஒரு தீர்மானத்தையும் ஆதரவு காட்டினார்கள். நான்கு நிருவாக சபை அங்கத்தவர்கள் வேண்டுவதில்லை, மூவரே போதுமென்ற இந்த தேசாபிமானப் பாட்டைக் காலஞ்சென்ற சர். கே. சீனிவாசய்யங்கார் இராஜிநாமா செய்த காலத்தில் சொல்லியிருப்பார்களாயின், பார்ப்பனர்களை யோக்கியர்கள் என்று சொல்லலாம். அப்பொழுது அப்பாட்டை பாடினார்களல்லர். ஏனெனில் சர். சி. பி. இராமசாமி ஐயருக்குத்தான் சட்ட மெம்பர் பதவி கிடைக்கப்போகின்றதென்பது அவர்கட்குத் தெரியும்.

இனி அடுத்தமாதம் முதல் வாரத்தில் சர் சி. பி. இராமசாமி ஐயரின் காலம் முடிவடைகின்றது. யார் அப்பதவிக்கு வரப்போகின்றார்களென்பது இன்னும் விளங்கவில்லை. ஒரு ஐயங்கார் இந்த பெரிய எலும்புக்காக ஆசைப்பட்டு தாம் கடித்துக்கொண்டிருந்த மற்றொரு எலும்பையும் விட்டுவிட்டார். பாவம்! இந்த ஐயங்கார் ஒரு பக்கம் முயற்சி செய்ய மற்றொரு சாஸ்திரியும் பிறிதொரு ஆச்சாரியும் இன்னொரு ஐயரும் சட்ட மெம்பர் பதவிக்காகப் பெரும வேலை செய்து கொண்டு வருகின்றார்கள். ஆனால் 3ஆம் தேதியன்று பார்ப்பனர்களால் நடத்தப்பட்ட காலித்தனத்துக்குப் பிற்பாடு தங்கள் வகுப்பாருக்கு சட்ட அங்கத்தவர் பதவி கிடைக்குமோ என்ற ஐயம் மயிலை பார்ப்பனர்கள் மனதில் தோன்றிவிட்டதாய்த் தெரிகின்றது. ஏனெனில் 3ம் தேதி நடைபெற்ற காலித்தனத்துக்கு ஒரு பெரிய பார்ப்பன உத்தியோகஸ்தரின் உதவி இரகசியமாய் இருந்ததென்ற உணர்ச்சி பொதுவாய் வெள்ளையர்கள் மனதில்பட்டிருக்கின்றது. ஆகையால் தங்கள் வகுப்பாருக்குச் சட்டமெம்பர் பதவி கிட்டாமல் போய்விட்டால்என்ன செய்வது என்ற கருத்துக்கொண்டு நேற்றிருந்து பார்ப்பனர்கள் கனம் உஸ்மான் சாயபுக்கு உத்தியோகம் கிடைக்கப்போகும் தருவாயில் என்ன கூக்குரல் இட்டார்களோ அதே கூக்குரல் இப்பொழுது இடத்தொடங்கிவிட்டார்கள். நேற்றே இக்கூக்குரலுக்கு 'சுயராஜ்யா' என்ற பார்ப்பனப்பத்திரிகை மணி கட்டி விட்டது. அப்பத்திரிகை இப்பொழுது நிருவாக சபை அங்கத்தவர் தொகையைக் குறைக்கலாமென்றும் சர். சி. பி. இராமசாமி ஐயருக்குப்பின் எவரையும் அப்பதவிக்கு நியமனம் செய்யவேண்டியதில்லை என்றும் எழுதியிருக்கிறது. இது நாம் மேலே கூறியுள்ள வண்ணம் சீ! சீ!! இந்தப்பழம் வேண்டாம் என்ற நரி

இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.

மணிமொழி.

வேதம்.

(செ. செ. சேகரன் தீட்டியது.)

வடமொழியிலுள்ள வேதம், ஆகமம், ஸ்மிருதி, இதிகாசம், புராணம், ஆரணகம், உபவேதம், உபாங்கம்முதலிய நூல்கள் தமிழருக்கு வேண்டுவன அல்ல,

வடமொழியிலுள்ள நான்கு வேதங்களின் இருந்த மூலையையும் அறியாதவர்களே வேதம் என்ற சொல்லைக் கையாளுகிறார்கள்.

வடமொழி வேதங்களை நடுவு நிலையாகப் பார்க்குமிடத்து, பலி கொள்ளும் பல வேறு தெய்வங்களைப்பற்றிய பாடல்களையும் சோமபானம் முதலிய இழிந்த வழக்கங்களையும் வேள்வி விதிகளையும் கூறும் பகுதிகளையுமே அவைகள் கொண்டுள்ளன என்பது நன்கு விளங்கும்.

வேதப்பாடல்களைச் செய்த முனிவர்கள் இன்னார் இன்னார் என்று ஆங்காங்கே சுட்டப் பட்டிருப்பதாலும், வேதப் பாடல்களெல்லாம் கடவுள் வாக்கு என்று வேதத்துள் யாண்டுமே கூறப்படாமையாலும், அவை கடவுள் வாக்கென போற்றத்தக்கன அல்ல.

ஊன்பயின் வேள்வியும், பல தெய்வ வழிபாடும் விரும்பாதவர்கள் வேதத்தைப் படித்துப் பெரும் பயன் அடைவதில்லை.

பண்டைத் தமிழ்ச் சான்றோர் அருளிச் செய்த அருந் தமிழ் நூல்களை நன்கு ஆராய்ந்து காணுமிடத்து, எம் செந்தமிழ் முதுமக்கள் எல்லா உலகிற்கும் எல்லா உயிர்க்கும் ஒரே தலைவனை ஒரு முழுமுதற் கடவுள் நிலையை நன்கு உணர்ந்திருந்தார்கள் என்பதும், அம் முழு முதற் கடவுள் ஒன்றனை அன்றி ஏனை எதனையும் கடவுள் நிலையில் வைத்து வணங்காதவர்களாய் இருந்தனர் என்பதும் விளங்கா நிற்கின்றன.

அவரைப்போல, பழைய ஆரியமக்களுள்ளும் ஒரு முழு முதற் கடவுள் நிலையை அறிந்து ஆரிய வேதங்களை வகுத்தார் உளரோ என்று இப்போதலவும் இருக்கு முதலான வேதங்களை நன்கு ஆராய்ந்து காணுமிடத்து அதற்குத் தினைத்தனைச் சான்றும் காண்கிலேம்.

ஆரிய வேதங்கள் எனப்படும் இருக்கு முதலியவற்றில் ஒரு கடவுளுக்குப் பெயரான ஒரு சொல்லேனும் அகப்படுகிறதில்லை. அவற்றுள் காணப்படுவன எல்லாம் 'இந்திரன்' 'வருணன்' 'மித்திரன்' 'அசுவினி' முதலான சிறு தெய்வப் பெயர்களாகவே இருக்கின்றன. இச்சிறு தெய்வங்களெல்லாம் தாய் தந்தையர் மாட்டுப்பிறந்து பின்னர் இறந்துபடும் இயல்பினவாய் மக்கள் இலக்கணம் வாய்ந்திருக்கின்றனவே அன்றி முழு முதற் கடவுட்குரிய பிறவாதிறவா இயல்வாய்ந்தனவாய் இல்லை.

இச்சிறு தெய்வங்கள்மேல் பாடிய பாடல்களே இருக்கு முதலான ஆரிய வேதங்கள், ஆரியரது நாகரிகம் மேம்பாடுடையதன்று. இருக்கு வேதத்தில் ஆரியரைப் பற்றிய குறிப்புகள் பல உண்டு. அவர்கள் ஆ, எருமை, குதிரை முதலானவற்றைக் கொன்று தின்றனர். கட்டுடித்தனை விருந்துகளில் ஆண் கன்றுகளைக் கறி சமைத்தனர் என்று சதபதப் பிராமணம் சொல்கிறது. தைத்திரீய சங்கிதையில் மாட்டுக் கறியுணவு கூறப்பட்டிருக்கிறது. அதைக் கொன்றோர் இழிந்தோர் அல்லரோ? இதனை உயர் திரு மறைமலையடிகள் மாணிக்க வாசகர் வரலாற்றில் விரிவாய்க் காண்க.

ஸ்மிருதி.

ஸ்மிருதி என்பது ஒரு குலத்துக்கொரு நீதி கூறுகின்ற ஓரம் மிக்க மனு முதலிய பதினெட்டு நூல்களின் தொகை. பிராமணர்களின் வருணப் பெருமையையும் வருணாச்சிரமத்தையும் உலகத்தில் நிலைப்படுத்துவதற்கே இந்நூல்கள் எழுந்தன போலும். மநு நீதி என்னுஞ் சொற்றொடர் சிறந்த நியாய முறையைக் குறிப்பதற்கு ஒரு பழமொழியாக வழங்குகின்றது, மனுதருமநூலிற் கூறிய நீதி அதன்று.

வசிட்ட மிருதி முதலியன சிவ வழிபாட்டை இகழ்ந்து பிராமணர்கள் விஷ்ணுமூர்த்தியையே வழிபடவேண்டும் என்று வற்புறுத்துகின்றன.

பிராமணர் ஒழிந்த குலத்தார்க்குச் சிறிய குற்றத்திற்கும் பெரிய தண்டனை விதிக்கும் நூல்கள் நம்மால் விரும்பத்தக்கன அல்ல.

புராணம்

புராணங்களில் தள்ளத்தக்கன பல அவை பலவும் காமிப்பயன் கருதித் தலைகிடந்தவர்களுடைய சரித்திரத்தையும் அரசர் முனிவர்முதலியோர் வரலாற்றையும்கூறுவன.

புராணத்துள் பொய்மையும் மெய்ம்மையும் பகுத்தறிதல் கடினமாதலாலும் அதனுட் போந்த பொய்மையால் நம்மவர்கள் கடவுள் திருவருளையும் வீட்டின்பத்தையும் எளிதாக விலைக்குவாங்கலாம் என்றிருப்பதாலும் நல்லொழுக்கத்தைத் தளர விடுவதற்கு இடம் தருவதாயிருக்கின்றது. இக் கூற்று இதிகாசங்களுக்கும் பொருந்தும்.

சிலப்பதிகாரம் மணிமேகலை முதலிய நூல்களிற் போந்த தமிழ் மக்கள் நிலையை உணர்ந்து தமிழ் நாட்டுக் கதைகளை நம்மவர்கள் அறிய முயலாது வடநாட்டு ராமன் கதை கண்ணன் கதைகளைத் தமிழ் மக்களெல்லோரும் நன்கு அறிந்திருப்பது ஒரு வியப்பே

தற்கால ஸ்தல புராணக் குப்பைகள் ஒரு வகை அமைப்புமின்றித் தமிழ்நலனுமின்றி ஒழுக்க நெறிக்கு மாறுபட்டு செய்யும் வகையில் வழுப்பட மாறுபட்ட முறையில் தெளிவின்றி எழுதப்பட்டிருக்கின்றன.

உருவப்பட திறப்பு,

ஈரோடு தாலூக்கா போர்டு பிரசிடெண்டு ஸ்ரீமான் ராவ்பகதூர் நல்லதம்பி சர்க்கரை மன்றாடியாரவர்கள் உருவப்படத்தை 21—2—28 தேதி மாலை 4.45க்கு முதன் மந்திரி கனம் சுப்பராயன் அவர்கள் ஈரோடு தாலூகாபோர்டு ஆபீஸில் திறந்து வைப்பார்கள்.

தீண்டாதவர்களுக்கு யார் உதவி?

சைமன் கமிஷன் பஹிஷ்கார்க்கூச்சலில் இருந்தும் அதன் விவகாரங்களிலிருந்தும் தீண்டாதாருக்கு யார் உதவி செய்வது? யார் பிரதிநிதி? என்கின்ற பேச்சுக்கள் பலமாய்க் கிளம்பிவிட்டது. ஸ்ரீமான் காந்தியும் தீண்டாதார் பிரதிநிதிகளைப் பற்றி கேவலமாய்ப்பேசிய பிறகு மற்றபடி ஒவ்வொருவரும் அதையே பின்பற்றி பேசஆரம்பித்து விட்டார்கள். அப்படிப்பட்டவர்களுக்கு ஸ்ரீமான் எம். சி. ராஜா அவர்கள் இந்திய சட்டசபையில் சரியான பதிலிருத்தி இருக்கிறார்

தாழ்த்தப்பட்டவர்களின் பிரதிநிதியாக இருக்கும் ஸ்ரீ எம். சி. ராஜா பேசுகையில் கூறியதாவது:-"எனக்கு முன்பேசியவர்கள் சர்க்கார் தாழ்த்தப்பட்டவர்களுக்கு ஒன்றும் உதவி செய்துவிடவில்லை என்று கூறினார்கள் அது தவறு இந்த உயர் ஜாதியினர் குறுக்கே நிற்காமலிருப்பார்களாயின் அவர்கள் ஏதேனும் செய்தே இருப்பார்கள். பழைய ஏகாதிபத்திய சட்ட சபையில் தாத்பாய் தாழ்த்தப்பட்டவர்களைப்பற்றிப் பேசியபோது இந்த பண்டித மாளவியா சர்க்கார் சமூக மத விஷயங்களில் தலையிடலாகாதென்று கூறினார். இப்போதைய சீர்திருத்தத்தாலேயே எங்களுக்கு சில நன்மைகள் ஏற்பட்டிருக்கின்றன. 1919ம் வருஷத்துக்கு முன் சர்க்கார் நிர்வாகத்தில் எங்களுக்கு பேச்சுரிமையும் இருக்கவில்லை. அப்போதும் சென்னை சட்ட சபையில் நியமனத்தை எடுத்துவிட வேண்டுமென்று காங்கிரசுகாரர்கள் விரும்பினர் இதனால் அவர்கள் தாழ்த்தப்பட்ட ஜாதியினர் நியமனத்தாலும் சட்டசபைக்கு வருவதில் அவர்கள் குறுக்கிட்டார்களென்பது விளங்குகிறது"

இதைப் பார்த்த பின்பாவது பொது ஜனங்கள் வயிற்றுப் பிழைப்பு தேசபக்தர்களால் ஏமாறமாட்டார்கள் என்று நினைக்கின்றோம்

2-வது தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாத இளைஞர் மகாநாடு.

இம்மகா நாடு 26—2—28 ல் தஞ்சையில் மணிக்கூண்டுக் கடுத்த ராவ்பகதூர் ராமநாதஞ்செட்டியார் ஹாலில்கூடும். திரு. வி சக்கரை செட்டியார் பி. ஏ., பி. எல். தலைமைவகிப்பார். திரு மிஸ் சி. டி. நாயகம் மகாநாட்டை திறந்து வைப்பார். திருவாளர் எ டி பன்னீர்ச் செல்வம் இளைஞர் கொடியை நாட்டுவார். திருவாளர் டி சேவியர் நாடார் வரவேற்புக்கழகத் தலைவராகயிருந்து எல்லாரையும் வரவேற்பார். திருவாளர் என் சிவானந்தம தொண்டர் படைத்தலைவராயிருந்து தொண்டாற்றுவார்.

வேற்றுமையற்ற உண்டிவிழா நடைபெறும். பிரதிநிதிகளுககு இருப்பிடமும் உண்டியும் இலவசமாயளிக்கப்படும்

பிரதிநிதி கட்டணம் ரூ 0—8—0

வரவேற்புக்கழக உருடபினர் கட்டணம் ருபா 3—0—0

மகாநாட்டில் ஆலோசிகக வேண்டிய தீர்மானங்களை 20, 2,28 க்குள் அமைச்சருககு அனுப்பிவைககுமாறு கோறப்படுகிறது.

அ சோமசுந்தரம் பி ஏ பி எல், அமைச்சர்.



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு பிரபவ ஹூ மாசி மீ 7 உ

மந்திரிகளின் நிலை.

சென்னை அரசாங்க மந்திரிகளின் நிலை ஆட்டம் கொடுத்திருக்கும் விஷயம் யாவரும் அறிந்ததே. மந்திரிகளின் நியமனத்தின் போது காங்கிரஸ் பார்ப்பனர்களும் ஒத்துழையா பார்ப்பனர்களும் ஐகோர்ட் ஜட்ஜ் பார்ப்பனர்களும் நிர்வாகசபைப் பார்ப்பனர்களும் உள்உளவாய் இருந்து பார்ப்பன ஆதிக்கத்துக்கு ஒப்பந்தம் பேசிக்கொண்டு பார்ப்பனரல்லாதாரிலேயே மூவரைப் பிடித்து சுயேச்சைக் கக்ஷி மந்திரிகள் என்று பெயர்தந்து மந்திரி சபையை சிருஷ்டித்தார்கள். உதாரணமாக இம்மந்திரிகளை நியமிக்கும் விஷயத்தில் ஒத்துழையாமைக்கார ஸ்ரீமான்கள் ராஜகோபாலாச்சாரியார் வி. விஜயராகவாச்சாரியார் முதலியோரும், காங்கிரஸ் முட்டுக்கட்டைகளாகிய ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி சீனிவாசஅய்யங்கார் முதலியோரும் சட்டமெம்பர் ஐகோர்ட் ஜட்ஜுகள் முதலியோரும் வெளிப்படையாகவே எடுத்துக் கொண்ட முயற்சி யாவருக்கும் தெரிந்ததே. இவர்கள் தயவால் ஸ்தானம் பெற்ற மந்திரிகளும் மேற்கண்ட பார்ப்பனர்கள் சொன்னபடியெல்லாம் ஆடினதும் பார்ப்பனரல்லாதார் கட்டைக் குலைத்து அவர்களது இயக்கத்தையே பாழாக்க எவ்வளவு தூரம் கொடுமைகள் செய்யலாமோ அவ்வளவு தூரம் செய்ததும் மறக்கக்கூடியதல்ல. கடைசியாக பார்ப்பனரல்லாதார் கோவையில் மகாநாடு கூடி இம்மந்திரிகளை ஒழிக்க கருதி "இரட்டை ஆக்ஷி ஒழியும்வரை உத்தியோகம் ஏற்பதில்லை" என்கின்ற தீர்மானம் செய்த பிறகு மந்திரிகள் பயந்துபோய் பார்ப்பனரல்லாதாருக்கும் சிற்சில உத்தியோகங்களும் நியமனங்களும் செய்யவேண்டிய நிர்ப்பந்தம் வந்துவிட்டது. இந்த சிற்சில உத்தியோகங்கள் பார்ப்பனரல்லாதாருக்கு மந்திரிகள் கொடுக்க ஏற்பட்டதால் பார்ப்பனர்கள் பொறுக்கமாட்டாமல் மந்திரிகளை நெருக்க ஆரம்பித்துவிட்டார்கள். இதற்கு முக்கிய காரணம் சட்ட கலாசாலை தலைமை உபாத்தியாயர் (அதாவது லா காலேஜ் பிரின்சிபால்) வேலையை ஸ்ரீமான் ரத்தினசாமி என்கின்ற ஒரு கிருஸ்தவ கனவானுக்கு கொடுத்ததினால் எல்லா பார்ப்பனரும் ஒன்றுகூடி மந்திரியை ஒழிக்க கங்கணம் கட்டிக்கொண்டார்கள். ஸ்ரீமான் ரத்தினசாமி ஒரு பாரிஸ்டர் இங்கிலீஷில் உயர்ந்த கல்வியாளர். மேல்நாட்டு கல்வி அனுபவமும் உள்ளவர். சட்டசபை பிரசிடெண்டாக மீ 2000 ரூ. சம்பளம் வாங்கிவந்தவர். பச்சையப்பன் பள்ளிக்கூடத்தலைமை உபாத்தியாயராக கிட்டத்தட்ட 1000 ரூ. சம்பளம் வாங்கிக் கொண்டிருந்தவர். இந்தியா சட்டசபை மெம்பர். இவ்வளவு யோக்கியதையும் உள்ள ஒருவருக்கு மீ 1000 ரூ. சம்பளமுள்ள ஒரு வேலை கொடுத்ததற்காக மந்திரிசபையே ஆட்டங் கொடுக்கத்தக்க நிலைமையை பார்ப்பனர்கள் உண்டாக்கி விட்டார்கள். காரணம் என்னவென்றால் சட்டகலாசாலையில் படிப்பவர்கள் எல்லாம் பார்ப்பனர்கள். அவர்களுக்கு பார்ப்பனர் உபாத்தியாயராய் இருந்தால் எவ்வளவு அனுகூலம் உண்டாகுமோ அவ்வளவு அனுகூலம் உண்டாகாதே என்கின்ற பயமும், பார்ப்பனரல்லாத பிள்ளைகளும் படித்து முன்னுக்கு வந்துவிடுமோ என்கின்ற வயிற்றெரிச்சலும் அவர்களைப் பிடித்துக் கொண்டது. இதனால் பார்ப்பனர்கள் எல்லாம் ஒன்று சேர்ந்து முதல் மந்திரியிடம் இந்த வேலைக்கு ஒரு பார்ப்பனரையே நியமிக்கச் சொல்லிப் பார்த்தும் வேறு எவ்வளவோ பிரயத்தனப்பட்டும் யார் பேச்சையும் கேளாமல் டாக்டர் சுப்பராயன பார்ப்பனரல்லாதாரையே நியமித்துவிட்டார். மற்றும் சில இடங்களில் பார்ப்பனரல்லாதார் விஷயத்திலும் கவனம் செலுத்த ஆரம்பித்துவிட்டாரே என்கின்ற பயமும் பார்ப்பனர்களுக்கு நன்றாய் விழுந்துவிட்டது.

எனவே மந்திரி சபையை கலைக்க ஆரம்பித்து விட்டார்கள். அதனால் இப்பொழுது மந்திரி கட்சியில் பிளவு உண்டாய் விட்டது. மந்திரி கட்சியில் உள்ள பார்ப்பனர்கள் அவரை விட்டுப்பிரிந்து விட்டார்கள். மற்றும் பல பார்ப்பனரல்லாதார்களும் பல மீறமுடியாத செல்வாக்குகளால் பார்ப்பனர்களைப் பின்பற்றவேண்டி வந்து விட்டது. மற்றொரு மந்திரியாகிய ஸ்ரீமான் ரங்கநாத முதலியார் பார்ப்பனர்கள் சொல்லுகிறபடி ஆடுவதாக ஒப்பந்தம் செய்து கொண்டார். அதிலிருந்து அவர் ஒரு சிறிதும் மாறவும் இல்லை. பார்ப்பனர்களுக்கு ஸ்ரீமான் முதலியாரின் குருவாகிய ஸ்ரீ பெசண்டம்மையாரின் ஜாமீனும் இருக்கின்றது. மற்றபடி மற்றொரு மந்திரி ஸ்ரீமான் ஆரோக்கியசாமி முதலியார் அவர்களைப்பற்றியோ யாருக்கும் கவலையில்லை. அதாவது 'அடிப்போன சட்டி ஆத்தாள் வீட்டிலிருந்தாலும் ஒன்றுதான் மகன் வீட்டிலிருந்தாலும் ஒன்றுதான்' என்பதுபோல் அவர் பார்ப்பனர்கள் போட்ட கோட்டை மீற முடியாதவர். எனவே சைமன் விஷயத்தில் சட்ட சபையில் டாக்டர் சுப்பராயனுக்கு எதிரிடையாகவே அவர் கூட்டு மந்திரிகளும் கட்சி மெம்பர்களில் சிலரும் ஓட்டு கொடுத்ததால் மந்திரி கட்சி முழுகதற்றதாகி விட்டதுடன் டாக்டர் சுப்பராயனுக்கு மந்திரி கட்சியில் ஆதரவு இல்லை என்றும் ஏற்பட்டு விட்டது. இதனால் ஒன்று சீக்கிரமாகவே மந்திரிகளைக் கலைக்கவேண்டும். அல்லது மந்திரிகளாவது ராஜீனமா கொடுக்கவேண்டும். இந்த இரண்டும் நடக்காவிட்டால் ஒரு குறைவான மந்திரியாவது ராஜீனமா கொடுத்து விடவேண்டும். அல்லது மறுபடியும் எல்லோரும் ராஜியாகி விடவேண்டும். இந் நான்கில் ஒன்று நடந்தாகவேண்டுமேயல்லாமல் சும்மா இருக்க முடியாது. இந்த நிலைமைதான் டாக்டர் சுப்பராயன் அவர்கள் ராஜீனமா கொடுத்து விட்டார் என்கின்ற சங்கதி வெளியாகக் காரணமாயிருந்தது. முதல் மந்திரி ராஜீனமா கொடுத்ததாக சொல்லப்படும் விஷயத்திற்கு ஆதாரமில்லை என்றுதான் அசோசியேட் பிரஸ் சொல்லக் கூடுமேயல்லாமல் ராஜினமா கொடுக்கவில்லை என்று சொல்ல யாருக்கும் தைரியம் வரவில்லை. இன்று நாளைக்கில்லாவிட்டாலும் மந்திரிகளுக்குள் புது ஒப்பந்தம் ஏற்பட்டு காங்கிரஸ் பார்ப்பனர்களும் உத்தியோகப் பார்ப்பனர்களும் ஆதரிப்பதாக வாக்கு கொடுக்காத பட்சம் ராஜினமா சங்கதி வெளியாகித்தான் தீரும் என்றே சொல்லுவோம். ஸ்ரீமான் டாக்டர் சுப்பராயன் மந்திரி நிலைக்கவேண்டுமானால் காங்கிரஸ் பார்ப்பனர்களுக்கு பதிலாக ஜஸ்டிஸ் கக்ஷியார் உதவி செய்வதாக வாக்களிக்கவேண்டும். அவர்களும் ஒன்று அல்லது இரண்டு மந்திரி ஸ்தானங்களை ஒப்புக்கொள்ளத் தயாராயிருக்க வேண்டும். ஆனால் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர்களுக்கு இது சமயம் மந்திரி ஸ்தானம் ஒப்புக்கொள்ள சற்று பயமாயிருக்கிறதென்றே தெரிகின்றது. ஏனெனில் கோயமுத்தூர் தீர்மானம் ஒன்று குறுக்கே நிற்பதாலும் மறு எலக்ஷனுக்கு போனால் ஜனங்கள் பரிகாசம் செய்வார்களே என்கின்ற எண்ணத்தாலுந்தான். காங்கிரசுக்குள் இருந்தே வேறு கக்ஷி ஆரம்பித்த ஸ்ரீ முத்தய்ய முதலியார் அவர்கள் கக்ஷியார் தாராளமாய் மந்திரி பதவி ஒப்புக்கொள்ளலாமானாலும் பார்ப்பனர்கள் போக மீதியிருக்கும் மந்திரிக்கக்ஷியும் ஸ்ரீ முத்தய்ய முதலியார் கட்சியும் ஒன்று சேர்ந்தாலும் போதுமான மெஜாரிட்டி கிடையாததால் அவர் அந்த ஒரு கட்சியின் உதவியைக் கொண்டு அமைக்க முடியாது மற்றபடி இண்டிபெண்டெண்ட் ஆபோசிஷன் என்கின்ற ஸ்ரீமான் சி. எஸ். ரத்னசபாபதி முதலியார் அவர்களுடைய கக்ஷிக்கு ஒரு மந்திரி கொடுத்து அந்தக் கக்ஷியையும் சேர்த்துக் கொள்வதானாலோ அப்பொழுதும் தைரியமாய் இருக்கத்தக்க மெஜாரிட்டி இல்லை என்றுதான் சொல்லவேண்டும். டாக்டர் சுப்பராயனை வெளியேற்றி விட்டு ஸ்ரீமான்கள் ரங்கநாத முதலியாரும் ஆரோக்கியசாமி முதலியாரும் இருந்துகொண்டு மற்றொரு மந்திரியை தே

தமிழர்களே உங்களுக்கு புத்தி இல்லையா

தமிழ் நாடும் தமிழ் மக்களும் மனிதத் தன்மையாகிய "சுயமரியாதையை இழந்து மிருகங்களிலும், பூச்சி புழுக்களிலும் கேவலமாய் வாழும் நிலைமை ஏற்பட்டதற்கு முக்கிய காரணங்களில் பார்ப்பன மதமாகிய இந்து மதமும், அம்மத ஆதாரங்களாகிய வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, புராணம் முதலிய ஆபாசப் புரட்டுகளே முக்கிய காரணமென்று வெகு நாளாகச் சொல்லி வருகிறோம். அநேக விதங்களில் அறிவைக் கொண்டும் அனுபவங்களைக் கொண்டும் யாவருக்கும் நன்றாய் விளங்கும்படி விவரமாய் எழுதியும் வந்திருக்கின்றோம் இவற்றை மறுத்து இதுவரை யாரும் எவ்வித சமாதானமும் சொல்லாமல் "மதம் போச்சு" 'நாஸ்திகமாச்சு' 'தெய்வம் போச்சு' என்று பொய் அழுகை அழுகிறார்களேயல்லாமல் சற்றாவது கவனித்துப் பார்த்து இதற்கு என்ன செய்யவேண்டும் இனி எப்படி நடந்துகொள்ளவேண்டும் என்பதைப்பற்றி ஒரு சிறிதாவது கவலை கொள்ளாமல் இருப்பதுடன் செய்ய முயற்சிப்பவர்களையும் காலைவாரி விட சூழ்ச்சிகள் நடந்தவண்ணமாகவும், எதிர் பிரசாரங்கள் நடந்தவண்ணமாகவும் இருந்து வருகிறது.

அன்றியும் முன்னையை விட பார்ப்பனப் பிரசாரமும் பலமாய் நடந்து வருகின்றது. என்னே! தமிழர்களின் மானங்கெட்ட தன்மை.

தமிழ் மக்களில் பலர் படித்தவர்கள் என்றும், பண்டிதர்களென்றும், வித்துவான்கள் என்றும், ஆராய்ச்சிக்காரர்கள் என்றும், சீர்திருத்தக்காரர்கள் என்றும் சொல்லிக் கொண்டு வெளியில் புறப்பட்டு புஸ்தகம் எழுதுவதுமூலமும், புராண பிரசங்கமூலமும் ஆராய்ச்சி மூலமும், சீர்திருத்தப் பிரசாரமூலமும், பத்திரிகையின் மூலமும் தமிழ்பாஷையைப் பரப்புவதென்பதன்மூலமும் மற்றும் பலவழிகளில் பார்ப்பன மதப் பிரசாரங்களையே மேலும் மேலும் செய்கின்றார்களே யொழியவேறு ஒருகாரியமும் செய்ய அறிவும் ஆற்றலும் இல்லாதவர்களாகவே இருக்கிறார்கள். இந்த உபத்திரவம் போதாமல் இப்பொழுது சினிமாக்களும் நாடகக்காரர்களும் பாட்டுக்காரர்களும உபந்நியாசக்காரர்களும் இப்பார்ப்பனப் பிரசாரத்தையே கைப்பற்றி தினமும் கோடிக்கணக்கான மக்களுக்கு புராணப் பிரசாரம் செய்து வருகின்றன.

அன்றியும் சமீப காலமாக நமது நாட்டில் உள்ள எல்லா பத்திரிகைகளும் அறிந்தோ அறியாமலோ இதே வேலையையே செய்து வருகின்றன. எந்த வாரப் பத்திரிகையின் முகப்பைப் பார்த்தாலும் ஆரியப் புராணப் புளுகுகளைப்பற்றி வியாக்கியானம் பண்ணுவதும், அதற்கு விசேஷ அர்த்தமும், தத்துவார்த்தமும் சொல்லுவதும் எழுதி வைத்தவர்களைப் புகழ்வதுமாகவே இருக்கின்றன. எந்த தினசரிப் பத்திரிகையைப் பார்த்தாலும் பார்ப்பன மதக் கொள்கைகளை பிரசாரம் செய்யத்தக்கவண்ணம் ஆரியக் கதைகளையே விளக்கி வருகின்றது.

ஆனால் ஒவ்வொரு பத்திரிகையும் தன்னை சீர்திருத்தப் பத்திரிகையென்று சொல்லிக் கொண்டேதான் இந்தக் காரியம் செய்கின்றது என்பதைக் கவனிக்கும்போது தான் நமது மனம் பதறுகின்றது.

அன்றியும் இந்தக் கொடுமைக்கு இன்னதுதான் பரிகாரம் என்பது நமக்கு விளங்கவில்லை. தேவஸ்தான மசோதா வந்த காலத்தில்கூட எல்லா பார்ப்பனரல்லாத பத்திரிகைகளும், பார்ப்பனர்களையும் பார்ப்பன பத்திரிகைகளையும் பின்பற்றி, அம்மசோதாவினால் ஒரு காதொடிந்த பலனும ஏற்படுவதற்கில்லாமல் செய்து விட்டன. 'திராவிடன்' ஒன்று மாத்திரம் தைரியமாய் உண்மையாய் பிரசாரம் செய்து வந்தது. ஆனாலும் ஒரு பயனும் உண்டாகவில்லை. தவிர தற்சமயம் முக்கிய பிரசினையாய் இருக்கும் சுவாமிக்காக தமிழ் பெண்களை பொட்டுக் கட்டி விபசாரத்திற்கு அனுகூலமாக்கினதை ஒழிக்கச் செய்யும் பிரயத்தனத்தையும், பக்குவமறியாக் குழந்தைகளை பெண்ஜாதி புருஷர்களாக ஆக்கி நாய்க் குட்டிகள்போல பிள்ளைகள் பெற்று மிருகப்பிராயத்திற்கு போய்க்கொண்டிருக்கும் நிலையைத் தவிர்க்கச்செய்யும் பிரயத்தனங்களையும் அடக்க பார்ப்பனர்கள் செய்யும் இடையூறுகள் ஒன்றல்ல பல. கொஞ்ச காலமாக 'சுதேசமித்திரன்' முதலிய தினசரி பத்திரிக்கைகளில் இதே விஷயங்கள் வெளியாகின்றன. சங்கராச்சாரியர்களும், பண்டிதர்களும், சாஸ்திரிகளும், வைதீகர்களும் தினம் ஒவ்வொரு இடத்தில் மீட்டிங்குகள் நடந்ததாக பேர் செய்து இவ்விரு காரியங்களையும் மறுத்து கண்டித்து தீர்மானங்கள் செய்ததாக எழுதி வருவதும், பொது மக்கள் ஏமாறும்படி கடவுள் சொன்னதாகவும் தேவர்கள் சொன்னதாகவும் ரிஷிகள் சொன்னதாகவும் அசரீரி சொன்னதாகவும் அநேக விஷயங்களை எடுத்து எழுதுவதுமாய் இருக்கின்றார்களே' இதை யாராவது கவனிக்கின்றார்களா என்று கேட்கின்றோம்.

இதுதவிர பள்ளிக்கூட டெக்ஸ்ட் பாடபுஸ்தகங்கள் என்று அநேக பார்ப்பனர்களும் சுயமரியாதையும் அறிவும் இல்லாத சில பார்ப்பனரல்லாதார்களும், ராமாயணம். பாரதம், பாகவதம் கந்தபுராணம், பெரிய புராணம், அருணாசலப் புராணம் திருவிளையாடல் புராணம் முதலிய குப்பை கூளங்களின் பேரால் சிறு சிறு கதைப்புத்தகமும்எழுதி சிறு குழந்தைகளுக்கு பார்ப்பன விஷத்தை ஊட்டுவதும் சகிக்கக கூடியதாயில்லை.

எந்த புத்தகத்தைப் பார்த்தாலும் ஆரியர் மேலோர் என்பதும், பிராமணன். க்ஷத்திரியன். வைசியன். சூத்திரன் பஞ்சமன் என்பதும்தென்னாட்டில் ஒரு முரட்டு ஜாதியர் காட்டுமிராண்டிகளாய் இருந்தார்கள். அவர்களைத்தான் வானரங்கள் என்று சொல்லப்படுவதுஎன்றெழுதுவதும், ஆரியர் தென்னாட்டிற்கு வந்த பிறகே தமிழ் மக்கள் மனிதத் தன்மையை அடைந்தார்கள் என்று எழுதியதுமான புஸ்தகங்களைப் படிக்கச்செய்வதே இப்போது தேசியப் படிப்பாக மாறி வருவதும் நினைக்க நினைக்க வயிறெல்லாம் பற்றி எரிகின்றது. இன்னும் பல வழிகளில் தமிழர்களை இழிவுபடுத்தியிருக்கிறார்கள். அவைகளையெல்லாம் இதில் எழுத மனம் வெட்கப்படுகின்றது. இதற்கு என்ன வழி என்று யார் சிந்திக்கிறார்கள். பார்ப்பனர்களுடைய முகக்கோணலை பொறுத்துக்கொள்ள தமிழ் மக்களில ஆட்கள் இல்லையென்றால் அந்த சமூகம் வாழுவதால் பயன் என்ன என்று கேட்கின்றோம. பார்ப்பனரல்லாதார்களில வயிற்றுக்கில்லாத கூலிகளின் செய்கைகளைப்பற்றி நாம் பிரமாதமாய் இதில் எழுத வரவில்லை.

வயிற்றுக்கு தாராளமாய் கிடைக்கத்தக்க தொழிலையும் தனி சம்பாத்தியத்தையும் சொத்துகளையும் நிலையையும் வைத்துக்கொ

ரிந்து எடுக்க வேண்டுமானால் ஒரு பார்ப்பன மந்திரியைத்தான் தெரிந்தெடுத்தாக வேண்டும். இதற்கு காங்கிரஸ்காரர்களின் உதவிவேண்டியது அவசியம். ஆனால் காங்கிரசினுள் சில பார்ப்பனரல்லாதார்கள் மந்திரி பதவி தங்களுக்கு வருவதாயிருந்தால் வரட்டும் இல்லாவிட்டால் வேறொரு பார்ப்பனனுக்கு உதவிசெய்து பெயரைக் கெடுத்துக் கொள்ளவேண்டியதில்லை என்று உறுதியாய் மறுக்கிறார்கள். இந்த நிலையில் பாரப்பனர்களின் நாக்கில் ஊறும் தண்ணீருக்கு கணக்கு வழக்கு இல்லை. கடைசியாக இது எப்படி முடியும் என்று சொல்லுவதும் கஷ்டமாகத் தான் இருக்கிறது.

எப்படியானாலும் நிலைக்கத்தக்க மந்திரி சபையை அமைக்க கவர்னர் பிரபுபடும்பாடு கொஞ்சநஞ்சமல்ல. இதற்காகவேண்டியே சட்டமெம்பர் வேலையை கையில் கெட்டியாய் வைத்துக்கொண்டு, மந்திரி சபையை உறுதியாக்குகிறவர்களுக்கு கொடுப்பதாய் ஆசைகாட்டிவருகின்றார். சட்டமெம்பர் வேலை பார்ப்பனரல்லாதாருக்கு கொடுப்பதானால் மந்திரிகளில் ஒரு பார்ப்பனர் இருக்கவேண்டும் என்று வேலையை விட்டுப் போகும் உத்தியோகஸ்தர் சர்க்காரை மிரட்டிக் கொண்டிருக்கிறார். இதனால் வெகுபேர்களுக்கு தூக்கமேஇல்லை. வெகுபேர்களுக்கு சாப்பாடு இறக்கமே இல்லை. வெகுபேர் இளைத்துப்போய் விட்டார்கள். கடைசியாக என்ன ஆகுமோ தெரியவில்லை. இவற்றுள் ஜஸ்டிஸ் கக்ஷிக்காரர் கோயமுத்தூர் தீர்மானத்தை மதித்து அதை மீறக்கூடாது என்றுசொல்லி மந்திரி வேலையை உதைத்துத்தள்ளி வந்திருப்பதானது ஒரு விசேஷம் என்று சொல்லலாம். மறுபடியும் மந்திரி வேலை ஒப்புக் கொள்ளுவதானால் வேறொரு மகாநாடுகூட்டி அதற்கு தகுந்த காரணங்களைக்காட்டி பொது ஜனங்களுக்கு எடுத்துச் சொல்லி அவர்கள் சம்மதம் பெறாமல் மந்திரி வேலை ஒப்புகொள்ளுவார்களேயானால்காங்கிரஸ்காரர்களுக்கும ஜஸ்டிஸ் கக்ஷியாருக்கும்யாதொரு வித்தியாசமும் இல்லாமல்போவதோடு இரண்டுகக்ஷியாருக்கும்நாணயம்கிடையாதுஎன்றும் சமயம்போல மக்களை ஏமாற்றுகின்றவர்கள் என்றும் பொது ஜனங்கள் சொல்லிவிடுவார்கள் என்று எச்சரிக்கை செய்கின்றோம்.

ண்டிருக்கும் ஆசாமிகள் பார்ப்பனப் பிரசாரங்கள் செய்யும் முட்டாள் தனத்திற்கு நாம் என்ன சமாதானம் செய்து கொள்ளக்கூடும். பார்ப்பனரல்லாத அரசர்களில் பெரும் பகுதியார் பார்ப்பனர்களுக்கு பிள்ளையாய் பிறக்க கருதுகிறார்களே யொழிய பார்ப்பன மதக் கொடுமையில் தமிழ் மக்கள் அனுபவிக்கும் இழிவைப்பற்றி கருதுகிறார்களா என்று பார்த்தால் அதுவும் ஒரு சிறிதும் இல்லை.

பார்ப்பனரல்லாத ஜமீன்தார்கள், பிரபுக்கள், லேவாதேவிக்காரர்கள், வியாபாரிகள் என்போர்களோ ஏழைகளை வஞ்சித்து பட்னிபோட்டு ஏமாற்றி கொள்ளையடித்து பல லக்ஷக்கணக்கான சொத்துக்களைச் சேர்த்து குட்டிச்சுவர்களாக விளங்கும் கோவில்களைக் கட்டுவதும்? அங்கு பார்ப்பனத் திருவிழா செய்வதும் பார்ப்பன மதபிரசார பள்ளிக்கூடங்கள் வேதபாடசாலைகள் கட்டுவதும், பார்ப்பனர்கள் சாப்பிட சத்திரங்கள் கட்டுவதுமான கொடுமைகளை செய்வதற்காகவே தங்கள் பணங்களை உபயோகிக்கின்றார்கள். பார்ப்பனரல்லாத உத்தியோகஸ்தர்களோ தங்கள் செல்வாக்கு முழுவதையும் பார்ப்பனநன்மைக்கே உபயோகிக்கிறார்கள், இல்லாவிட்டால் அவர்களுடைய உத்தியோகத்திற்கும் வாழ்வுக்கும் ஆபத்தாய் முடிந்துவிடுகின்றது. பார்ப்பனரல்லாத சனியாசிகளின் சங்கதி சொல்லவே வேண்டியதில்லை என்னலாம். சுருங்கக்கூறினால் இயற்கைக்கு விரோதமான இன்பத்தை அனுபவிப்பதே அவர்களது தபசாகிவிட்டது. இனி மீதி இருக்கும், பாமர மக்களோ மேல்கண்ட பெரிய ஆசாமிகள் என்பவர்கள் நடப்பதைப் பார்த்து அவர்களைப் பின்பற்றி மேலும் மேலும் தங்களை உயர்ந்த ஜாதியான் என்றும் பக்திவான் என்றும் "சனாதன இந்து" என்றும் சொல்லிக்கொள்வதற்கே ஆசைப்பட்டு விபூதியையும் நாமத்தையும் பூசிக்கொள்ளுவதும யாத்திரையும் சடங்கும செய்வதுமான வாழ்க்கையிலேயே தமது சம்பாதனையை கூடப் போடுவதுமாய் இருக்கின்றார்களே யொழிய ஐயோ பாவம்! மனிதத்தன்மை இன்னது என்பதைப்பற்றி ஒரு சிறு கவலையும் இல்லாதவர்களாய் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள். இந்த நிலையில் தமிழ் மக்களின் சுயமரியாதை எங்கே இருக்கின்றது? எப்பொழுதுவரும் என்பதைப்பற்றி சற்று யோசித்துப் பாருங்கள். நேயர்களே!

உங்கள் மனம் பதற வில்லையா? உங்கள் அறிவு வெட்கப்படவில்லையா? நீங்களும் மக்கள் என்று எண்ணிக்கொள்ள உங்கள் எண்ணம் இடம் கொடுக்கின்றதா? உலகத்தில் மானமற்ற மக்கள், ஈனம் உற்ற மக்கள், சுயமரியாதை இன்னதென்று உணராத மக்கள் என்பவர்கள் எங்கிருக்கின்றார்கள்? அவர்கள் யார்? என்பதை சற்று நிதானமாய் தேடிப்பார்த்தால் உங்களைத் தவிர வேறுயாரையாவது கண்டு பிடிப்பீர்களா? போதும் போதும் இனியாவது உங்கள் முயற்சியை சற்று சுயமரியாதைப் பக்கம் திருப்புங்கள். தேசிய நரகத்தில் அழுந்தாதீர்கள் கடைந்தெடுத்த அயோக்கியர்களுக்கும துரோகிகளுக்கும் ஈனவயிறு பிழைப்புக்காரருக்கும அடிமைகளுக்கும அதை விட்டுவிடுங்கள். தமிழ்த் தாயின் மானத்தைக் காப்பாற்ற முன்வாருங்கள்.

சமீப காலத்தில் நடைபெற வேண்டிய சுயமரியாதை சத்தியாக்கிரகத்திற்கு வரிந்து கட்டி முன் நில்லுங்கள். உங்கள் விண்ணப்பங்களில் உங்கள் ரத்தத்தைக்கொண்டு கையெழுத்துச் செய்து அனுப்புங்கள். உங்கள சொத்துக்கள் என்பதில் ஒரு பகுதியை இப்போதே ஒதுக்கிவைத்து விடுங்கள் புரட்டுப்பிரசாரங்களை வெறுத்துதள்ளி பாமர மக்களுக்கு உண்மை இன்னது போலி இன்னது சத்தியம் இன்னது பொய் இன்னது என்று உணரும்படி செய்யுங்கள் சுயமரியாதைக்கு உழைக்கும் உண்மைப் பத்திரிகைகளை எல்லாத் தமிழ் மக்களும் படிக்கும்படி செயயுங்கள் இனி உறங்காதீர்கள் பார்ப்பனர்களின் மதத்தின் மூலமாவது புராணங்கள் மூலமாகவாவது அதில் உழலும் பண்டிதர்கள மூலமாகவாவது அரசியல் பார்ப்பனரல்லாதார்கள் மூலமாகவாவது தமிழ் மக்கள் தலையெடுக்கக்கூடும் என்றோ அல்லது சுயமரியாதை அடையகூடும் என்றோ நினைப்பதை அடியோடு மறந்து விடுங்கள், மறந்து விடுங்கள்,

சங்கீதமும் பார்ப்பனீயமும்.

சென்னை சங்கீத மகாநாட்டில் பார்ப்பனரல்லாத சங்கீத வித்வான் ஸ்ரீமான் காஞ்சிபுரம் கி. சுப்பிரமணிய பிள்ளை அவர்கள் விஷயத்தில் பார்ப்பனர்கள் எவ்வளவு நாணயக்குறைவாயும் குற்றமாயும் நடந்து கொண்டிருக்கின்றார்கள் என்பதை மற்றொரு பக்கத்தில் பிரசுரித்திருக்கும் நிருபத்தால் அறியலாம். இவற்றை நமது பார்ப்பனரல்லாத பிரபுக்கள் சற்றும் லக்ஷியம் செய்யாமல் பார்ப்பனரல்லாத வித்வான்கள் எவ்வளவு பாண்டித்ய முடையவர்களாயிருந்தாலும் அதை லக்ஷியம் செய்யாமல் பார்ப்பனர்கள் என்கின்றதற்காகவே அவர்களை ஆதரிக்க முற்படுகிறார்கள். நமது நாட்டுப் பிரபுக்களின் முட்டாள் தனத்திற்கு இதைவிட வேறு ஆதாரம் வேண்டியதில்லை என்பதே நமது அபிப்பிராயம். அன்றியும் பார்ப்பனரல்லாத வித்வான்களும் தங்கள் சுயமரியாதையைப் பற்றி ஒரு சிறிதும் கவலையில்லாமல் பார்ப்பன வித்வான்கள் என்பவர்கள் எவ்வளவு குறைவுபடுத்தினாலும் லக்ஷியம், செய்யாமல் சுவாமிகளே! என்று வாயைப் பொத்தி முதுகை வளைத்துக் கட்டிக்கொண்டு அவர்கள் பின் தொடருகின்றார்களே யொழிய மானத்துடன் வாழ ஒருப்படுவது அருமையாய் இருக்கின்றது. இவைகளை அனுசரித்தே ஒவ்வொரு ஊரிலும் பார்பபனரல்லாத சங்கீத சமாஜம் ஏற்பட வேண்டும் என்றும், அங்கெல்லாம் பார்ப்பனரல்லாத வித்வான்களை ஆதரிக்க வேண்டுமென்றும் பல தடவைகள் சொல்லியும் எழுதியும் வந்திருக்கின்றோம். பெரும்பாலும் இதை உத்தேசித்தே கோவையிலும் முதல் முதலாக ஒரு சங்கீத சபை ஏற்படுத்தியும் இருக்கின்றார்கள். மற்ற இடங்களும் இதை கவனித்து நடக்குமா?

சூழ்ச்சியும் ஏமாற்றமும்.

திருவண்ணாமலை கோயில் வழக்கு ஆர்க்யுமெண்டிற்காக ஸ்ரீமான் ஏ. ராமசாமி முதலியார் வரப்போகிறார் என்று திருவண்ணாமலை பொது ஜனங்களும் முனிசிபாலிட்டியாரும் ஸ்ரீ முதலியாருக்கு பல வரவேற்புகளும் மீட்டிங்குகளும் ஏற்பாடு செய்திருந்தார்கள். இதை பொறுக்காத பார்ப்பனர்கள் இந்த பொது ஜனங்கள் ஏமாற்றமடையட்டும் என்கின்ற எண்ணத்தின் பேரிலும் ஸ்ரீ முதலியாருக்கு இவ்வளவு வரவேற்பா என்கின்ற பொறாமையின் பேரிலும் ஸ்ரீ முதலியார் அன்று திருவண்ணாமலைக்கு வராமல் இருக்கும்படி செய்யவேண்டுமெனக் கருதி, டிப்டி கலக்டர் கச்சேரியில் கோயில் கேசை திருவண்ணாமலை மெஜிஸ்ட்றேட்டிடமிருந்து மாற்றவேணடுமென்பதாக ஒரு விண்ணப்பம் போட்டு கேஸ் விசாரணையை நிறுத்தும்படி உத்திரவு வாங்கிவிட்டார்கள். நல்லவேளையாய் இந்த உத்திரவு போய்ச் சேருவதற்கு முன்பாகவே ஸ்ரீமான்கள் ராமசாமி முதலியாரும் கண்ணப்பரும் புறப்பட்டுவிட்டதால் கிரமப்படி எல்லா வரவேற்புகளும் மீட்டிங்குகளும் வெகு ஆடம்பரமாகவே நடந்துவிட்டன. பார்ப்பனர்கள் தங்கள் சூழ்ச்சியின் பயனாய் எதிர்பார்த்த காரியம் ஏமாற்றமடைந்து விட்டதால் பிறகு மாற்று விண்ணப்பத்தைப்பற்றி கவலை எடுத்துக்கொள்ள வில்லை. ஏனெனில் மாற்றுவதற்கு போதுமான காரணம் இல்லையென்று தெரிந்தே விஷமஞ் செய்யக் கருதி டிப்டி கலக்டர் பார்ப்பனராயிருப்பதால் உத்திரவு கிடைத்துவிடுமென்று நினைத்து போட்டார்களானதால் உத்திரவு கிடைத்தும் உத்தேசித்த காரியம் நிறைவேறாமற் போய் விட்டது.

மற்றபடி கேசின் ஆர்க்யுமெண்டு திருவண்ணாமலையிலேயே நடக்கும். ஸ்ரீமான் முதலியாரும் போவார் என்றே தெரிகின்றது.

அருப்புக்கோட்டையில் பார்ப்பனத் தொல்லை.

அருப்புக்கோட்டையில் சில பார்ப்பனர்கள் தொல்லை விளைவித்து வருவதாக தெரிகின்றது. 7, 8 பார்ப்பனரல்லாத வாலிபர்கள்மீது போலீசார் நடவடிக்கை எடுத்துக்கொண்டதாகவும் அரஸ்ட் செய்து ஜெயிலில் வைத்து ஜாமீனில் விட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. இதுவும் திருவண்ணாமலைக் கேசுபோலவே. இந்தக் கேசும் பார்ப்பனர்களிடம் நடக்கக்கூடாது என்று விண்ணப்பம் போடவேண்டிய நிலைக்கு வரும் போல் தெரிகின்றது. அந்த ஊரில பார்ப்பனரல்லாத வக்கீல்கள் இல்லையாதலால் மதுரையிலிருந்து யாராவது பார்ப்பனரல்லாத வக்கீல் போகவேண்டியிருப்பதையும் தெரிவித்துக் கொள்வதோடு இந்த கேசின் செலவுக்காக திருவண்ணாமலை கேசு செலவுக்கு பொதுஜனங்கள் உதவியது போலவே உதவவேண்டும் என்று அப்பீல் செய்துக் கொள்ளுகிறோம்.

'இஸ்லாமிய ஊழியன்'

ஒத்துழையாமைக்காலத்தில் இருமுறை சிறைசென்று பலவருஷம் சிறைவாசம் செய்த தேசபக்தர் திண்டுக்கல் ஜனாப் வி. கே. தங்கமீரான் சாயபு அவர்கள் "இஸ்லாமிய ஊழியன்" என்ற தமிழ்வாரப பத்திரிகை யொன்று ஆரம்பிக்கப் போவதாய் நாம் தெரிவிக்கப் பட்டிருக்கிறபடியால் மேற்படி பத்திரிகையை நாம் ஆவலோடு எதிர்பார்ப்பதுடன் பொது ஜனங்கள் ஆதரவளிப்பார்கள் என்றும் நம்புகிறேன்.

விருதுநகர ராவ்பகதூர் ரத்னசாமி நாடார் வாசகசாலை 10 ம் ஆண்டு விழா.

இவ்விழா 19—2—28 மாலை 4 மணிக்கு ஸ்ரீமான் ஜியார்ஜ் ஜோசப் எம், ஏ. பார் அட்-லா அவர்கள் தலைமையில் வாசகசாலையின் முன் அமைத்துள்ள சிங்காரக் கொட்டகையில் நடைபெறும். பாளையங்கோட்டைக் கல்லூரி தமிழாசிரியர் பண்டித டி. மாசிலாமணி நாடார், தூத்துகுடி கலாசாலை தமிழாசிரியர் ஸ்ரீ அருள் தங்கையா தூத்துக்குடி ஸ்ரீ மாசிலாமணி பிள்ளை மதுரை ஸ்ரீ எஸ். சோமசுந்தர பாரதி M. A. B. L திருநெல்வேலி ஸ்ரீ பொ. திருகூடசுந்தரம் பிள்ளை M. A. B. L, முதலியவர்கள் சொற்பொழிவு நிகழ்த்துவார்கள.

கோவைத் தேவாங்கச் சிறுவர் சபை கோயமுத்தூர்,

இச்சபையின் முதலாவதாண்டு நிறைவு விழா 18—2—28 ஞாயிற்றுக்கிழமை கோவை ஸ்ரீ சாரதா பெண் பாடசாலையின் கண் நடைபெற்றது அது காலை சேலம் பிரபல வழக்கறிஞர் மகா-ா-ஸ்ரீ S C வெங்கடப்ப செட்டியார் அவர்கள் B A B L தலைமை வகித்தார்-

காரியதரிசி,

8-ம் பக்கத் தொடர்ச்சி.

யின் ஊளைக் கூக்குரலன்றோ? பார்ப்பனர்கட்கு உத்தியோகம் கிடைப்பதாயிருந்தால் ஆமா சாமி! போடுவதும், பார்ப்பனருக்கு கிடைப்பதற்கு தருணம் இல்லையாயின் அந்த உத்தியோகமே வீண் செலவு என்பதும் அப்பொழுது ஏழை மக்கள் வரிப்பணம் போகின்றதேயென்று நீலி அழுகை அழுவதும் அயோக்கியத்தனமல்லவா என்று கேட்கின்றோம். அழுதால் எப்பொழுதும் ஒரே அழுகை அழவேண்டும் அப்படியின்றிப் பார்பபனருக்கு உததியோகம கிடைப்பதாய் இருந்தால் ஒரு அழுகை, பார்ப்பனரல்லாதாருககு உத்தியோகம கிடைப்பதாய் இருந்தால் மற்றொரு நீலி அழுகைஇனி இது செல்லாது என்றுபார்ப்பனர்கட்குஎச்சரிகை செய்கின்றோம், பார்ம்பனரை நம்புங்காலம் இப்பொழுது மலையேறிவிட்டது. 'தி.ன்'

இரங்கூன் தனவணிக வாலிபர் இரண்டாவது மகாநாடு

இம்மகாநாட்டின் வரவேற்புத்தலைவர் திருவாளர் இராமன் செட்டியார் அவர்களின் வரவேற்புப்பிரசங்கமும் தலைவர் திருவாளர் அ. வெ. தியாகராஜா அவர்கள் தலைமை முகவுரையும் வரப்பெற்றோம். அவைகளில் தனவணிகர்களுக்கான பல அரிய வுரைகள் மலிந்து கிடக்கின்றன. அவைகளில் சிலவற்றைமட்டும் இங்கு குறிப்பிடுகிறோம்.

"........இளம் கைம்பெண்களின் நிலை அந்தோ! அவர்களை மணப்பதற்கு முற்படுபவர்கள் நமது குலத்து வீரராவார்கள். இப்பாழும் குலத்தில் ஏன் பிறந்தோம் என்று நினைந்து நினைந்து அவர்கள் உள்ளம் குழையாமற் செய்வது உங்கள் கடன்..."

"...மற்றொரு பெரும் பிரச்னை மனைவியை வெளி நாட்டிற்கு உடனழைத்துச் செல்லல். மனைவியுடன் கூட வாழல் வேண்டுமென வாலிபர்களாகிய நீங்கள் கொண்டுள்ள பேரவா பளிங்குக் கற்போலத் தெளிவாய் விளங்குகிறது. அவ்வுணர்ச்சி இயற்கையுணர்ச்சி; தெய்விக உணர்ச்சி. அதைக் குலைப்பது கொடுமை கொடுமை..."

"...கேவலம் பொருளே நமது குறிக்கோளன்று. பொருள் பெருக்குவது மனைவி, மக்கள், சுற்றத்தார், நாட்டார் இன்புறுவதற்குத் தானே.. பொருள் பெருக்குவதிலேயே நம்மவர்கள் தங்கள் காலமெல்லாம் போக்கின் மனைவி மக்களுடன் இல்லறம் நடத்தி இன்புறுவது எக்காலம்?"

"...தீண்டாமை இந்து மதத்தைத் தாழ்மைப்படுத்துவது. அதைச் சீக்கிரம் நாட்டைவிட்டுத் துரத்தல் வேண்டும். இந்து மதத்தில் பிறந்த ஒவ்வொருவருக்கும் கோவில்களிலும் பொதுவிடங்களிலும் சம உரிமையிருத்தல் வேண்டும். பிறப்பினுல் உயர்வு தாழ்வு கற்பித்தல் கூடாது"

"...தேடிச் சோறு நிதந்தின்று, பல சின்னஞ் சிறு கதைகள் பேசி, மனம் வாடித் துன்ப மிகவுழன்று, பிறர்வாடப் பல செயல்கள் செய்து, நரை கூடிக் கிழப்பருவமெய்தி, கொடுங்கூற்றுக்கிரையெனப் பின் மாயும், பல வீண் மனிதர்களைப்போல் நீங்கள் வாழ விரும்புகின்றீர்களா? நீங்கள் உலகத்தில் வந்து போனதற்கு உங்கள் நாட்டுச் சரித்திரத்தில் சில முத்திரைகள் வைக்க விரும்புகிறீர்களா?"

இன்னும் கல்வி, தொழில் முதலியவைகளை ஆதரித்தும், சுபாசுப காலங்களில் செய்யும் ஆடம்பரச் செலவுகளைக் கண்டித்தும் பல அரிய மொழிகள் மிளிர்கின்றன.

இவைகளை தனவணிகரேயன்றி நம் நாட்டார் அனைவருமே ஏற்று அதன்படி யொழுக வேண்டுமென்று நாமும் கேட்டுக் கொள்ளுகிறோம்.

---

24 மணி நேரத்தில் குணம்.
எங்கள் டாக்டர் வி. ஜி. என் ரிங்குவாம்லோஷன் உபயோகிப்பதினுல் படை, காரகப்படை எச்சத்தளிம்பு மற்ற எவ்வித சர்ம வியாதிகள் யாவும் 24மணிக்குள் நீங்கும். பெட்டி1க்கு அணா10
எஸ். ஸி. ஆர். பகவான் அண்டு கம்பேனி.
மிண்டு பில்டிங், மதராஸ்.

நோட்டீஸ்.
15, 20 வருஷங்கள் சென்ற வெள்ளை, வெட்டை, நீடித்த கிராணி, அதிசாரம் வயிற்றுப் போக்கு இவற்றை அதி ஆச்சரியமாகக் குணப்படுத்துகிறோம். நேரிலும் தபால் மூலமாகவும் மருந்து பெற்றுக்கொள்ளலாம், வியாதி விபரத்துடன் ஒரு அணு ஸ்டாம்பு வைத்து எழுதவும். டாக்டர் ஆர், சேஷன் எல். எம், எஸ்(ஹோம்யோ கல்கத்தா) ஸ்ரீரங்கம் போஸ்டு, திருச்சி.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!!
புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.
முத்துமாமா.
நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதும்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் 4½ அணு ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.
வாஸன் புஸ்தகசாலை,
97, அண்ணாபிள்ளைத் தெரு, மதராஸ்

ஆநந்த குணபோதினி.
இரண்டாம் வருடம்.
இது போன்ற நவீன மாதாந்த சஞ்சிகை. இது வரை வெளிவரவில்லை. இது அபூர்வமும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத சஞ்சிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் களிப்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் பக்தி போதனைகளே. யாவும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000—சந்தாதார்கள்உள்ளது. வருட சந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரி இனும். இது பெரிய ஆஸ்தி. உடனே எழுதுங்கள்.
'ஆநந்த குண போதினி' ஆபீஸ்
302, தங்கசாலை வீதி, மதராஸ்.

ஞான உதயம்.
ஆயத்தம், சொற்பம்,, முந்துங்கள்,,,
(இது ஓர் அநுதின தியானம்)
பக்தர் அங்கீகரித்தது.
பாலர்முதல் விருத்தர்வரை சகலரும் தியானித்து தெய்வ கிருபா கடாக்ஷத்தைப் பெறலாம், பக்திரச இனியவாக்கியங்களாலானது. பெருந்துக்கங்களை மாற்றியது. இதன் பலன் ஒன்றாய் அனுப்புவோம். வெள்ளை திக்கார்டில் சுத்தமாய் சித்திர வர்ண அழகாய் 9 X 6. அங், அளவுள்ளது, 1, கார்டு விலை, 0—4—0, செலவு 0—3—0. 5, க்கு 1 கமிஷன். முன்பணமும் தபால் லேபில்களும் அனுப்பலாம். விலாசம்
கா. மதுரம் சந்தோஷம் (உபா)
கட்டளை, பாலாமடை போஸ்டு
திருநெல்வேலி ஜில்லா.

சிரிப்பு! ஓயா சிரிப்பு!!
முத்துமாமா.
இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் எப்போதும் சிரிப்பீர்கள் வேண்டுவோர் காலரை அணு ஸ்டாம்புஅனுப்பவும்.
S. C. R. பகவான் அண்டு கம்பெனி
மிண்டு பில்டிங்கு, மதராஸ்.

பட்டுக்கோட்டையில் பார்ப்பனியமும் புரோகிதமும் ஒழிந்த சடங்கு

அரிசிக்காரத்தெருவிலிருக்கும் பிரபல கண்டிராக்டரும் 'திராவிடன்' சந்தாதாரருமான வி. சிதம்பரம் பிள்ளை அவர்கள் தை மாதம் 15ம் நாள் சனிக்கிழமை ராத்திரி சுமார் ஒரு மணிக்கு ஆண்டவன் அருள் நிழலை அடைந்தார். அவருடைய 16-ம் நாள் கிரிகையாகிய கருமாதி சடங்கை மாசி திங்கள் முதல் நாள் 13-2-28 தேதியில் பஞ்சாங்கப் பார்ப்பனரை அறவே ஒழித்து நமது இளவிரத்தக்குமரனும் வி. சிதம்பரம் பிள்ளை குமாரர்களுமான திரு சுப்பையா பிள்ளையும் திரு சோமசுந்தரமும் மற்றுமுள்ளவர்களும் ஏகமனதுடன் பிராமணியமே கூடாதென கருதி திருவாரூர் திரு ராசு தேசிகரை கொண்டு தமிழ் முறைப்படி சடங்கை நடப்பித்தார்கள்.

நமது இளஞ்சிங்கம் 22 வயதுடைய சுப்பையா பிள்ளையும் 14 வயதுள்ள சோமசுந்தரத்தையும் விட்டுப் பிரிந்த அன்னவர் தந்தையாரியன் ஆத்மா சாந்தியடையுமாறு இறைவனடியைவேண்டி 'தேன்' 'குடி அரசு'க்கும் திராவிடனுக்கும் அவர்களின் ஞாபகமாக ஒவ்வொருவருக்கும் பொற்காசு அனுப்பப்பட்டது. இனிமேலாவது நமது ஊரில் நடக்கும் கல்யாணம் கருமாதி முதலான சடங்குகளுக்கு பாழும் பஞ்சாங்க பார்ப்பனரை கூப்பிட்டு அவர்களிடம் வாரி கொடுத்து அவர்தம் காலில் விழாமல் இருக்கும் படிக்கும் பார்ப்பனரல்லாதாரைக்கொண்டே நடத்திக் கொள்ளும்படிக்கும் இவ்வூர் வாசிகளை பெரிதும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்ளுகிறேன் என ஒரு நிருபர் எழுதுகிறார்.

மருங்காபுரி இலாக்கா ஒடுக்கப்பட்டவர்கள் மகாநாடு, கோயில்பட்டி.

திருச்சி ஜில்லாவைச்சேர்ந்த மருங்காபுரி ஜமீன் இலாக்காவிலுள்ள ஒடுக்கப்பட்டவர்களின் மகாநாடு 21—2—28 ல் மணப்பாறை திருவாளர் எஸ். மங்களசாமி பிள்ளையவர்கள் தலைமையில் நடைபெறும் திரு. வ. ந. நல்லான் அவர்கள் வரவேற்புத் தலைவராகும் ஒடுக்கப்பட்ட வகுப்பாரும் அவர்களது முன்னேற்றத்தில் அனுதாபம் கொண்டுள்ளவர்களும் இம்மகாநாட்டிற்கு வருமபடியாகக் கேட்டுக்கொள்ளப்படுகின்றார்கள்.

காரியதரிசி, ப. சுப்பிரமணியம்
கோயில்பட்டி மணப்பாறை.

பங்களாப்புதூரில் சுகாதார வாரக்கொண்டாட்டம்.

சென்ற 10-2-28ல் இவ்வூர் போர்டு பாடசாலை ஸ்ரீ சாரதா ஹாலில் இவ்விடத்திலுள்ள பிரபல மிராசுதாரான ஸ்ரீமான் வி. தாசப்ப கவுண்டர் அவர்களின் பொருளுதவியினால் தேகிய சுகாதார தினசரிக் கொண்டாட்டம் சிறப்பாய் நடந்தேறியது. மாணவர்கள் பந்தய விளையாட்டுகள் காலை 10 மணி வரைக்கும் நடந்தது. மாலை 2 மணிக்கு ஊர்வலம் வரப்பட்டது. பிறகு 3-30 மணிக்கு கோபி டிவிஷனல் ஆபிசர் மகா-ள-ள-ஸ்ரீ A. L. பிண்ட்டோ அவர்கள் B. A. அக்ராசனம் வகிக்க மெடிகல் ஆபிசர் மகா-ள-ள-ஸ்ரீ G. கோபாலன் L. M. P. அவர்களால் "வியாதிகள் தொடருவதற்கு முன்பே அவற்றைத் தடுக்கும் மார்க்கம்" என்பதுபற்றி பிரசங்கிக்க கோபி ஹெல்த் இன்ஸ்பெக்டர் மகா-ள-ள-ஸ்ரீ எஸ். சுப்பிரமணிய அய்யர் தமிழில் மொழி பெயர்த்தார்கள். பின்பு பாடசாலை தலைமை ஆசிரியர் ஸ்ரீமான் இராமச்சந்திரன் அவர்கள் பண்டைக் காலத்திய ஜனங்கள் தேக சுகாதாரத்துக்கான வழிகளை எவ்வாறு அநுசரித்து வந்தார்கள் என்பதுபற்றி அரியதோர் சொற்பொழிவு நிகழ்த்தினார். பிறகு பாடசாலை மாணவர்கள் ஆரோக்ய தேசம் என்னும் நாடகத்தை கஞ்சப்புளியம்பட்டி மிராசுதார் ஸ்ரீ கெ. சி. கருத்திருமகவுண்டர் அவர்கள் ஹார்மோனியம் வாசிக்க அற்புத தேகத்தோடு நடித்துக் காட்டினர். இதன் பிறகு அக்ராசனர் புகழுரை பேசி முடித்து பந்தயம் ஜெயித்த மாணவர்களுக்கு வெகுமதிகளும், ஆரோக்கியமான குழந்தைகளுக்கு வெள்ளி அரைஞாண்களும் சட்டைகளும் வழங்கினார்கள்.

இதன்மேல் ஸ்ரீமான் வி. தாசப்ப கவுண்டர் அவர்களின் வேண்டுதலுக்கிணங்கி அனைவரால் தயார் செய்விக்கப்பட்ட சிற்றுண்டி விருந்து எடுத்துக்கொண்ட பின் சந்தன தாம்பூலமும் குழந்தைகளுக்கு தின்பண்டமும் வழங்கப்பட்டன. அக்ராசனர் அவர்களுக்கு ஹாரங்கள் சமர்ப்பித்தும் இவ்வூர் மிராசுதாரும் முனிசிபு மணியகாரருமான ஸ்ரீமான் பி. ஒ. கருத்திருமகவுண்டர் அவர்களால் ஆங்கிலத்தில் வந்தனோபசாரம் கூறப்பட்டு ராஜ வாழ்த்துடன் மீட்டிங் கலைந்தது.

இரவு 7 மணிக்கு கோபி சுகாதார இன்ஸ்பெக்டர் அவர்களால் பூதக்கண்ணாடிக் காட்சி பிரசங்கம் நடந்தது.

இவ்வளவு வைபவத்துக்கும் காரணமாயிருந்த ஸ்ரீமான் வி. தாசப்ப கவுண்டர் அவர்களின் பொருளுதவி உதார குணமும் மெடிக்கல் ஆபிசர் பாடசாலை தலைமை ஆசிரியர் இவர்களுடைய ஒற்றுமையான உழைப்பும் மிகவும் கொண்டாடற்பாலது.

L. மாரப்ப கவுண்டர்

ஸ்ரீரங்கத்தில் 172-வது பிரிவு

திருச்சி செங்குந்த மாபினர் சங்கம் சீர்திருத்த விஷயமாக நிர்மான வேலை செய்து கொண்டிருக்கின்றது. ஸ்ரீரங்கத்தில் நாளை 12—2—28 ஞாயற்றுக்கிழமை பொட்டுக் கட்டின பெண்ணை ஊர்வலமாக கொண்டு போவதாக கேள்விப்பட்டு போலீசாருக்கு தெரிவித்து 172, 173 வது செக்ஷன்படி தடைப்படுத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்டிருக்கின்றார்கள். வெள்ளிக்கிழமை இரவு தாசிகள் நிறைந்துள்ள தெருவில் பொதுக்கூட்டம் ஒன்று கூடி மேற்கண்ட விதமாக செய்வதை கண்டித்தும் டாக்டர் முத்துலட்சுமி அம்மாள் மசோதாவுக்கு ஆதரவு செய்தும் நிர்மானங்கள் செய்யப்பட்டன. ஸ்ரீரங்கத்தில் இவ்வித கூட்டம் நடைபெற்றது முதல் தடவை. இதற்கு திருவாளர் ஐம்புலிங்க முதலியார் தலைமை வகித்தார். திருச்சி உறையூர் முதலான இடங்களிலிருந்து அவ்வகுப்பினர்கள் வந்து பிரசங்கம் செய்தார்கள். நிருபர்.

இனும்! 1928௵ காலண்டர்!! இனும்!!!
கட்டிவெள்ளி நகைகள் சுத்தமானவேலை.
எங்கள் கம்பெனியில் உங்களுக்கு வேண்டிய முாசுகுத்தி ஒத்தை இரட்டை கெங்காதரக்கொடி, முத்துசெயின், புதுச்சேரி புளுதண்டை, சாதாசெயின், கைகோர்வை, அரைஞக்கொடிகளும், இமிடேஷன் பட்டைசிகப்பு கம்மல் கடுக்கன், தோடு, மோதிரம், மூக்குத்தி, வகையறாக்களும், இன்னும் இதில் கண்டிராத வெள்ளி பவுன், நகைகளும ஜவுளிவகைகளும இருக்கிறது. வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் விலைவிபரம் தெரிவிக்கப்படும்.
விலாசம்
வி. ஜெ தணிகாஜலம் அண்டு கம்பெனி.
சராப் அண்டு ஜவுளி வியாபாரம், குகை, சேலம் (S India.)

இவைகளில் எது வேண்டும்?
ஜீவ வசிய பரம ரகசியம் ரூ 3—0, மணவாழ்க்கையின் மர்மங்கள் 2—4, இல்வாழ்க்கையின் இரகசியங்கள் 2—0. சதிபதிகளின் மர்மம் 1—0. ஸ்திரீ புருஷரகசியம் 1—0. கொக்கோகம் 1—0. மதனரதி ரகசியம் 1—0' ரதிமதனசிங்கார ரகசியம் 1—0. மோகனவல்லி அல்லது தாசியின் மோசம் 0-3. இன்னும் எல்லாப் புத்தகங்களும் எம்மிடம் கிடைக்கும்
சீ. டி ராஜன்.
புஸ்தக வியாபாரி,
58, முருகப்ப முதலித் தெரு, வேப்பேரி மதராஸ்.

பழனி வைத்தியர் ஆர், எம், கே,
வேலுசாமி பிள்ளை
பிப்ரவரி௴ 25-௳ சென்னைக்குப் போகிறார்.
28, 29 பிராட்வே: சென்னை.

ஏன் சத்தியாக்கிரகம் செய்தல் கூடாது?

தமிழ் நாட்டில் தமிழர்களின் கோவில்களில் தமிழர்கள் சென்று தேவ பூஜை செய்தல் கூடாதென்றும் சில தமிழ்ச் சகோதரர்கள் கோவிலுக்குள் போகவே கூடாதென்றும் தடுக்கப்பட்டிருப்பதைச் சில காலமாகத் தமிழர்கள் உணர்ந்து வருவதைக் கண்டு மிகவும் சந்தோஷப்படுகிறோம்.

மரியாதையும் யோக்கியதையும் உள்ள ஒவ்வொரு இந்தியனும் இந்த அவமானமும் வெட்கமும் மரியாதைக் குறைவுமுள்ள காரியத்தைப்பற்றித் தலைகுனிந்து துயருறாமலிருக்கமாட்டான்.

சுயமரியாதை என்ற பதத்திற்குத் தன் சொந்த நாட்டில் தன் சொந்த ஜாதியாரிடமும் வகுப்பாரிடமும் தனக்குக் கிடைக்கவேண்டிய மரியாதையை எவ்விதத்திலும் குறையாமல் அடைய வேண்டியததாகும்.

இம்மரியாதைகளில் குறைவு நேரிடும்போது அதையிழக்கும் மனித சமூகத்தின் உயிர்களும் பொருள்களும் பெரிதாகமாட்டா.

ஆகவே தென்னாட்டுத்தமிழர்கள் தங்கள் சுயமரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளவும் ஸ்தாபித்துக்கொள்ளவும் எவ்வித துன்பங்களையும் அனுபவிக்கத் தயாராக இருத்தல் அவசியமும் அவசரமும் ஆகும்.

நம்தமிழ் நாட்டுத் தேவாலயங்கள் பெரும்பாலும் நம் தமிழர்களின் தருமபரிபாலனத்திற்குட்பட்டதாக விருப்பதால் நமது முயற்சிகளையும் சுதந்தரங்களையும் தடுப்பவர்கள் நம்மவர்களாகவே இருக்கிறார்கள். இத்தடையை நீக்குவோமானால் எஞ்சியுள்ள தடை மிகவும் சொற்பமேயாகும். அதுவும் நம் அதிகாரத்திற்குட்பட்டதேயாகும்.

தமிழர்களாகிய நமக்குத்தடை புரிவது தமிழர்களே யாகையால் தடைபாதிக்கும் நிலையினதாக மாட்டாது என்பது வெளிப்படை.

தேவாலயங்களில் தமிழர்களின் சுதந்தரங்கள் இருவகைத் தாகும் அவை.—மூர்த்திகளுக்கு நாமே பூசை செய்வது ஒன்று, ஒதுக்கப்பட்டவர்களென்று நினைக்கப்படுவோர் கோவிலுக்குள் பிரவேசிப்பது மற்றொன்று. ஆக இவ்விரு கொடுமைகளும் நீக்கப்பட்டாலன்றி தமிழர்கள் தமிழ் நாட்டில் தன் மதிப்புடன் வசிப்பது சாத்தியமற்றதாகும்.

உதாரணமாக மதுரை, திருச்செந்தூர், திருநெல்வேலி, பரங்குன்றம், ஸ்ரீரங்கம், திருச்சிமலை, நாகப்பட்டணம் முதலிய சில கோவில்களை எடுத்துக்கொள்வோம். இக்கோவில்களில் மூர்த்திகளைத்தொட்டுப் பூசிக்கக் கூடாதென்று சிலரும், அவ்வாலயங்களில் நுழைதல் கூடாதென்று பலரும் தடுக்கப்பட்டிருக்கிறார்கள் அவ்வாறு தடுப்போரும் தடுப்போருக்கு உதவி செய்வோரும பெரும்பாலும் நமது பணம்படைத்த தமிழர்களேயன்றி மற்றோரன்று. சைவ உணவுள்ள சைவ வேளாளரும் மூர்த்திகளைத் தொட்டுப் பூஜை செய்தல் கூடாதென்று தடுக்கும் கொடுமையானது ஆயிரம் மைல்களுக் கப்பாலுள்ள ஆங்கிலேயர் இந்தியர்களை யாளும் பாத்தியதை தங்களுடையதேயாகும் என்று கூறும் கொடுமையினும் கொடுமையாகவிருக்கிறது.

வேசைகளாயுள்ள தாசிகளும் அவ்வேசையர்க்குப் புருடர்களாயுள்ள அர்ச்சகர்களும் பரிசுத்தமுள்ள பாமனைத்தொடப் பாத்தியம் பெற்றிருப்பதும், மேற்குலம் மேலான கொள்கைகளையுடைய மனித சமூகம் தீண்டாதாரெனப் பாவிக்கப்பட்டு அவ்வர்ச்சகர்களால் தடுக்கப்படுவதும் மனம் பொறுக்கும் நிலையினதாக மாட்டாது. இக்கொடுமைக்குக் காரணம் சாஸ்திரங்களுமல்ல, புராணங்களுமல்ல, நம் தமிழ் தரும கர்த்தர்களே யாவர்கள் என்பதை ஒவ்வொரு தமிழனும் ஞாபகத்தில் வைக்க வேண்டும்.

வடநாட்டில் காஷ்மீரம் முதல் ஜகன்னாதம் வரையிலும், நேபாளம் முதல் பம்பாய் வரையிலும் சகல கோவில்களிலும் தீர்த்தங்களிலும ஜாதி மத வேறுபாடின்றிச் சகலரும் மூர்த்திகளைத் தொட்டுக்கட்டித் தழுவி அபிஷேகம் பூஜை முதலியன செய்து வருவதை யாவரும் அறிவார்கள்.

ஸ்ரீ காசியில் ஸ்ரீ விஸ்வேஸ்வர மூர்த்தியைத் தினந்தோறும் லட்சக் கணக்கான ஜனங்கள் சுதந்தரத்துடன் தொட்டு அபிஷேகம் முதலியன செய்து பூஜித்து வருவதை இங்கு வந்து போன ஒவ்வொரு தமிழனும் அறிவான்.

இங்கு ஜாதித் துவேஷமேனும், மதத் துவேஷமேனும், மேன்மை தாழ்மையேனும் சிறிதுமில்லை.

இதே கடவுளுக்கு இதே தேசத்தில் தென்னாட்டில் இவ்வளவு வித்தியாசமும் ஓர்மையும் காட்டுவது மிகவும் அநீதியேயாகும்.

மதுரை மீனாட்சி சுந்தரேசர் ஆலயத்தில் நாடார் வகுப்பார் நுழைதல் கூடாதென்றும் திருச்செந்தூரில் வாணியர் என்ற வகுப்பார் கோவிலில் நுழையக் கூடாதென்றும் தடுக்கப்பட்டிருப்பது மிகவும் அநீதியாகும. இந்த அநீதியை இனியும் தமிழர்கள் பொறுப்பதரிது என்பதை நாம் நம்மவர்களுக்கு மட்டும் தெரிவிப்பதே போதுமானது.

ஆகவே தமிழர்களாயுள்ள தருமகர்த்தர்களின் கண்களிலிருந்து இரத்தமும் ஜலமும் கலந்து தங்கள் கோவில் தளங்களில் சிந்தும்படி நாம் நடந்துகொள்ள வேண்டும். இவ்வாறு செய்தாலொழிய நமது பிறப்புரிமையாகிற தன்மதிப்புச் சுதந்திரத்தை நாம் திரும்ப அடைய முடியாது. அதற்கு இதுவே தகுந்த காலமாகும.

சத்தியாக்கிரகப் போர்.

மதுரை போன்ற மூன்று அல்லது நான்கு ஸ்தலங்களை நாம் பொறுக்கி எடுக்க வேண்டும். தாழ்த்தப் பட்டோரும் தாழ்த்தப் படாதோருமான தமிழர்கள் அங்கங்கே பெருங்கூட்டமாக ஒன்று சேர வேண்டும். ஒவ்வொரு ஸ்தலத்திலும் சங்கங்கள் ஸ்தாபிக்க வேண்டும். கோவிலுக்குட் பிரவேசிக்கும் சத்தியாக்கிரகத்தையும் மூர்த்தியைத் தொட்டுப் பூஜை செய்யும் சத்தியாக்கிரகங்களையும் ஆரம்பித்தல் வேண்டும். கொடுமை செய்தலை நீக்கிக் கொடுமைகளைப் பொறுத்து, ஜயில் வாசம் செய்யத் துணிந்து, தருமத்தையும், மதத்தையும் மறுபடியும் ஸ்தாபிக்கவும் தன் மதிப்பை வளர்க்கவும் நாம் ஒவ்வொருவரும் பிரதிக்கினை செய்துகொள்ளல் வேண்டும்.

நமது தமிழ் தருமகர்த்தர்களின் பந்துக்களும் சகோதரர்களுமாகிய நாம் இப்போராட்டத்திற்காகப் பொறுமை எதிர்ப்பை மேற்கொண்டு ஜயில் வாசம் செய்யத் துணிவோமானால் அந்தத் தருமகர்த்தர்களின் கண்ணீரும் இரத்தமும் கலந்து தங்கள் தேவாலயக் கற்களின்மீது விழாமற் போகாது. விழவே விழும்.

நம்முடன் அவர்களும் அவர்களின் ஊழியர்களான அர்ச்சகர்களும் சமாதானத்திற்கு வருவார்கள். அப்போது தரும ஸ்தாபனத்திற்காகவும், சமத்துவத்திற்காகவும், சகோதரத்துவத்திற்காகவும் நாம் சந்தோஷமாகச் சமாதானம் செய்துகொள்ளுவோம்.

தமிழர்களின் பேராற்றல்

தமிழர்களின் பேராற்றல் இன்னமும் அழிந்து போய்விடவில்லை. தமிழர்களின் நாடிகளில் இன்னமும் தமிழ் இரத்தமே ஓடிக்கொண்டிருக்கிறது. புதுப்பிக்க வேண்டுவதொன்றே வேண்டியதாகும். தமிழ் வீரம், தமிழ்க் கலைத்திறம், தமிழர் ஊக்கம ஆகிய இவைகள் என்றும் நிலைத்திருக்க வேண்டுமாயின் தமிழர்கள் பகையை கொள்ளாது, "தன்கையே தனக்குதவி" யென்பதை யுணர்ந்து அன்பினால் தன் ஜாதியையும் தன் பகைவர்களையும் ஜெயித்தல் வேண்டும். இதற்கு தற்காலம் "சத்தியாக்கிரக" இயக்கமே சரியானதாகும். இதுவே உண்மைத் தமிழ்ப் பெரியோரின் உட்கருத்தாகும்.

வந்தேமாதரம்.

பா. ஆதிமூர்த்தி, காசி.

காந்தி ஆசிரமம், சிராவயல்.

நிறைவு விழா.

நமது காந்தி ஆசிரமத்தின் இரண்டாவதாண்டு நிறைவுவிழாவும் 'வள்ளுவர் கோவில்' திறப்புவிழாவும் திருமிகு சா. லெ. செட்டியப்பசெட்டியார் அவர்கள் தலைமையில் மாசித் திங்கள் ஐந்தாம் நாள் வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்குசிறப்பாகநடைபெற்றது. கு. கும்பலிங்கம்.

பனி! பனி! பனி!

குளிர் காலத்திற்கு அடக்கமான கம்பளிப், போர்வைகள் சுத்தமான உரோமத்தால் நம் நாட்டில் நெசவு செய்யப்பட்டவை. 6 முழ நீளம் 3 முழ அகலமும் அழகிய பல நிறங்களில் கிடைக்கும்.

நெ. 1.	6 முழ நீளம் 3 முழ அகலம்	ரூ.	15.
2.	,, ,,		12.
3.	,, ,,		10.
4.	5X2½ அகலம் ஷை		8.
கம்பளித் தொப்பி நெ. 1	உருப்படி 1-க்கு		3-8-0
ஷை 2	ஷை		2-8-0
,, 3	,,		2-0-0

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

திருச்சி தலைவர் தி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை அவர்களுக்கோர் வேண்டுகோள்.

ஐயா!

ஆணவம் கொண்ட ஆரியக் கூட்டத்தாரால் அநேக ஆண்டுகளாய் அடிமைப்பட்டுக் கிடக்கும் நமது பெருங் குடிமக்களின் பிணி நீக்குவான் வேண்டி நமதன்னைலார் வைக்கம் வீரமூர்த்திகள் நயக்குரா கொடுத்த "சுயமரியாதை" என்னும் சமய சஞ்சீவியை நமது சமூகத்தின் தமிழ் மக்களுக்கு வழங்குவான் வேண்டி சுயமரியாதைப் பெரியாரின் அடிச்சுவட்டைப் பின் பற்றி நடக்கும் பெருந்தகையாளராகிய தாங்கள் கருணைகூர்ந்து நமது வீரக் 'குடி அரசு' 'திராவிடன்' பத்திரிகை வாயிலாக முன் வெளியிட்ட 'சற்று அறிக்கை' ஒன்றைக் கண்ணுற்ற நாள் முதல் எமது கண்களுக்குவிருந்தாக கமின்ற எப்போ! எப்போ!! என எதிர்பார்த்த வண்ணமாய் எக்கங்கொண்டிருந்தோமாதலால் தமிழ் நாட்டு அடிமை வாழ்க்கையில் கிடந்துழலும் மக்களுக்குக் கட்டமேழும் புவதற்குத் தங்கள் ஜில்லாவில் நடத்தயிருக்கும் சென்னை மாகாண சுயமரியாதை மகாநாட்டை அதிவிமரிசையாக நடத்திவைப்பதற்கேற்ற பெருக்கத்தை எல்லாம் வல்ல இறைவன் தங்களுக்கு நல்குவானாகவும்.

டி. இராஜகோபாலன் பி. ஏ

திருக்கோவிலூரில் ஸ்ரீஞானியார் ஆசிரமம்

அமைப்பு- இப்பெயரிய ஆசிரமம் ஒன்று திருக்கோவிலூருக் கணித்தாய மணம்பூண்டியில் பெண்ணையாற்றின் தீரத்தில் நிகழும் பிரபவஞு வைகாசிமீ மூலநக்ஷத்திரத்தில் அமைக்கப் பெற்றுள்ளது.

நோக்கம்- பிரசாரவாயிலாகவும், பிரசுரமூலமாகவும் சமரச ஞானம், சீலசாதனையப் என்பனவாதி நன்னெறிகளைப் பரவச்செய்தல்.

அங்கம்- 1 மகாத்மா வாசகசாலை 2 வள்ளுவர் புத்தக நிலையம் 3 வள்ளலார் பிரார்த்தனாலயம் 4 சன்மார்க்க பிரசாரசபை 5 சமரச பிரசுரசங்கம் 6 தெய்வீக குருகுலம்.

தேவை இப்போழுது செய்யவேண்டிய கட்டிடத் திருப்பணிக்கும் சமீபத்தில் நடக்கவிருக்கும் சிறப்பு விழாவிற்கும் பின்னர் ஆவசியகமான பரிபால னாதிகளுக்கும் எப்போதும் நிலைநிறுத்துதற்குரிய சாசுவத நிதிக்கும் போதிய பொருள் தேவை:—

வேண்டுகோள்- கால,தேய,வர்த்தமானத்திற்கேற்ற இத்தகைய உத்தம தருமத்தில் சத்திய சிரத்தையுள்ள அன்பர்கள் அனைவரும் தங்கள் தங்களால் இயன்றதொரு பெருந்தொகையினை இப்போதே சேர்ப்பிக்கவேண்டுகை.

குறிப்பு இதுவேயுமன்றி, அபிமானிகள் மாதாந்த வருடாந்த சந்தாவாகவும் விசேஷ நாள் சம்பாவனையாகவும் ஆசிரமத்திற்கு ஆதரவாக அடிற்கண்ட விலாசமிட்டு அனுப்பிவாலாம்.

ம. ரா. குமாரசாமி, ஸ்ரீஞானியார்,
ஆசிரமம், மணம் பூண்டி,
திருக்கோவலூர் (தெ ஆ ஜில்லா)

9-ம் பதிப்பு! வெளி வந்து விட்டது 9-ம் பதிப்பு!!

ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்பக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால் பணம் பறிக்கும்பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், தோற்றதும், நற்வியாதியும் வராமையான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கப்பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள,

ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள்.

800 பக்கம் முழு காலிகோ பயிண்டிலிலை ரு. 2—0—0

வி. பி. தபால் செலவு அணா 0—8—0

தி. ஜெராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்

மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

"லையன் பிராண்ட் சுத்தமான காப்பித்தூள்"

மெஷின்களினால் தயார்செய்தது. உலகப் பிரசித்திபெற்றது.
மிக உயர்ந்தது. சுகந்த வாசனையுடையது. ருசிகரமானது.

சூபர்பைன் புளு லையன் காப்பித்தூள் 7 பவுன் டின் 1-க்கு ரூ. 10—4—0.
" 4 பவுன் டின் 1-க்கு 6—4—0. " 1 பவுன் டின் 6-க்கு 10—0—0.

வி. பி. தபால் அண்டு பாக்கிங் சார்ஜ் இஷும்.

எங்களிடம் இன்னும் பல ரகங்கள் ¼, ½, ¾, 1, 2, 4, 7, 14, 28, 56 பவுன் டின்களில் பாக்செய்து மொத்தத்திலும் சில்லரையிலும் விலை சரசமாய் கிடைக்கும். விபரங்களடங்கிய விலை ஜாப்தாவிற்கு உடனே எழுதுங்கள்.

லையன் பிராண்ட் காப்பி மான்பூ பாக்சிங் கம்பெனி,
கண்ணங் குறிச்சி P.O (சேலம் ஜில்லா).

சோதிடமா! சித்தா!!

கவிகள்நிறைந்த சர்டிபிகேட்டுகள்!!!

பால சோசியம்.

சனவான்களே மாயவரம் டவுனில் உள்ளசோதிட சாஸ்திரிகள், தர்மபுரம், திருவாடுதுறை. ஆதீன ஏஜண்டுகள், ஷைபூர் முனிசிபாலிடி மெம்பர்கள், ஜில்லா போர்டு மெம்பர்கள், மாயவரம் டவுனிலுள்ள வேண்டிய அறிஞர்களின் சர்டிபிகேட்டுகள் ஒரே ஊர் சர்டிபிகேட்டுகள் ஏராளமாகப்பெற எவராலும் முடியாது என்சர்டிபிகேட்டைப் பெறவேண்டுமானால் ஒரு அணாவுக்கு ஸ்டாம்பு அனுப்பவேண்டும். சர்டிபிகேட்டைப் பார்த்துவிட்டீர்களேயானால், என்னைப் பார்க்காமலிருக்க மாட்டீர்கள்.

ஹிப்னடிசம், மெஸ்மரிசம் முதலிய மாந்திரீகத்திற்கும் எழுதலாம்

தேசபக்த V. சுப்ரமணியன்
வள்ளலார் கோவில் மாயவரம்.

4ம் பக்கத்தொடர்ச்சி

முடைய பொருளென்று நினைத்துக்கொண்டிருக்கும் பொருள் அவர்களுடைய பொருளாகாது. ஏனெனின் அவர்கள் பொருளாயின் அதனை பிறர்க்குப் பயன்படுத்துவதுடன் தாமும் பயன் படுத்திக் கொள்வார்கள். இவ்விரண்டும் இல்லாத பொருள் எவ்வாறு ஒருவர்க்கு உரிமையாகும்? ஆகையால் பொருளுடைய காலத்தில் விருந்தினரைக் காப்பாற்றுமலிருத்தல் அறியாமையாகும். அறிஞர்கள் பொருளுடைய காலத்தில் விருந்தோம்பாமலிருக்க மாட்டார்கள். இதனை (9) பொருளுள்ள காலத்தில் பொருளில்லாமையாவது, விருந்தோம்பலை இகழும் அறியாமை. இவ்வறியாமை பேதையர்களிடமேஎன்று திருவள்ளுவர் கூறுவதனுலறியலாம். விருந்தினரை மகிழ்ச்சியடையச் செய்யும் வழி தாம் முகமலர்ச்சியுடையவராய் வரவேற்பதேயாகும். அகமலர்ச்சியுடையராயினும் முகமலர்ச்சியில்லாராயின் விருந்தினரை மகிழ்விக்க முடியாது. விருந்தினர் மிகவும் மெல்லிய தன்மையுடையவர்கள் சிறிது கடுத்த முகத்துடன் நோக்கினுல் அவர்கள் மனத்துயரடைவார்கள் மலர்களில் மிகவும் மெல்லிய மலர் அனிச்சமலர் அதனைக்கையினுலெடுத்து மூக்கினுல் முகர்ந்தால் வாடிப் போய் விடும் அதாவது கையினுல் தொட்டெடுத்து மூக்கினுல் முகர்கின்ற வரையிலும் வாடாமலிருக்கும் வலிமை பெற்ற மெல்லிய மலர் அனிச்சமலராகும் ஆனுல் விருந்தினரோ முகம் மாறுபட்டுப் பார்த்த அளவிலேயே வாடி விடுவர் இதனை (10) "அனிச்சமலர் முகர்ந்தால் வாடும் விருந்தினர் முகம்மாறு பட்டு நோக்கிய அளவிலேயே வாடுவரர்" என்று கூறுவதனுல் அறியலாம்

ஆகவே இதுகாறுங் கூறிய வாற்ருல் தமிழர்கள் விருந்தோமபுவதிற் சிறந்தவர்க ளென்றும் விருந்தோம்பலினுல் உலக மக்களை யெல்லாம் உடன் பிறந்தோராகக் கருதினரென்றும் ஏழை மக்களைக் காப்பாற்றுவதே விருந்தோம் புவதென்றும் தமிழர் வேள்வி யென்பது விருந்தோமபுதலே யென்றும் திருக்குறளின் வாயிலால் அறிகின்ருேம்

சாரதையின் தந்திரம்.

முதலிய கதைகள்

இன்பத் தமிழ் நடையில் நகைச்சுவை ததும்ப எழுதப்பட்ட எட்டு சிறு கதைகள் இந்நூலில் அடங்கியிருக்கின்றன அவை வருமாறு:- 1 சாரதையின் தந்திரம் 2 குழிப்பலம். 3 சுபத்திரையின் சகோதரன் 4. காங்கிரஸ் ஸ்பெஷலில் கோரசம்பவம் 5 தற்கொலை 6 விஷ மந்திரம் 7 நம்பர் 888. 8 கவர்னர் விஜயம் ஒவ்வொரு கதையும் ஒவ்வோர் உயரிய நோக்கத்தை உட்பொருளாகக் கொண்டது. இன்று இப்புத்தகம் ஒன்று நீங்கள் வாங்கினுல். அதற்காக உங்கள் வாணுள்முழுதும் மகிழ்ச்சி யடைவீர்கள் விலை அணு 12

'குடி அரசு'......... இது புராணக்கதையன்று ஆங்கிலத்திலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு ஆங்கில அநாசசாரங்களைப் போதிக்கும் நாவல் போன்றது மன்று தற்சமயம் நம் நாடு இருக்கும் நிலையை விளக்கி அதைச் சீர் திருத்தும் நோக்கம் கொண்டு உயர்ந்த கற்பனைகளோடு ஒவ்வொரு கதையும் இனிய தமிழில் எழுதப்பட்டிருக்கிறது.

குமரன்......... கதையின் போக்கு, தமிழின் சுவை, கொள்கைகளின் சிறப்பு ஆகிய மூன்றினையும் ஒருங்கே பெற்றுள்ள இக்கதைகளை ஒவ்வொருவரும் படிக்கவேண்டியதவசியமாகும்.

சரஸ்வதி பிரசுராலயம்,
மயிலாப்பூர், சென்னை.

இனும்! இனும்!! இனும்!!!

எங்கள் லேஹியமானது ஸ்ரீ கொக்கோக மஹாமுனிவரால் அருளிச் செய்யப் பட்டதல்லவென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனும்.

ஸ்ரீ கோக்கோக மஹா முனிவர் அருளிச்செய்த அசல்

சிந்தாமணி லேஹியம்.

(அபகாந்த செந்தூரம்)

இந்த லேகியத்தில் 196 விதக் கடைச் சரக்குகளும், வித்துகளும், யூனுனி மிஸ்ரிகளும், பொன் அம்பர், பாதம் பருப்பு, பிஸ்தா, அக்ரோட், சங்கூஜா பருப்புகளும், அவைகளுடன் மலை மூலிகைகளைக் கொண்டுவந்து இயந்திரத்தின் வாயிலாய்க் கொடுத்து அசன் மூலமாய் வரும் சஞ்சீவியின் சத்தை ஏராளமாகச் சேர்ந்து பசு நெய், பசும் பால், மலைத் தேன் முதலியனவும் உரவாக்கி, கை பாகம், செய்பாகம் தவருமல் செய்துள்ளோம். ஆகார விஷயத்தில் யாதும் நிர்ப்பந்தமில்லை. எல்லா காலத்திலும் எல்லா ஊரிலும் எந்த சீதோஷ்ண நிலைமையிலும் மேற்படி லேகிய செந்தூரத்தை சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும் வாய்க்கு அல்வாவைக் காட்டிலும் அதிக ருசியுள்ளதாயிருக்கும் என்பதையும் அறிவித்துக் கொள்ளுகிருேம். இதற்கு பத்தியம் இல்லை.

இந்த லேகிய செந்தூரத்தை சாப்பிடுவதனுல் உண்டாகும் குணங்கள்.

1. நித்திரையிலும் பெண்களோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் நினைத்தபோதும் உண்டாகும் துரிதஸ்கலிதம் என்னும் கொடிய வியாதியை தலையெடுக்கவொட்டாமல் அடித்துவிடும்.
2. தளர்ந்து திவண்டு மெதுவுபட்ட இராஜ கருவிகளாகிய நரம்புகளை முறுக்கேற்றி கெட்டிப்படுத்தி கைகால் இடுப்பு முதலியவைகளுக்கு அதிக பலத்தைக் கொடுத்து இல்லறத்தில் அபரிமிதமான பிரியத்தைத் தரும்.
3. கிழத் தன்மையைப் போக்கி இளமையைத் திருப்பித்தரும்.
4. சரீரமானது பத்தரைமாற்றுப் பசும் பொன்னைப்போல் பளபளப்பைத் தரும்.
5. ஞாபக சக்தியை அதிகப்படுத்தி இன்பரசத்தை ஊட்டும்.
6. இன்னும் மேக சம்பந்தமான குன்மங்கள், சூலை, அண்டவாதம், குடல்வாதம், ஆண், பெண் குறிகளிலுண்டாகும் மேகங்கள், பாரிசவாய்வு, சூடுவாதம், அஜீர்ணம் முதலியவையும் காற்ருய்ப் பறந்து உடம்புக்கு சுகத்தைக் கொடுக்கும்.

நண்பர்களே! இந்த லேகியமானது 50 வருட காலமாய் இந்தியா, பர்மா, சிலோன் ஐக்கிய மலாய் நாடுகள், ஜாவா, மோரீஸ், நேட்டால் முதலிய பல தேசங்களில் நிகரற்ற தென பிரசித்தி பெற்றது. நூற்றுக் கணக்கான சுதேச வைத்தியர்கள், ராஜாக்கள், ஜமீன் தார்கள், லாயர்கள், தேசாபிமானிகள், ஸ்கூல் உபாத்தியாயர்கள், வர்த்தகர்கள், தலைமை கங்காணிமார்கள் முதலிய கனதனவான்கள் நமது லேகியத்தை புசித்து ஆயிரக்கணக்கான நற் சாட்சிப் பத்திரங்கள் கொடுத்திருக்கிருர்கள்.

ஒரு மண்டலம் 48 நாள் சாப்பிடக் கூடிய லேகிய செந்தூரம் டப்பி ஒன்றுக்கு ரூபாய் 5. வி, பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் முன்பணம் அனுப்பும்போது தபாற் செலவையும் சேர்த்து அனுப்ப வேண்டுமென்று நிரம்பவும் தாழ்மையாய் கேட்டுக் கொள்ளுகிருேம். எமது விலாசம்: ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜ கட்டடம், ஜி. டி. மதருஸ்.

முந்துங்கள்! முந்துங்கள்!!

'இந்திய-மாதா'

மிஸ். காதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது தன் இந்திய—சுற்றுப்பிரயாணத்தில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் கொண்டு பெரும் பிறட்டாக நம்மையும் நம் சகோதரிகளையும் தூஷித்து எழுதியிருக்கும் புரட்டுப் புராண புஸ்தகத்தின் சுத்த மொழி பெயர்ப்பு.

இதை ஒவ்வொரு இந்தியரும் வாசித்து, அயல் நாட்டார் நம்மை எவ்வளவு இழிவுபடுத்தத் தயாராயிருக்கிருர்களென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பெரிய புஸ்தகம்உயர்ந்த பைண்டு.

புஸ்தகத்தின்பேரில் பாரத மாதாவின் படம் கண்ணைக் கவரும்படியாக பல கலர்களில் அச்சிடப் பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் பதிப்பு ரூ. 8—0—0 ஆக விற்கப்படுகிறது. தமிழர்கள் படிகக வேண்டும் என்ற உத்தேசத்துடன் அசல் விலைக்கே விற்கிருேம். முன்பணம் ரூ. 1—8—0 அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

விலை ரூ. 1—8—0.

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற்செலவு இனும்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,
Book-Depot, சென்னை.

3ம் பக்கத் தொடர்ச்சி

விட்டால் அவர் கம்பெனிக்காரும் அதற்குத்தகுந்த ஆட்களும் இருக்கின்றன. ஜட்கா வண்டி ஒற்றை மாட்டு வண்டி இதைப் பற்றி அவர்களுக்கு என்ன வேண்டியிருக்கிறது? வண்டியை எல்லாம் நிறுத்தி விட்டு கள்ளைக்குடித்து கலகம் பண்ண ஒரு அனுகூலம் உண்டானாலும் உண்டாகலாம். ஆனதால் படிக்காத ஜனங்களை ரோஷம்வரச்செய்து கள்ளைக்கொடுத்து ஆசைவார்த்தைகளை உண்டுபண்ணி அசிங்கியப்படுத்திக்கொள்ளுவதைவிட படித்தவர்கட்கும் வக்கீல்களுக்கும் தான் காங்கிரசும் அதன் தீர்மானமும் பகிஷ்காரங்களும் அதை நடத்தும் மாதிரியும் தெரியும். ஆனதால் படித்தவனே அர்த்தால் நடத்தவேண்டும். வண்டிக்காரனுக்கும் பால்காரனுக்கும் வரும் தேசாபிமானம் படித்வாசருக்கல்லவா வரவேண்டும். பின்னால் மற்ற கட்சிக்காரர்களை "பகிஷ்காரத்திற்கு விரோதமாக விருந்தவர்கள் இவர்கள். நாங்கள் அப்படியே அநேக தலைகளைச்சீவினோம் அநேகந் தலைகளை அப்படியே நிறுத்தினோம்" என்று புற்றீசல் போல வரும் வீரர்கள் இப்பொழுதே வெளியில் வந்து ரோட்டில் படுத்துக்கொள்ளட்டும். அப்பொழுதுதான் அவன் சரியான பகிஷ்காரத்தைக் காட்டினவனென்று அர்த்தம். காங்கிரஸ் தீர்மானம் பண்ணினால் அதைச்சேர்ந்தவன் அவன் சிநேகிதன் அவன் பந்து பிள்ளை குட்டி யெல்லாம் அதன் வழியே நடக்கவேண்டும். ஊரார் பிள்ளையை விட்டு ஆழம் பார்ப்பதுபோல் ஏழைக் கடைக்காரர்கள் பால்காரர்கள் வண்டிக்காரர்கள் இவர்களைச்சேர்த்து அவர்களை தொந்தரவிற்கு ஆளாக்குவது பாவம்! சுயேச்சையும் இங்கிலீஷ் தொடர்பையும் விட்டிருக்கும் காங்கிரசானது சாதாரணச்சிறு சங்கதி ஒன்றைச் சரிபண்ணிக் கொள்ளாமல் போலீசுக்கு ஓடின கதைபோல் செய்துவிடாதீர்கள்!

ஏஜண்டுகள் தேவை.

தக்க கமிஷன் கொடுக்கப்படும்.

கேட்லாக் இனாம்,

ஸ்ரீ கிருஷ்ணானந்த கௌதம பரிமளசாலை.

ஆண்மை தரும் அமிர்த ரச தாதுபுஷ்டி லேகியம், அங்க நோயகற்றும் அநுமாஞ்சனம், வாய் நாற்றமகற்றும் வாசனைப் புகையிலை, நற்சுகமளிக்கும் நறுமண சந்தனாதித் தைலம், நலம்மிகுந்த நறுமண அரைக்கீரை விதைத் தைலம், நாளுக்கு நாள் குணமளிக்கும் நறுமண கூந்தல் தைலம், பாங்குடனமைந்த வாசனைப் பாக்குத்தூள், கண்டோர் வியக்கும் கஸ்தூரி பற்பொடி. சாதுக்கள் இன்புறும் ஊதுபத்தி தினுசுகள், பூஜைக்குகந்த வாசனை தசாங்கம். தேஜஸ் கொடுக்கும் ஸ்னானப் பவுடர். யந்தகாசம் பொருந்திய நறுமண சந்தன பில்லை. சித்தமா மகிழ்விக்கும் பல அத்தர் தினுசுகள்.

அடியிற்கண்ட விலாசத்தில் கிடைக்கும்.

ஸ்ரீ கிருஷ்ணானந்த கௌதம பரிமள சாலை,
வலங்கைமான் போஸ்டு, தஞ்சை ஜில்லா.

இனாம்! **1928** இனாம்!!

தங்கள் விலாசத்தைத் தெரியப்படுத்தினால் நாங்கள் 1928௵ காலண்டரும் ஆரோக்கிய சமாசாரமும் தபால்செலவின்றித் தங்களுக்கு அனுப்புகிறோம்.

சித்த ஔஷதசாலை கம்பெனி,
போஸ்டு முல்லச்சேரி, மலபார்.

ஆயிரக்கணக்கான குஷ்டரோகிகளை குணமாக்கினவர்!
உலகப்பிரசித்திபெற்ற பரம்பரை வைத்தியர்!!
வைத்திய ஆசிரியர் பட்டம் பெற்றவர்!!!
அநேக டாக்டர்களாலும், பல பிரபுக்களாலும் நன்கு மதிக்கப்பட்டது. சகல வியாதிகளுக்கும் கைகண்ட

பழநி சி. எம். சாமி முதல் நெ.

குருதாம்பர பஸ்பம்.

இது அபார சக்தி வாய்ந்தது. குஷ்டம், மேகம், ரணம், திமிர், சூலை, கிரந்தி, மதமதப்பு, பத்துகள், சடிப்புகள், பிளவை, ஆறாத குழிப்புண், பவுத்திரம், கண்டமாலை முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். வி. பி. வேறு.

100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 50
50 வேளை ரூ. 25. ஏழைகளுக்கு பாதி விலை.

என் கடையிலிருக்கக்கூடிய ஒரு பையனுக்கு 2, 3 வருஷமாயிருந்த குஷ்டரோகப் புண்கள் எல்லாம் தங்கள் குருதாம்பர பஸ்பத்தால் பூர்ணகுணமாயிற்று.

K. K. பக்கிரி முகமது காப்பார் F. M. S. 12—8—27.

தாதுபுஷ்டிக்கு நிகாற்ற பழநி சி. எம். சாமி,

மன்மத கோலாகல குளிகை.

பரீக்ஷைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்.

தாதுபுஷ்டிக்கு இது நிகரற்றது. இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். இல் வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. 120 குளிகை விலை ரூ. 10. 60 குளிகை ரூ. 5. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2. வி. பி சார்ஜ் வேறு.

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய அபீஸர்களின் நற்சாட்சிகளையும் கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர். **C. மலையப்பசாமி.** நித்தியானந்தவைத்திய சாலை, பழனி

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி, 43 அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

சிங்காரக் குழந்தை அல்லது சித்திரக் கள்ளன்.

இதில் சிங்காரக் குழந்தையின் சாமார்த்தியமும் சமயத்திற்கேற்ற நடிப்பும், வீரச் செய்கைகளும். தாசி வலையில் சிக்கிய தன் தகப்பனாரை மீட்பதும், தகப்பனும் பிள்ளையும் தங்கள் சாமர்த்தியத்தைப் பரீக்ஷிப்பதும், தகப்பனார் ஆபத்தில் சிக்கி இறப்பதும், இவனை பிடிக்க முயல்வதும். அரசனை ஏமாற்றிப் பகிரங்கமாய் தன் தகப்பனுடைய ஈமக் கடன்களை முடிப்பதும், கடைசியில் அரசன் மகளையே மணம்புரிந்து அரசு புரிவதும் படிக்கப்படிக்க ஆச்சரியத்தை உண்டாக்கும். நான்கணாவுக்கு எத்தேசத்து ஸ்டாம்பானாலும் அனுப்பி பெறலாம்.

ஞானதிருஷ்டி அல்லது திரிகால தீபம் அணா 12. எக்கேள்விக்கும் எளிதில் பதிலளிக்கும் ஆச்சரியமான ஆருட நூல். கலியின் கோலம் ஓர் பெண்மணியால் எழுதிய (துப்பறியும் நாவல்) அணா 12.

ஜானகிராம் அண்டு கம்பெனி, வெங்கட்டராமய்யர் வீதி, மதராஸ்

ரப்பர் முத்திரைகள்.

தங்களுடைய மேல் விலாசம் உள்பட தினசரி தேதி பதிக்கும் ஸ்டாம்பு ரூ 2-8-0. தனி ஸ்டாம்பு குஷன் உள்பட ரூ 2-0-0. 6 சுவாமிகளின் ஸ்டாம்புகள் ரூ2-8-0 வெள்ளி அரக்கு வீல் ரூ 2-8-0. பித்தளை அரக்கு வீல் ரூ 1-8-0

மேல்கண்ட ஸ்டாம்புகளுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 10x12 பால சுப்பிரமணியர் படம் இனாமாக அனுப்பப்படும்

M. K. SAWMY & CO
Engravers & Rubber Stamp Makers,
Late of Spencer & Co Ltd
Sawmy Naicken Street, Mount Road, P. O. MADRAS

சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் பொட்டோ கார்டுகள் படுக்கையறையைச்சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் கிளேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரேஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை. எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய ஷை கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

தி: கிருஷ்ணா ஏஜன்சி,
26, வெள்ளாளத் தெரு, புரசபாக்கம், மதராஸ்

மின்சார ரசம்.

சகல வியாதிகளுக்கும் தேவாமிர்தம் போன்றது

உள்ளுக்கும் மேலுக்கும் உபயோகிக்கலாம்.

பத்தியமில்லை! மின்சார ரசம்.

இதற்கு இயற்கையாகவே ஒருவித மின்சார சக்தியுண்டு ஒவ்வொரு குடும்பத்திற்கும் இன்றியமையாத பொக்கிஷம், மனிதன் தலைமுதல் கால் வரையில் வரும் எல்லா ரோகங்களுக்கும் தேவாமிருதம் போன்றதென்பது ஜகத் பிரசித்தம். பலரின் அநுபவம். கைகண்ட மருந்து.

அநுபானமில்லை! மின்சார ரசம்.

துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக் கணக்கில் குணமடையலாம். எவ்வித ஆபத்துக்கும் மின்சார ரசம் உதவும். டாக்டர்களை தேட வேண்டியதில்லை. உங்கள் காலத்தையும் சிரமத்தையும், பணத்தையும் மிச்சப்படுத்தும். ஆயிரக்கணக்கான நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.

REGISTERED TRADE MARK MINSARA RASAM

எச்சரிக்கை:- ரிஜிஸ்டரான டிரேட்மார்க்

உண்மை யறிய ஒரே முறை பரீக்ஷியுங்கள்! உங்களை ஆச்சரியமுறச் செய்யும்!

கேட்லாக் இனாம். இன்றைக்கே எழுதுங்கள்.

ஒரு புட்டியின் விலை ரூ. 2. தபாற் செலவு வேறு.

விலாசம்:- **மின்சார ரசம் கம்பெனி Ltd., சேலம்.**

மதுரையில் இதன் முக்கிய வியாபாரிகள் } மேசர்ஸ். T. N. சோக்கலிங்கம் பிள்ளை & சன்ஸ். இங்கிலீஷ் மருந்து ஷாப், வடக்குசித்திரை வீதி, மதுரை.

அறிக்கை.

ஜவுளி ஜரிகை வியாபாரிகளுக்கு

எங்களிடம் பிரான்சி 8 லடி ரங்குள்ள ஜரிகை மார்க்குகளும் பாம்பே குவாலிடி 8 லடி ரங்கு சரிகை மார்க்குகளும் சூரத்பட்டு கயிர்கட்டின அநிக ரங்குள்ள கம்பி ரங்குகள் மார்க்குகள் தயாரிலிருக்கிறது இத்துடன் உள்ளூரில் தயாராகும்படியான ஜவுளி தினுசுகளில் வெள்ளை 100 நெம்பர் முதல் 200 நெம்பர் வரை நூல்களில் 5, 6 முழம் சதுரம் ஜரிகை ருமால்களும் ஷை நெம்பர்களில் 2½ முழம் அகலம் 6 முழம் பலவிதமான நவீன கொடி பேட் ரகங்களில் ஜரிகை துப்பட்டாக்களும் தனிப்பட்டும், பட்டும் நூலும் கலந்த பலவிதமான இங்கிலீஷ் பேன்ஸி சிகப்பு ரோஸ் கலர்களில் 5 அகலம் 18 முழம் நீளம் பலவிதமான பேட்கரையும் ஜரிகை முந்தாணியுள்ள சேலை ரகங்களும் ஷை கண்ட ரகங்களில் 6 முழம் ரவிக்கை தினுசுகளும் பேட்டா தினுசுகளும் தயாரிலிருப்பதால் தேவையுள்ளவர்கள் எழுதினால் விலை ஜாப்தா அனுப்பப்படும்.

சி. லிங்கி செட்டி எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம், கோயமுத்தூர்.

டிடக்டாவ்ஸ் அல்லது துப்பு இரகசியம் அறியும் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவனை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.



இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்.

பெண்களுக்கு அழகு.

உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட், கருப்பு, கெம்பு, ஸநப் கலர்கள், கெட்டிச்சாயம். பளபளப்பான வசீகரத் தோற்ற முள்ளது.

18 மு. x 48 இஞ்சு கலர் புடவை ரூ. 4—4—0
ஷை சுன்னடி ,, ரூ. 4-12—0
18 மு. x 44 இஞ்சு கலர் புடவை ரூ. 3—8—0
ஷை சுன்னடி ,, ரூ. 3-12—0

புதிய ஜவுளி கேடலாக் இனாம்!

T'e Madura Oriental Trading Co,.
Laxmi Cloth Store, MADURA.

அநேக காட்சிகளில் போன், வெள்ளி மேடல்கள் பெற்ற

விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி, கேட்லாக் இனாம். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள்:— 20 சாம்பிள் பாக்கெட் ரூ. 2. 10 பாக்கெட் 1—4. நாட்டுக் காய்கறி 20 பாக்கெட் ரூ. 2—8. ச. கொ. இ. காதர்மீரா சாயபு,
ஹெட்கர்சரி தோட்டம், சேலம்.

மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ஸு ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மென்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினியரிங்வொர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

1928 1928

இந்துசமயக் காலண்டர்

ஒரே காலண்டரில் அழகான 14 படங்களுள்ளது!
ஒவ்வொரு படமும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும்
தத்துவங்களை விளக்கிக் காட்டுவது.
நேர்த்தியான ஆர்ட் பேப்பரில் கண்ணாடி போடத் தகுந்ததாய்
அச்சிடப்பட்டுள்ளது.

இக்காலண்டரில் அடங்கியுள்ள 14 படங்களின் விவரம்:—

1 திருமகள்
2 கலைமகள்
3 ஆண்டாள் சூடிப்பார்த்தல்
4 உமை சிவலிங்கத்தைத் தழுவியிருத்தல்
5 பார்வதி பரமேஸ்வரன்
6 மகாவிஷ்ணு
7 ஷண்முகம்
8 பாலகிருஷ்ணன்
9 இராதாகிருஷ்ணன்
10 சிவபெருமான் கங்கையைத் தரித்தல்
11 முருகன் சிவபெருமானுக்கு உபதேசித்தல்
12 காளிங்கமர்த்தனம்
13 துருவன் அருள்பெறுதல்
14 ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

விலை அணா 8. தபாற்கூலி வேறு.

இம்பீரியல் டிரேடிங் கம்பெனி,

5, 5, பைகிராப்ட் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.